உ

கடவுள் துணை.

சிவசுப்பிரமணியர்

மணம்புரிந்த

வள்ளியம்மை நாடகம்

மதுரைஜில்லா

எட்டியாபுரம் சமஸ்தான வித்துவான்

கடிகைமுத்துசாமிப்புலவர்

மாணாக்கராகிய

முத்துவீரக் கவிஞரால்

இயற்றப்பட்டது.

—(*)—

இஃது

தி-தியாகராய சுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

அமரம்பேடு

இரத்தின முதலியார்

சகோதரர்

அ - கிருஷ்ணசாமிமுதலியாரது

கிருபாலக்ஷ்மிவிலாச அச்சுகூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

MADRAS

1893

உ

கணபதிதுணை.

விளம்பறம்

இதனால் யாவருக்கும் தெரிவிப்பது யாதெனில், சென்னப்பட்டணம் பெத்துநாயக்கன்பேட்டைமுல்லா சாயபு வீதிக்கடுத்த தாண்டவராயப்பிள்ளை தெருவில் வடவண்டைவாடை (௰௭) வது கதவிலக்கமுள்ளவீட்டில் ஸ்தாபித்திருக்கும் ☞ அமரம்பேடு. இரத்தின முதலியார்சகோதரர் அ-கிருஷ்ணசாமிமுதலியார் அவர்களது கிருபாலக்ஷ்மிவிலாச அச்சுக்கூடத்தில் நானாவித தமிழ், தெலுங்கு, கிரந்தம், துலுக்கு, முதலானபுத்தகங்களும், வைத்திய சாஸ்திரங்களும், ஜோசியங்களும், நூதனமான ஜாவளிகளும் இன்னும்தேவையான புத்தகங்களும் சரசமானவிலைக்கு ஷையாரிடத்தில் வேண்டியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு.

☞ அ-கிருஷ்ணசாமிமுதலியார்.

உ

கடவுள் துணை.

வள்ளியம்மை நாடகம்.

விநாயகர் துதி—வெண்பா.

திங்களணிசெஞ்சடையன் செல்வனைவேயிலகுந்
துங்கனைங்கரன்றனை யேதுதித்துப்—பொங்கமுடன்
வள்ளியம்மைநாடகத்தை மானிலத்தியம்புதற்குக்
கள்ளமிலாக்கணபதிதாள் காப்பு.

இதுவுமது - விருத்தம்.

மதுராசத்தமிழ்தழைத்து விளைந்தநாடு
வளம்பெருகுங்கழுகுமலை தன்னில்வாழும்
சதிர்பெருகுமந்த்ரசடாட் சரகுமாரன்
சண்முகவேள்மணந்தவள்ளி சரிதைதன்னை
விதிமுறைநூல்தெரிந்திசை நாடகமாய்ப்பாடி
மேதினியெலாந்துதித்து விளங்கவேண்டி
அதிகமதமொழுகுதந்தி முகத்தோன்றுந்தி
ஐங்கரவிநாயகன்பொன் னடிகாப்பாமே.

முருகர் துதி-விருத்தம்.

சீருலவும்பங்கயப்பூ மாதுசேர்ந்து
செழித்துவளம் பொருந்திவளர் சிவசம்பாதி
தாருலவுஞானசிவ சுப்ரமண்யர்
தழுவிமணம்புணர்ந்த சவுந்தரவிலாச
வாருலவுகொங்கைமின்னாள் வள்ளியம்மை
மகிமைபெருநாடகத்தை வளமாய்க்கூறக்
காருலவுங்கழுகுமலை தன்னில்வாழும்
காங்கேயனிருபதத்தைக் கருத்தில்வைப்பாம்.

சிவன்-உமையவள் துதி-விருத்தம்.

ததிக்குதவும்புண்ணிய சகாயனெங்கள்
சம்பாதிகழுகுமலை தன்னில்வாழுங்
கதிக்கடவுள்குருபரசண் முகக்குமார
கந்தவேள்புணர்ந்த வள்ளிக்கனியைவெள்ளை
மதிக்குநிகர்முகம்விளங்கும் விழியாள்சுந்தர
வையகத்தோர்புகழ்ந்திட நாடகமாய்ப்பாடித்
துதிக்கமதிமுடிக்குஞ் சடையோன்ஞான
சுந்தரசம்புவினுயர் பதந்துதிப்பாம்.

அவையடக்கம் - விருத்தம்.

கஞ்சமலர்த்தடஞ்சூழுஞ் சிவசம்பாதி
கடவுள்சம்புலிங்கர்மனங் கனிந்துமேவும்
கொஞ்சுகிளிமொழியகி லாண்டவடன்பாலன்
குழந்தைவடிவேலன்மணம் புணர்ந்துமாதி
வஞ்சிகுறவள்ளிநா டகம்யான்பாட
வையகத்திற்கற்றறிந்தோர் சூரவோர்மூத்தோர்
மிஞ்சுதமிழ்ப்புலவரிதிற் பிழைகண்டாலும்
வேலர்சரித்திரமென்றே விளம்புவாரோ.

இதுவுமது,

திருவளர்தாரணவருடமகரமாதஞ்
சிறந்தவெள்ளிரோகணிநட்சத்திரத்தில்
கருணைமுருகனைப்பணியுங்கந்தசாமி
கவிஞனிடபுத்திரன்சம்பன்னன்மேன்மை
குருமுனிக்குநிகர்கடிகை முத்துசாமி
குருவினுபதேசத்துவீரப்பேந்த்ரன்
பருவமதன்வள்ளிநாடகத்தைநன்றாய்ப்
பாடினன்சோபனங்கொண்டாடினனே,

விநாயகர்வருகிற-பொதுவிருத்தம்.

சொற்பொருட்குதவுஞான சுந்தரர்க்குமாரன்மேவும்
அற்புதக்கனியாம்வள்ளி யம்மைநாடகங்கொண்டாடப்
பொற்பதவரத்தான்நீறு பொருந்துமைங்கரத்தான்தெய்வ
கற்பகமுகத்தான்மிருந்திக் கணபதிதோன்றினரோ.

விநாயகர்-வருகிற-தரு-இ-ம-புன்னாகவராளி-ஆதிதாளம்.

விநாயகர்தோன்றினரோ மந்திர விநாயகர்தோன்றினரோ

நாயகனன்பர் சகாயனெனும்வாசன்
நேயன்கணபதி மாயன்மருமகனென்னும் விநாய

ஐந்துமணிபுயத்தான் விகசித தொந்திபெரும்வயற்றான்
தந்தியினதுமுகத்தான் வீதி மச்சந்தியுறுஞ்சுகத்தான்
விந்தைவிகசிதந்த்ரமிகுமதஞ்சிந்தபபுளகிதமந்த்ரகிர்பாகர விநாய

தேவர்பணியும்வாசன் கைலை மகாதேவரருளுநேசன்
பூவிலுபதேசன் தமிழுக்கு நாவுதந்திடுமீசன்
தேவியாம்வல்லபையைமேவியவல்லபன் மூவுலகுதனிலுலாவியசெல்வ

வெள்ளிமலையின்வேடர் உதவிய வள்ளியின்கதைபாட
தெள்ளியதமிழ்நாடகந்துதுயர் தள்ளியேநடந்தோட
வெள்ளைக்கிரணாகதி பிள்ளைக்கிணைமருப்பு
வெள்ளையரசடிப் பிள்ளைக்கணபதி விநாயக

குருக்கள் வருகிற பொதுவிருத்தம்.

காங்கேயன்கழுகுமலைக் கந்தவேளைக்
கலந்தவள்ளித்தாயினிட கதைக்குமேன்மை
யோங்கியமூலப்பொருளாய் வந்தென்னுவி
லுதவுகணபதியெனுநம் பிள்ளையார்க்கு
மாங்கனியும்பொரிகடலை பழந்தேங்காயும்
மாலையுஞ்சந்தணதூபதீபமுங்கை
தாங்கிமெள்ளநடந்துமந்திர வேதஞ்சொல்லிச்
சரவணபட்டருஞ்சபையிற் றன்வந்தாரே.

குருக்கள்-வருகிற-தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

சோதியாம்வெண்மைவிபூதியும்பூசி சுகந்தபரிமளமுகந்துமேசாதியின்முறையாய், வேதங்கவோதுஞ் சரவணப்பட்டருந் தோன்றினர் வாத்தியமுழங்க, நைவேத்யங்கொண்டு மடித்தசோமனுமுடித்தியே சாத்திரம்பொய்யாமல், தோத்திரஞ்செய்யுஞ் சரவணபட்டருந்தோன்றினர்மூஷிகவாகனமோதகஅஸ்தனும்,போதக்கணபதிநாதனுக்கே தாசனென்றேசிவபூசைகள்செய்யும் சரவணப்பட்டருந்தோன்றினர்.

குருக்கள்சொல்-ஸ்லோகம.

சுக்லாம்பரதரம்விஷ்ணு சசிவர்ணம்சதுர்புஜம் பிரசன்னவதனந்தியாயே சர்வவிக்கினோபசாந்தயே.

விநாயகர் அர்ச்சனை வசனம்.

ஓம்கஜமுகாயநமா: ஓம்லம்போதராயநமா: ஓம்விகடாயநமா: ஓம்விக்னவிநாயகாயநமா: ஓம்கணாதிபதேநமா: ஓம்காமாட்சிசுதாயநமா: ஓம்சாமளவர்ணாயநமா: ஓம்சங்குசக்ராயநமா: ஓம்பிரணவசொரூபாயநமா: ஓம்மூலாதாரபீடாயநமா: ஓம்முத்திசொரூபாயநமா: ஓம்விபூதிநானாவிதபரிமளபுட்பதூபதீபநைவேத்தியந் தாம்பூலஞ்சமாப்பயாமி.

கட்டியக்காரன் வருகிற பொதுவிருத்தம்.

சட்டமிட்டாடித்தோகை தனைவிரித்திசையாய்க்கூவி
வட்டமிட்டுலாவும்புள்ளி மயில்மிசையேறிமுன்னங்
கொட்டமிட்டசுரரைவென்ற குமறவேள்கதைக்குநன்றாய்
கட்டுமெட்டாகப்பாடிக் கட்டியக்காரன்வந்தான்

கட்டியக்காரன்வருகிற-தரு-இ-ம்-மோகனம்-அடதாளம்.

வந்திரவெண்ணீரணிந்துவல்லபஞ்சொல்லத்துணிந்து
வந்தனைநாடிப்பணிந்துகட்டியக்காரனுந் தோன்றினான்

திலக்கமாய்சிங்காரப்பொட்டு சுந்தரநிஜாருந்தொட்டு
மிலக்கமில்லாதமெட்டுகட்டியக்காரனுந் தோன்றினான்

ஓங்கிமீசைமுறுக்கி ஒன்றலறைக்கல்பிருக்கி
காக்குச்சைபிறுக்கி கட்டியக்காரன் — தோன்றினன்

பழைமைக்கதைகள்பேசி பருத்தமந்திரவாள்வீசி
கலவைச்சவ்வாதுபூசிக் கட்டியக்காரன் — தோன்றினன்

கட்டியக்காரன்சொல் பொதுவிருத்தம்.

வின்றுபுகழ்கழுகுமலைதன்னில்வாழும் வேளர்சிவசுப்ரமண்யகுமாரன்கந்தன், புள்ளிமயிலேறியெழுபுவியைக்காக்கும் பூரணசெவ்வேள்முருகன்பொருந்துகாட்டில், வெள்ளிமலைச்சிற்றாருக்குடிசில்வாழும் வேடுவர்கள்வாழ்குன்றக்குறவர்கோமான், வளவெனப் பெயர்படைத்தநம்பிராஜன் வளமைபெறுதிருக்கொலுவில் வருகின்றாரே.

வசனம.

அகோதெப்படியென்றால் இந்தப்படிக்குகழுகாசலசுப்பிரமண்யக்கடவுள் பொருந்தியிருக்குமகாட்டில் வேழ்விமலைசிற்றாறைச்சேர்ந்தகாட்டில் வேடர்வில்லியர் குறவர்களுக்கு இராஜாதி இராஜனாகிய நம்பிமகாராஜன் கொலுவுக்குவருகிறவிதம எப்படியென்றால்.

நம்பிராஜன்-வருகிற-தரு-இ-ம்-கியால்-ஆதிதாளம்.

சோதிவைடூரியக்கோமேதக — மிலங்க
 சொர்ணமணிமகுடமுடிமின்னியே — துலங்க
தாதுலவும்மார்பில்முத்தாவடங் — குலுங்க
 தாசரதிதாசன்போல்நம்பி — ராஜனும்வந்தானே

அம்புவில்லுத்தாணிரமுங்கொம்புகளு — மெடுத்து
 ஆக்கிரமமாகவெகுபராக்கிரமமுந் — தொடுத்து
கும்புபெருமவேடுவரைக்கூட்டிவலுக் — கொடுத்து
 குரிசில்நம்பிராஜேந்திரன் — விரைவுடன்வந்தானே

பளபளென்னச்சரிகையங்கிபட்டைநடுக் — கட்டும்
 பதித்தமுத்துகடுக்கனுடும்பரந்தபுய — மெட்டும்
களபமணம்பொருந்துந்துகில்கலவைமலரிப் — பட்டும்
 காசினிபோர்புகழுநம்பி — ராஜனும்வந்தானே

ஓலியமுத்தொழுகியபற்காவியொளி — தெரிய
 உரமுறுஞ்சிங்கமிவனென்றுலகமெங்கு — மரிய
தாவுமயிலேறிடுஞ்சண்முகனுக் — குரிய
 தாசன்விசுவாசன்நம்பி — ராஜனும்வந்தானே

தங்கநிலையங்கிதொட்டுத்தொங்கல்முரு — கலிக்க
 சந்தனஞ்சவ்வாதன்னிக்துசிந்தூரமு — மணிக்க
மங்களகல்யாணமறைவேதியரைப் — பலிக்க
 வாசவிசுவாசனம்பி — ராஜனும்வந்தானே

இராஜன்சொல் போற்றிவிருத்தம்.

வேதமாய்முடிவாய்ச்சோதி விண்ணொளிர்நாமாகி
நாதமாய்விந்துமாகி ஞாலத்துயிர்களாகி
பூதமுமைந்துமாகிப் புலனுமாய்ப்பொருளுமாகித்
தீதிலாகினைநவிசன சேயனேச்செவ்வேளேபோற்றி.

இதுவுமது-விருத்தம்.

கனையென்றுகைபோற்கூறுங் கட்டியக்காரனேகேளாய்
சுமாதிக்கிரதத்தாள்மலை சுந்தரிபெண்ணென்றேத்திய
முகமதிகரத்தாள்கங்கை போகினிப்பெண்ணுள்தன்னை
மகிமைசேர்கொலுமுன்பாக மகிழ்ந்திங்கழைத்துவாராய்.

வசனம்.

அகோவாரும் கட்டியக்காரா நமதுசபைக்கு எனதுசுயபத்தினியாகிய கங்கைபோகினிப்பெண்ணை அதிசீக்கிரமாக அழைத்துக்கொண்டுவாரும்பிள்ளாய். (கட்டி-வ) அப்படியே அழைத்துவருகிறேனையா சுவாமி.

கட்டியக்காரன் கங்கைபோகினிக்குச் சொல்விருத்தம்.

கங்கைதென்றேவக்கட்டியன் களிர்மதிதவழுமாடத்
தங்குராக்குழலாள்கங்கை பதங்களைப்பணிந்துபோற்றி
இங்கினிதுமமைமின்கோ னுவர்கொலுக்கழையுமென்றார்
பொங்கியேவாருமென்ன விரைந்தவள்வருகின்றாளே.

வசனம்.

சரணஞ்சரணம்மாதாவே நமது இராஜாதி இராஜனாகிய நம்பிமகாராஜன் கொலுவிற்கு தங்களை அதிசீக்கிரமாக அழைத்துவரச்சொன்னார் வாரும்மாதாவே. (கங்கை-வசனம்) நல்லது அப்படியே வருகிறேன் நடவும்பிள்ளாய்.

பொது-விருத்தம்.

கங்கைசூழ்வனஞ்சேர்வெள்ளிக் கைலைமாமலையிலுள்ள
சிங்கவேடவர்கள்கோமான் சிறுகுடிநம்பிராஜன்
மங்கைமனைவியான வஞ்சரஞ்சிதவிஸ்தார
கங்கைபோகினிப்பெண்வந்து கலமுடன்தோன்றினாளே.

கங்கைபோகினி வருகிற-தரு-இ-ம்-புன்னுகவராளி-ஆதிதாளம்.

கொலுவில்
கங்கைபோகினிவந்தாள்
கங்கைபோகினியும்வந்தாள்
மங்கைமொழிபேசி — மாதுநன்விசுவாசி கங்கை
கல்யாணைப்
செங்கல்பகக்குழ்டி
பெண்களுடனேகூடி
உத்திதத்தமிழ்பாடி — உத்தமலக்தேடி கங்கை

குந்தளவோலையிலங்க முத்துமணிக்
கோர்வைத்தாவடந்துலங்க
சுந்தரமுகமிலங்க காலிற்றண்டை துலங்க நங்கை

அன்னம்போல்நடைவழுசி மங்கைக்
காசிபோல்மொழிமிஞ்சி
கன்னமாருடன்கொஞ்சிக் காமரதியாம்வஞ்சி நங்கை

கஸ்தூரிமஞ்சள்பூசி மணிக்கடக
கையில்வளைகள்வீசி
விஸ்தாரமாகப்பேசி விளங்குமகராசி நங்கை

கண்ணுவோர்க்குபகாரி சிந்தூர்நம்பி
ராஜன்மேவியபாரி
பண்ணியபூசிதக்காரி புத்திமிலாதகாரி நங்கை

நங்கைமோகினி சொல்விருத்தம்.

வேடர்கொன்றவர்கோமானே வெள்ளியங்கிரிவாழ்வேந்தே
ஆடவர்க்கரசேயென்மே லருமைக்காதலனேகேளீர்
கூடியும்நமக்கேயோர்பெண் குழந்தையில்லாதபாக்கியம்
தேடியும்பலனொன்றில்லை செய்தவக்குறையோமன்னா.

வசனம்.

சரணஞ்சரண மென்பிராணநாதா தாங்கள் என்னை கொலுவிற்கு வருமபடிசெய்த காரணமென்ன நல்லது இப்போது நமதுகுறைதீரும்பொருட்டு ஒருபெண்குழந்தை யில்லாதபாக்கியம ஒருபாக்கியமே என்னசெய்வேன் பிராணநாதா.

நங்கைமோகினிபுலம்பல் கண்ணிகள்

இ-ம்-முகாரி-தாளம்-துருவம்.

விள்ளும்புகழ்நாட்டவரே-என்னை-மேவுகின்ற வாடவரே
வெள்ளிவரைதன்னவரே-என்னை-மேவுகின்ற மன்னவரே
எப்படிவாழ்ந்தும்பெண்பிள்ளை நமக்கில்லையேஇதென்ன கொள்ளை
கைப்பிடித்தவேளைதானோ பெண்கண்மணியில்லாத தேனே
வேலவனன்னாட்டிற்சேர்ந்தும் நான்வெள்ளியங்கிரியில் வாழ்ந்துமே
பாலனுமில்லாதிருக்க ஐயோ பண்டுவிதிப்படி தானோ
சத்தகன்னிமாரேதாயே மலை சாத்தாவேதப் பிராணனே
புத்திரியைவேண்டிநாங்கள் இப்போ புலம்புவதுங் கேட்கொணாதோ
வல்லமைதெய்வமேகேளீர் நல்ல வனபபேச்சி பத்ரகாளி
இப்பொருபெண்குழந்தை இப்போ தெங்களுக்கரு ளொணாதோ
வையகத்துமிருகங்களை நாங்கள் வாய்கட்டினதோஷந் தானோ
கையினைத்துமுத்தமிடப் பெண் கண்மணியில்லாத தேனே
தென்குறிஞ்சிவேலவனே வளர்திருவருளைக் காவலனே
அன்புடனோர்பெணகுழர்தை எனக்கருமையா யருளொணாதோ

பொது-சந்தவிருத்தம்.

சித்ரநங்கைமோகினிப்பெண் சிந்தைகூர்ந்து
தொண்டுநம்பிராசனொடு மொழிந்தேயோர்பெண்
புத்ரியில்லையினிநாமென் செய்வோமென்று
புலம்புவதைமனதில்நன்றாய்ப் பொருந்தக்கேட்டு
மெத்தமனமகிழ்ந்துதர்ம தெய்வமாக
விசையவள்ளிமலையினெட்டுந் திசையைக்காக்கும்
சத்தகன்னிமார்கணங்கை துயரந்தீர்க்க
தாயெனவேதயவாகத் தாம்வந்தாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் நம்பிராஜனிடத்தில் நங்கைமோகினிபெண்கு ழந்தையில்லையென்று புலம்பும்போது அவ்விடம்வள்ளிமலையில் வாசஞ்செய்யுஞ் சத்தகன்னிகள் வருகிறவிதங்காண்க.

சத்தகன்னிகள்-வருகிற-தரு-இ-ம்-புன்னாகவராளி- ஆதிதாளம்,

கைலைமலையிற்பூங் காவிலெழுந்து
கருணைபொழியுந்தெய்வ கன்னியர்மனத்
தயவுபொருந்துந்தெய்வ மின்னார்கள்மலை
சத்தகன்னியர்வந்து தோன்றினரே
நங்கைமோகினிப்பெண் குழந்தையைவேண்டி
நம்பிராஜனுடன் புலம்பியபோது
சங்கைபொருந்துந்தெய்வ மங்கையரெனுமலை
சத்தகன்னியர்வந்து தோன்றினரே

சத்தகன்னியர்-விருத்தம்.

சேர்ந்தகன்னிமார்கள்வந்து சேவைகாட்டிச்
சித்ரநங்கைமோகினியைப் பார்த்துச்சொல்வார்
கூர்ந்துநம்மைக்குறித்துமனம் வருந்தியேபெண்
குழந்தையில்லையென்றுசொன்ன குறையைக்கேட்டு
சார்ந்துனது இருப்பிடத்தைத் தேடிவந்தோம்
சலியாதேமெலியாதே சாற்றக்கேளு
போந்துனக்குஈசர்தன் கற்பனையினாலே
புனர்த்திபொருபெண்குழந்தை யிருக்குந்தானே.

இதுவுமது,

தானேநின்வயிற்றினிற் பெண்கருவேயில்லை
சலியாதேஸதிவிதிப் படியாலிந்தக்
காணுறாவனத்தினி லிங்காளிலேமுற்
காரணத்தால்கடந்தசேதி காட்டுப்புள்ளி
மானேபோர்பெண்குழந்தை மணிபோற்பெற்று
வளரவுங்கையாலெடுத்து வளர்ப்பாயென்றே

ஞானதெய்வமங்கையர்க ளுரைத்துப்போக
ஆயிழைநங்கையயலமிழ்ந்தங் கிருக்கின்றாளே.

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் தேவகன்னிகள் நங்கைமோகினிக்குப்பெண்கு ழக்குகவருமபிதத்தைச்சொல்லி வள்ளியங்கிரியிற்சென்றபின் அவ் விடம்வனத்தில் கலைக்கோட்டுமகாமுனி வருகிறவிதங்காண்க.

கலைக்கோட்டுமகாமுனிவருகிற விருத்தம்.

தேகமெல்லாந்தவள வெண்ணீறுபூசிக்காதில்
திருக்குழைகளபூண்டுசடை முடியுங்கொண்டு
வாகுபெருங்காவிவஸ்திர மருங்கிற்சேர்த்து
மந்திரத்தாற்கட்டிய வொட்டியாணம்பூண்டு
ஆகமுறைகற்பமுறை யதுதானுண்டு
அதிகமறைகான்குமுணர்ந் தருள்சேர்ஞான
யோககலைக்கோட்டுமுனி பிரம்மைக்கயி
லூன்றினார்திருக்காவிற் றோன்றினாரே.

கலைக்கோட்டுமகாமுனிவர்-வருகிற-தரு-இ-ம்-மாஞ்சி-ஏகதாளம்.

கலைக்கோட்டுமுனிவர்வந்தார் தண்டகாரண்ணிய
கலைக்கோட்டுமுனிவர்வந்தார்.
முலைக்கோட்டுமடந்தையர் மோகவலையிற்சிக்கி
துலைகாட்டிலிருந்து மலைக்காட்டுவனந்தனில் (கலை)

மார்பில்ருத்ராக்ஷந்துலங்க கையிற்செப
மணித்தாவடமுந்துலங்க
பேர்பெறும்புலித்தோலும் பிடித்தமாத்திரைக்கோலும்
சீர்பெரும்பூணூலுஞ் சேர்க்கிரணத்தாலும் (கலை)

உச்சியிற்றிருக்கொம்பும் கலைமுகமும்
ஓய்குங்கையினிற்பிரம்பும்
மச்சிரமானதேக மானிரூபமாகவும்
இச்சையுடனேகானி லிருந்துதவங்கள்செய்யும் (கலை)

விருத்தம்.

தேனிறைக்கும்வள்ளி மலைவஞ்சிநாட்டிற்
செழித்தவெற்பில் மலைக்குறிஞ்சி நிலத்திலேதான்
கானகத்திலிருந்துகனி புசித்துலாவிக்
கதியெற்குகாயாஷதவ வேடங்கொண்டு
மோனமுற்றகலைக்கோட்டு முனிவரங்கு
முற்கதையின்படியாலே முறையாய்வேத
ஞானநிட்டைதனேநோக்கி யிருந்திடாது
நண்ணினார்யோகமதை யெண்ணினாரே.

பொது-விருத்தம்.

சின்னமுனிவரிங்கு நிலைதவிர்ந்துருகிவாடி
கன்னியராசபாசங் கருத்தினிலிருக்கும்போது
துன்னியந்தசோலைகளிற் றனித்தொருபுள்ளிமானும்
நன்னயகலையைத்தேடி நாடியும்வந்ததன்றே.

வசனம்.

இந்தப்பிரகாரம் வள்ளிமலைச்சாரலில் ஒருவனத்தில் தவஞ் செய்யவந்த கலைக்கோட்டுமகாமுனிவர் காமவிகாரங்கொண் டிருக்கும்போது அவ்விடமொரு புள்ளிமான்கலைமானைத் தேடிவருகிற விதங்காண்க,

மான்வருகிற-தரு-இ-ம-பந்துவராளி-ஆதிதாளம்.

மானும்வந்ததே புள்ளிமானும்வந்ததே
கானமிருந்தபூவனெங்கு காவலாந்தனித்திருந்த மானும்

மெய்யுறவாடி மேவியேகூடி
கைவிடாதோடிக் கலைதனைத்தேடி மானும்

வனந்தனின்மேவி வாவியுலாவி
கனிந்துசொற்றேவி கலைதனைத்தாவி மானும்

பொன்னிரமானின் புகழ்தருமேனி
உன்னியவாணி னுலாவுரக்கானில் மானும்

விருத்தம்.

விளைவுருஞ்செந்தேன் வடிந்துமலரோபூர்த்து
விரைமிகுந்தவேள்விமலைக் கருகேநின்று
குளிர்ந்தரசக்கனிபுசித்து மயல்பூரித்துக்
கொண்டுகலைக்கோட்டு முனிகண்டுமானைத்
தழுவிவிழிகெற்பமிராத் தங்காதென்றே
தகைமையினுலேகெற்பந் தாங்கிமானும்
பிறையகற்றும்வேதவிதிப் படியாலங்கோர்
பெண்குழந்தையொன்றிடவும் பெயருண்டாச்சே.

பொது-விருத்தம்.

திருண்டமதலைதனை யீன்றமானுந்
திரும்பவும்பாராமல் வனமோடிப்போகப்
பாருண்டாகியபூமா தேவிதாங்கிப்
பழுதறப்பிள்ளையைப் பாதுகாக்கும்போது
காருண்டாமவ்வள்ளி தலைக் குறவர்கூடி
கா[illegible]ல்வள்ளிக்கிழங்கெடுக்கக் கிந்தெல்லோருஞ்
சேருங்[illegible]தனைக் [illegible]
நிரைநிரையாய்க்குறத்தி குறவர்கள்வந்தாரே.

வசனம்.

ஆகோதெப்படியென்றால் கானகத்தில்வந்த புள்ளிமானைக் கலைக்கோர் மகாமுனிவர் காமவிகாரத்தால் சேர்ந்துசென்றபின் அந்தமானையிற்றிருந்த பெண்குழந்தை அவ்விடமிருக்கும்போது அங்கே வள்ளிமலைக்குறவர்களும குறத்திகளும் வள்ளிக்கிழங்கு வெட்ட வருகிறவிதங்காண்க,

குறத்திகள் குறவர்கள் வருகிற-கண்ணிகள்-இ-ம்-குறவஞ்சி-ஆதிதாளம்

குறத்திகள் குன்றவர் கானக்குறவர்களுங் கூடி மனங்
கூர்ந்துபலகிழங்குவெட்டச் சேர்ந்துவனந்தேடி
உறவுசொல்லிக்கூடிக்கூடி யொருவர்க்கொருவர்பேசி துடர்ந்
தோடியோடிக்கூடையுங்கொண் டிகர்ந்துகைகளை வீசி
குப்பல்குப்பலாய்கிழங்கிருக்குது குச்சியாலேயின்று நமது
குத்துக்கொம்புக்குநீங்கிவிடாதுதை விட்டுவிட்டங்கேநன்று
அப்பாலோடிக்கிழங்குகெல்லுவோ மதிசீக்கிரமாய்வாரும் ஐயய
ஆடியோடிச்சன்னையேசிக் கூடியேவந்துசேரும்
சிறுகிழங்கும்பிடிகிழங்குஞ் சீனிக்கிழங்கெடுத்து வேடர்
சேகரித்தவரவர்கள் கூடைகளினில்விடுத்து
வரிசையோடுபலகிழங்கும் வாய்த்துதென்றுகொண்டார் கொண்டு
வருகும்போதுவனந்தனிலே மதலைதனைக்கண்டார்
அதிசயமாய்வனத்திற்பிள்ளை யழுங்குரலுமேது அங்கே
அடுத்தடுத்துவாருங்கள் நாமறியலாமிப்போது
ஏதுவகையோவனத்திற்பிள்ளை யீன்றதுவும்யாரோ இப்போ
இக்குழந்தையைபெறிந்துவிட் டிங்கேயினைதெய்வாரோ
சிறும்புலியானைசூழச் செடிகளடரும்வனத்து ஒரு
சிறுகுழந்தையழுகழுது தியங்குதையோதனித்து
கூறுமவரியோசைபோலுங் குரலைப்பாருஞ்சனங்கள் இந்த
குழந்தையினிடவடிவுதன்னைக் கூர்ந்துபாருமினங்கள்
என்னகாரணமோவிது யாதோதெரியாதே இப்போ
இந்தவனத்திற்குழந்தை வந்ததுவுஞ்சூதோ
மின்றனையோகுழந்தையிந்த வேணில்பொறுக்காமல் பின்னும்
வீறிட்டுவீறிட்டழுகு தேறிட்டுப்பாராமல்
நாமறிந்தவிதிசயத்தை நம்பிராஜனிடத்தில் இப்போ
நலமுடனெல்லோருங்கூடிச் சொல்லுவோமிட்சணத்தில்
தாமதமில்லாமெல்லோருந் தலைச்சுமையையெடுங்கள் நல்ல
தருமவனும்நம்பிராஜன் முன்னைமேவந்திடுங்கள்

குறவர்சொல்-விருத்தம்.

நாட்டியபுகழ்சேர்நம்பி ராஜனேமிருகஞ்சூழ்ந்த
காட்டிலோரதிசமான காரணங்கண்டுவந்தோம்

சேட்டிடவேண்டும்வள்ளிக் கொடியிற்பெண்குழந்தையொன்று
தேட்டமாய்க்கூவுதையா தெரிந்திடப்பார்க்கவாரும்.

(வ-ம்) அகோவாரும் இராஜாதி ராஜனாகிய நம்பிமகாராஜனே சரவைச்சரணம் இப்போதுவனத்திற் கிழங்கெடுக்கப் போனவிடத்தில் வள்ளிக்கிழங்கெடுத்தபள்ளத்தில் சூரியன்போலே ஒருபெண்பிள்ளையழுதுக்கொண்டிருக்குது அந்தவதிசயத்தைத் தாங்கள்வந்துபார்க்கலாம் மகாராஜனே.

பொது-விருத்தம்.

புதுமைகாணவர்கள்காணிற் போய்வந்துசொல்லக்கேட்டு
அதிசயம்பார்ப்போமென்று அன்புடன்நம்பிராஜன்
ரதியெனுமொயிலொய்யார நங்கைமோகினியுங்கூட
மதிநிகர்குழந்தைகூவும் வழிதனைத்தேடிவாரார்.

வசனம்.

இந்தப்பிரகாரம் குறவர்கள்சொல்லக்கேட்டு நம்பிமகாராசனும் நங்கைமோகினியும் வனத்தில்வருகிறவித மெப்படியென்றால்.

இராசன் வனம்போகும் நொண்டிச்சிந்து
இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

நடந்தார்வனந்தேடி நம்பி
ராசனுந்தான்நங்கைமோகினியும்
மடந்தையுடன்கூடி சாவ
மல்லிகைமுல்லைமலர்சூடி
குழந்தையிருக்குமிடந் தன்னைக்
கூறென்றுகுரவர்கூட்டமுடன்
தெளிந்துநலம்பேசி நல்வி
சேஷமதாயிருக்கைவீசி
அந்தத்தலம்பார்த்து வெகு
அக்கரையாகநடக்கையிலே
விந்தைமணிபோலே பிள்ளை
வீரிட்டசத்தமும்நேரிட்டதே
வள்ளிக்கொடியிற்பெற்ற பெண்
மதலைக்குரலினைக்காதிலுற்றார்
உள்ளமகிழ்ந்துகொண்டார் அங்கே
உற்றகுழந்தையைவந்துகண்டார்

இராசன்சொல்-விருத்தம்.

வந்தநற்பிராசேந்திரன் வனத்திலுற்ற
மதலைதனைக்கண்டுமன மகிழ்ச்சிகூர்ந்து
கர்தமலர்க்குழலாளே நங்கைமாதே
கந்திகையேமின்னரசே கடவுள்செய்கை

எந்நவகையேயோவோ பெண்குழந்தைதானும்
இசைந்தமனக்குரல்கூவு கிந்தாபாரும்
சந்ததிநமக்கெனவே குனிந்தெடுத்துத்
தாங்கினான்நங்கைகையில் வாங்கினாளே.

நங்கைமோகினிசொல்-அகவற்பா-இ-ம்-மோகனம்.

மன்னனேகேளாய் மாவனந்தன்னில்
முன்னமேயாமு முறைமையதாக
குறித்துமேயோர்பெண் குழந்தையைவேண்டி
வருத்தமாய்ச்சிவனருள் வடிவேலரையுஞ்
சாவனந்தந்த கன்னிமார்தம்மையுந்
தாவியேவருந்து தாளிணைப்பணிந்து
பேருடனேழாம் பிள்ளைகளிருக்கக்
கூறியதுணைப்பெண் குழந்தைதந்திடுவாய்
என்னநான்புலம்ப வென்மொழிகேட்டு
தன்னிலேநமக்காச் சத்தகன்னியர்கள்
வந்துதானன்று வருமையைத்தீர்த்து
இந்தமாவனத்தி லீஸ்வரன்செயலால்
மான்வயிற்றினிற்பெண் மதலையுண்டாகப்
பான்மையாய்நீங்கள் பரிவுடன்காண்பீர்
எடுத்ததைவளர்ப்பீ ரெனக்கன்னிமார்கள்
கொடுத்திடும்வரங்கைக் கொண்டதாலிப்பேர்
பேணியேநமக்குப் பிரமகர்ப்பனையால்
வாணிபம்பலித்த வள்ளியின்கொடியின்
காரணமாகக் கண்மணிக்குழந்தையைப்
பூரணமாகவே பொருந்தவேகண்டோம்
ஆனதால்நமக்கு ஆரனருள்குழந்தை
தானிசமென்றும் தழுவியேயெடுத்தார்.

பொது-விருத்தம்.

அங்கம்புளிக்கவே யானந்தங்கொண்டு
அரகராசிவசிவா வென்றன்புகூர்ந்து
மங்களஞ்சேர்வேள்வி மலைநம்பிராசன்
வனத்தினிலிப்படி குழந்தைவாய்த்ததாலே
எங்களுக்குநிகரொருவ ரில்லையென்று
இலங்குமணிபோலிருக்குங் குழந்தைதன்னைத்
தங்கமெனநேமனங்குளிர்ந்து தனதுமார்பில்
தாங்கினானதிகசெல்வ மோங்கினனே.

[illegible]

குழந்தைதனையேந்திமுத்தங் கொடுத்துக்கொஞ்சி
கொங்கைபாமு நாட்டியெங்கள் குலமும்வாழ்கத்

தழைந்துவிளங்கியமதலைக் கிளியேமானே
  தங்கமேதிரவியமே தருவேதேனே
வழங்குகிளைக்குறவர்குலக் கொழுந்தேகோல
  மயிலேயென்றழைத்தந்த மானுங்கோனுஞ்
செழித்துவழிகூடிவள்ளி மலைசூழ்கின்ற
  சித்தூரில்வந்துநன்றாய்ச் செழிக்கின்றாரே.

(வ-ம்) அகோதெப்படியென்றால் இந்தப்படிக்கு நம்பிராசனும் நங்கைமோகினியும் வனத்திற்போய் வள்ளிக்கொடியிலிருந்த பெண்குழந்தையைக்கண்டெடுத்து தங்கள்சிற்றூருக்குள்வந்துசேர்ந்து குழந்தையைவளர்க்கிற விதங்காண்க,

இதுவுமது-விருத்தம்.

பவளமதியிதழ்வதனக் கிளிபோற்பேசும்
  பந்துமுலைவஞ்சியிடை நங்கைமாதும்
நவமணியின்கிரீடநம்பி ராஜன்றானும்
  நன்மைபொருமனதிலெண்ணி மகிழ்ந்தநாளில்
தவமுயலுந்தானதர்ம நன்றாய்ச்செய்து
  சார்ந்தவள்ளிக்கொடியணி லமைந்ததாலே
குவிமுலையாடனக்குவள்ளி யெனப்பேரிட்டுக்
  கூட்டுவார்தொட்டிலிற் றாலாட்டுவாரே.

நங்கைமோகினி குழந்தைக்குத் தாலாட்டுதல்

கண்ணிகள்-இ-ம்-நீலாம்புரி.

ஆரிவரோ ஆரிவரோ ஆரிவரோ ஆரிவரோ.

மானீன்றகண்மணியே வஞ்சியேதங்கப்பணியே
தேனேதிரவியமே தெள்ளமுதேயோவியமே   ஆரி
வள்ளிக்கொடிநடுவே வந்துதித்தபெண்வடிவே
விண்ணும்பசுங்கிளியே விளைந்தசெந்தேன்மொழியே   ஆரி
சோதிவைடூரியமே சொர்ணக்களஞ்சியமே
மாதேவனக்குயிலே மரகதமேபூமயிலே   ஆரி
வேழவிமலைக்கரசே மின்னேயென்பெண்ணரசே
தாழ்விலாப்பாக்கியமே சந்தானசிலாக்கியமே   ஆரி
வரிசையாயெங்களுக்கு வாய்த்தமணிவிளக்கே
திருதிலம்புகழ்ந்தகண்ணே என்மனதிற்குகந்தபெண்ணே   ஆரி
காவனத்திலேசிறந்து கற்பனையாயுற்பனமாய்
தாலிபூமேவந்தபெண்ணே தானெனக்குகந்தபெண்ணே   ஆரி
சந்தவள்ளிருவைபிறல் கன்னிமார்தன்னருளால்
வைதருநற்கனியே மகளேநீகண்வளராய்   ஆரி

பொது-விருத்தம்.

தாலாட்டிமதலைதனை நாளோர்வண்ணந்
  தான்வளர்த்துசந்தன சவ்வாதுவாசம்

நீராட்டிமைவிழிக்கு மையுந்தீட்டி
நேரிசைவெல்லசங்குமணிக் கோர்வைபூட்டி
பாராட்டிவிளையாட்டிக் கூர்மைகாட்டி
பழகுமொருவருஷத்தில் நடைப்பாகங்காட்டி
சீராட்டிக்காதுகுத்திப் பஞ்சஞ்சேர்த்துச்
சேலையிட்டுத்தக்கையிடச் செய்கின்றாரே.

இதுவுமது-விருத்தம்.

தக்கையிட்டுத்தளரவிளக் கெண்ணெயிட்டு
தங்கைகிலமிசைந்தவள்ளித் தண்டுபோல
அக்கறையரிய்க்காதுவளர்த் தன்புகூர்ந்து
அருமையொடுமணிமகரக் குழையும்பூட்டி
மைக்குழலேயெங்கள்வள்ளித் தாயேவேடர்
மலரடியைமறவாத மங்கைப்பெண்ணே
கைக்கிளியேயென்று சகலருங்கொண்டாடிக்
கண்டிடக்கண்டிடவடிவங் காட்டினாளே.

பொது-கண்ணிகள்-இ-ம-மத்தியமாவதி-ஆதிதாளம்.

வள்ளியெனுஞ்சிறியபிள்ளைபிறந்து நாலாம்
வயதில்வளர்ந்துதிரிந்த
பிள்ளைக்கிளிபோற்பேச்சு மெள்ளயிருக்கை வீசும்
பெண்ணின்பலம்பொருந்த
சந்திரமுகமுஞ்சிறுதனமுங்குறு நகையுஞ்
சாந்துகளபமணமும
கந்தமலர்க்குழலுங்கயல்விழியி னழகும்
கனியுமமிர்தகுணமும்
வஞ்சியிடையுங்கன்னிவாழைத்துடை யுங்கோல
வர்ணச்சரிகைத்துயிலும்
பஞ்சுபோல்மெல்லடியும்பாதச்செந்தா மரையும்
பாடகந்தண்டையொயிலும்
அரிவையினதுதேகஞ்சூரியப்ரகாசம் போல்
அழகுந்துலங்கமீறி
பருவம்வயதெட்டாகியுருவந்துலங்க மங்கைப்
பருவமிகுந்துதேறி
மின்னார்களுடன்கூடவள்ளியும்பாங்கி யரும்
வீதியில்விளையாட
தென்னன்மகளோ தெய்வக்கந்நியோ யிந்
செல்வியென்றுரையாட
இப்புவிதனிலிந்தவடிவழகினைப் போல
எங்கெங்குங்கிடையாதென்பா

ஒப்பில்லாவள்ளியின்ப - செப்புமொழியும் - தொண்டு
ஒடுங்கிவணங்குவீரென்பார் சொல்ல
இந்தப்படியெல்லோரும் வந்துபசாரஞ் பெண்ணுஞ்
எந்திழைவள்ளியுமகிழ்ந்தாள்
தந்தைநம்பிராசனும் நங்கைமோகினிப்
தங்களில்மெத்தப்புகழ்ந்தார்

இதுவுமது-விருத்தம்.

அருமையுடன்றாய்தகப்பன் புகழ்ந்துவாழ்த்த
அண்ணமார்மனமகிழ்ந்தே யன்புகூற
உரிமையாய்ப்பின்னுமங் குள்ளோருமவாழ்த்த
உத்தமர்களும்போற்ற வரவோரேற்ற
இருநிலமும்புகழ்மிகுந்த ராணியைப்போல்வள்ளி
இசைந்தசொர்ணக்கிளிபோலு மயிலைப்போலும்
பருவமுமும்பக்குவமா யமைந்தமாது
பாங்கிமாருடன்கூடி யிருக்கின்றாளே.

இதுவுமது-வேறு.

இருக்குநாளையிலேவள்ளிக் கியற்றுணையண்ணமாரும
பெருகியகுறவரோடு பேசுமோரிடத்திற்கூடி
மருவுலாவியபூஞ்சோலை வனத்தினிற்றினைவிளைக்க
உருக்கமாய்நினைந்தெல்லோரு முவமையாயிருக்கின்றாரே.

விருத்தம்.

விளங்கியகுறவரென்னும் வேடர்குன்றவர்கள்கூடி
தனைக்கிடைவரைப்புனத்திற் றகுந்தினைவிளைக்கவேண்டி
கிழக்கொடுதினைமாக்கொண்டு கிருபைசெய்வடிவேலர்க்கு
வழங்கியதிசையைநோக்கி வந்துபூசைகள்செய்தாரே.

இதுவுமது-விருத்தம்.

பூசைகள்செய்துவேண்டிப் புனக்குறவர்களுங்கூடி
வாசமாய்வனத்திற்சென்று வலிமைநல்லினத்தைக்கண்டு
விசிமண்வெட்டிக்கொண்டு வெட்டியேயுழுதுசெய்து
பேசியேநல்லநாளிற் பெருந்தினைவிளைக்கின்றாரே.

சந்த-விருத்தம்.

பழுதுபார்த்துத் தினைவிளைப்பெட்டியைத்
தழுவிக்கையா லெடுத்துத்தெய்வங்களைத்
தொழுதுநல்ல முதற்றன்ரப்பஞ்சையிற்
குழுவர்கூடித் தினைவிளைப்பார்களே.

குறவர்கள் தினைவிரைக்குங் கண்ணிகள்

இ-ம்-ஆனந்தபைரவி-ரூபகதாளம்.

வணக்குடனேசெந்தினைவிளைக்கக்கந்தனை வாழ்த்தியேதொழுதேத்தியே
மனத்துடனுள்ளி வளமையாய்நல்ல தினத்தில்வெள்ளிக் கிழமையில்

விளக்கவேவிளைவளர்த்திடப்புட்டி நாக்கவேமனை — குளிர்ந்திட
விளையவன்பதம்போற்றிய விளாக்கடகத்தலேயி — மேலத்திய
கருக்குழவனத்தில்மிஞ்சியே நாலுருக்கமுடைய — புஞ்சையே
சொர்ணம்விளையுங்கற்றி றாலேயில்தன்னையவிளை — தன்னையே
சரத்திறலவள்ளிலேழ்மிர்றுவி விளைத்தனர்தெய்வ — வரத்திலே
கம்பியார்தன்திருவடியால் முளைத்தாள்மாமுழுந்து — வளர்ந்ததே

பொது விருத்தம்.

வனத்தெய்வக்கன்னிமார்கள் வரந்தருந்திருவையாலுந்
தினமனமுபொழியக்கண்டு திணைமஞ்சள்முளையுங்கொண்டு
இனியமேசேர்பயிர்விளைந்து செழித்திடும்வனத்தைப்பார்த்து
மனமகிழ்வோடும்பன்றி மான்மரைசூழ்ந்ததன்றே.

வசனம்.

இந்தப்பிரகாரம் வேடர் குறவர்கள் திணைவிதைத்து பயிர்களா
கியவுடன் அந்தப்பயிரை யழிக்கும்பொருட்டு பலமிருகமும் வருகிற
விதம் எப்படியென்றால்.

மிருகங்கள் வருகிற-தரு-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

மிருகமனேகம்வந்ததே திணைபுனத்தில்
மிருகமனேகம்வந்ததே

பெரியோர்கள்சூழ்வனத்தில் வரிசைதிணைபுனத்தில்
பருவப்பயிர்ந்த சொரூபங்கண்டுபின்னந்து — மிரு

இடசாரிவலசாரி பாய்ந்துசீறி
இடிபோல்முழங்கிப்பாரிற் கடிவாய்புலிகள்மீறி — மிரு

புத்துருந்சுக்கரடி புல்வாய்மிகப்பெருகி
தத்தித்தத்திக்குதித்துத் தனிவாலதுமுறுக்கி — மிரு

வெடிவாலதுமுறுக்கி வெருவாயினம்பெருக்கி
படிமேகற்றிநெருக்கிப் பயிரைத்தின்றுசெருக்கி — மிரு

இதுவுமது விருத்தம்.

மீறியேவனத்திற்கானின மிருகங்களநேகஞ்சூழ்ந்து
சீறியேமுழங்கும்போது தெரிந்துவேடுவர்கள்கூடிக்
கூறியவேட்டைக்கொம்புங் குறித்தமாவில்லம்பேந்தி
பேரிகைமுழங்கவேட்டை பெருக்கமாயாடுவாரே.

குறவர்வேட்டையாடுகிற-தரு-இ-ம்-அடாணா-அடதாளம்.

வேட்டையாடினரே — குறவர்கூடி
வேட்டையாடினரே

கோட்டில்வலைதடிக ளீட்டியெடுத்துக்கும்பு
கூட்டியெழுந்துவெருகாட்டைவளைந்துசுற்றி — வேட்டை

மேச்சற்கலைபிடிக்க சூட்சவலையெடுத்துப்
பாச்சற்புலியைவெட்டும்பிச்சிவாளுந்தொட்டு — வேட்டை

கொம்புமல்லரிகள் பம்பைமுழக்கஞ்செய்து வேட்டை
ஆரம்பமிகுந்தெடுத்துக் கும்புகும்பாகக்கூடி
காட்டிமலைந்துவிட்டு வேட்டைமிருகங்களை வேட்டை
விட்டுயாவரேவிழக்காட்டி வெற்றியாகவே
மிறைந்தினைப்பயிரைச் சிதிக்கிளப்பவங்க வேட்டை
பாரமிருகங்களைக் கூறுபடவெருத்தி

விருத்தம்.

வேட்டைகளாடிவந்து வெற்றியாமிருக்கநாளில்
வாட்டமில்லாமலோங்கி வளர்தினைப்பொதியாய்க்கொண்டு
கூட்டியேகதிர்கள்வாங்கிக் குலைதள்ளியன்னங்கோது
நாட்டமாய்மணிபிடித்து நலமுறவிளைவுண்டாச்சே.

இதுவுமது.

மணிபிடிவிளைவுங்கண்டு மகிழ்ந்தண்ணமார்கள்சென்று
இனக்கமாய்நம்பிராசனிடத்தினில்வந்துபோற்றி
குனங்கொண்டுதினைப்புனத்தில் குடிகொண்டுகாவலாக
பணிந்தெதிர்வள்ளிசென்றாற் பலனெனப்பகர்கின்றாரே.

(வ-ம்) இந்தப்படி மிருகங்களை வேடர்வேட்டையாடி வந்த பிறகு தினைப்பயிர்களுக்கு பட்சிவராமல் வள்ளியம்மனை தினைகாக்கும்படி எழுபேர் அண்ணமார்களும் தகப்பனாகிய நம்பிராஜனுக்குச் சொல்லுகிறவிதங்காண்க.

அண்ணமார்சொல்-விருத்தம்.

பூங்குயில்மணிப்புறாவும் புராகிதமயில்களன்னந்
தாங்கும்தாக்கணாங்குருவிகாகந் தாய்தினைக்கதிர்கள்கொய்ய
ஓங்கியேவரவொட்டாம லுரிமையாக்காவல்காக்க
மாங்குயிலனையதங்கை வள்ளியையனுப்புவன்றே.

(வ-ம்) அகோவாருங்கள் எங்கள்தந்தையாகிய நம்பிமகாராசனே ஈரைந்தசரணம் இப்போது நாம்விளைந்த தினைப்புனத்தில் பட்சிமிருகசாதிகள்வந்து அழிக்காமல்காவலிருக்க எங்கள்தங்கையாகியவள்ளியம்மையை தினைப்புனங்காவல்காக்கசெய்யவேணும்எங்கள்தந்தையே.

இராஜனுக்கும்-நங்கைபுத்திரர்களுக்கும்-தர்க்கம்-தரு

இ-ம-சங்கராபரணம்-அடதாளம்.

ராசன்-நங்கைசொல்-தரு

பனத்தினில்வள்ளியைத் தினைக்கதிர்காக்கவென்ற மைந்தரோ-சும்மா
போவென்றுசொல்லவும் பொருந்துமோவென்மன மைந்தரோ

புத்திரர்சொல்-தரு.

மனதுநொந்துதினைப்புனம்வள்ளிகாக்கிலேஎன்றால்தந்தைதாயே-சும்மா
வருத்தப்பட்டதுஞ்சும்மாவிருத்தமாய்ப்போகாதோதந்தைதாயே

ராசன்-நங்கைசொல்-தரு

கண்மணியாகிய எங்கள்மணிவள்ளியை மைந்தரே இனி
காக்கப்போகச்சொன்னா லேற்குமோவுலகுக்கு மைந்தரே

புத்திரர்சொல்-தரு

தன்மையாய்த்தினைக்கதிர் தங்கைகாக்கிலையென்றால் தந்தைதாயே-நாம்
சந்திரகவேயிட்ட கதிரைக்கிளிகொய்யாதோ தந்தைதாயே

ராசன்-நங்கைசொல்-தரு

கைவிட்டுப்பிரியாதே கண்மணிவள்ளியை மைந்தரே-இனிக்
காவலுக்கனுப்பநாம் போவென்றுசொல்வோமோ மைந்தரே

புத்திரர்சொல்-தரு

மையிட்டவிழிக்குற வள்ளிகாக்கிலையென்றால் தந்தைதாயே-உங்கள்
மக்களேழுபேருக்கு ஆக்கறைதானென்ன தந்தைதாயே

இராஜன்-நங்கை-வள்ளிக்குச்சொல்-வேறு தரு

கைக்கிளியேயெங்கள் கண்மணிவள்ளிதாயே இனி
காவல்காக்கவுநீமேவச்சம்மதிப்பாய் தாயே
மைக்குழலேயெங்கள் பொற்கொடியேவள்ளிமானே அண்ணா
மார்களுரைத்திடுங்காரியங்கேளடி தேனே
அண்ணமார்வந்திங்கு சொன்னசொற்றவறாமற்றானே காட்டில்
அருந்தினைப்புனத்திற்கு வருந்தாமல்போவள்ளி மானே
எண்ணியேசொன்னேனென் திருக்கையமனையாமல் நீயே
அன்னமேதோழியர் தன்னுடன்போய்வரு வாயே

இராசனும் நங்கைசொல் விருத்தம்.

மாங்குயில்மொழியேகேளே வள்ளியேமகளேமானே
பாங்கிமார் தன்னைக்கூட்டிப் பண்புடன் துணையாய்க்கொண்டு
பூங்குயில்கிளிகொய்யாமற் புகழ்தினைப்புனத்தைநன்றாய்த்
தீங்குவாராமற்காத்து செயமுற்றுவருவாயம்மா.

(வ-ம்) ஆகோவாருமம்மா எங்கள்கண்மணியாகிய வள்ளித்தாயே இப்போதே பாங்கிமார்களைக் கூட்டிக்கொண்டு நமது தினைப்புனம் போய் மிருகசாதிகள் பட்சிகள் தினைக்கதிரைக்கொய்யாமல் காவலிருந்து கழுகுமலைகந்தர் கிருபையால் செயம்பெற்று வருவாயம்மா வள்ளித்தாயே.

வள்ளியம்மை வசனம்.

சரணஞ்சரணம் அப்படியே பழுதில்லாமற் காத்துவருகேன் தந்தைதாயே.

பொது விருத்தம்.

ஞாலமேபுகழுநம்பி ராசனுமவர்தான்பெற்ற
பாலமாதியபெண்ணாங்கை மேலேகீர்த்தியவர்நன்றாலே
சோலைசூழ்புனத்திற்காவல் காருடனிருக்கச்சொல்ல
வாலைபோல்வள்ளியம்மை வனமுடன்சேருகின்றாளே.

(வ-ம்) அதோ தெப்படியென்றால் நம்பிராஜனும் நங்கைமோகினி
யும் தினைப்புனங்காக்கச் சொன்னபடியால் வள்ளியம்மன் பாங்கிமாரு
டன் தினைப்புனங்காக்க வருகிறவிதங்காண்க.

வள்ளியம்மன் வருகிற-தரு-இ ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்.

வள்ளிநாயகியும் வந்தாள்-தினைப்புனங்காக்க
வள்ளிநாயகியும் வந்தாள்

வெள்ளியங்கிரிவேந்தன் வள்ளல்நம்பிராஜேந்திரன்
பிள்ளையாகியபசுங் கிள்ளையாகியகுற — வள்ளி

மாதாபிதாவைப்பணிந்து போய்வாரேனென்று
வாங்கிவிபூதியணிந்து
ஆதரவாகத்துணிந்து அன்னைமார்தம்மை
அனுப்பிமனதுகனிந்து
பேதாதிபேதங்கள் ஏதேனுநினையாமல்
தாதியர்கள்தன்னோடு காதலுடனேகூடி — வள்ளி

பாடகச்சிலம்புசிலம்ப-காலாழிபீலி
பாதச்சரங்கள்புலம்ப
ஆடகப்பணிகளசைய-முகந்துலங்க
அதிகநற்குணமிசைய
ஜாடையில்லங்கிதராகம் பாடிநயங்கள்தேடி
பேடைமயிர்பாக்கிய ரோடுமுறைவுகூடி — வள்ளி

காயிற்கனிகளருந்தி சாந்தாவைமலைக்
காவினையப்போற்றிவருந்தி
சேவற்குகனைப்பணிந்து நினைந்துகாக்குந்
தினைப்புனந்தேடித்தணிந்து
தாவிப்பாய்ந்தியபோடி சரசமொன்றுமென்னாமிந்
பூவைபெண்ணுகவிந்திரன் மேவிக்கதிகபோக — வள்ளி

சந்தனவனங்கடந்து நந்தவனமுந்
தாண்டிமேகன்னிடந்து
சிந்தைமகிழ்ந்துபடர்ந்து வருந்தியுந்
செண்பகவனந்துடர்ந்து
கந்தமல்லிகைச்செண்டு கையிலெடுத்துக்கொண்டு
வந்தவழிபுகன்டிவனங்கொள்கனகண்டு — வள்ளி

வஞ்சி விருத்தம்.

குறிஞ்சிதிரனைத் துமநருங்காமர்முன்
சாரியதினைப்புனந் தன்னில்வந்திடக்
[illegible]
சிரியபாணது செய்கின்றார்களே.

(வ-ம்) இந்தப்பிரகாரம் வள்ளியம்மன் பாங்கிமாரோடு தினைப்புன ங்காக்கவர அங்கே வேடர்கள் பரணைகட்டப்பட்டு வள்ளியம்மன் காவலிருக்கிறவிதம் எப்படியென்றால்,

வள்ளியம்மன்-பரண்காக்குங்-கண்ணிகள்,

இ-ம்-ஆநந்தபைரவி-ஆதிதாளம்.

செம்பவளக்கால்நாட்டி — நன்றாய்ச்
சிறந்ததவளங்களைபூட்டி
கம்மலைப்பொன்மணிநிரப்பி — அதில்
கனம்பொருந்துந்தழைபரப்பி
பருத்தகுமிழாணிவைத்து — வள்ளி
பாதம்வைககயேணிவைத்து
திருத்துங்கவண்தனைச்சேர்த்து — வள்ளி
செங்கைவிரல்தனிற்கோர்த்து
ஏணிதனிற்பாதம்வைத்து — உன்னி
ஏறவள்ளிமனதுவைதது
பேணியவள்பரணிருந்தும் — வள்ளி
பிரபலமாய்வளம்பொருந்தும்
வரிசையண்ணமார்போக — அங்கே
வள்ளியும்பாங்கியுமாக
விரைவுடனேகையிற்கவண்சேர்த்தாள் — வள்ளி
விளைந்ததினைப்புனங்காத்தாள்
திசையைநோக்கிப்பார்த்திடுவாள் — வள்ளி
தெய்வங்களைக்கும்பிடுவாள்
ஆசையாதபரனேறி — எங்கள்
அன்னைவள்ளிமனத்தேறி
பாங்கியரைப்பிரியாமல் — நெஞ்சில்
பலநினைவுங்குறியாமல்
தீங்குவரச்செய்யாமல் — கிளி
தினைக்கதிரைக்கொய்யாமல்
வீசுங்கவண்மாறாமல் — அம்மன்
வேற்றுமுகம்பாராமல்
காசலையாய்ப்பரண்மீது — நின்று
காத்தாளேகுறமாது
இ[illegible]கசைய — உன்னை
எறிந்தாளேகவ[illegible]
பருவமுயல்குழல்சரிய — வள்ளி
பண்புடனேகவணெறிய

கைவளையல்கலகலென்ன கவணெறிக்காளுடல்குலுங்க	வள்ளி
மெய்யிலிட்டபணிதுலங்க வீசுகின்றாள் கவணிலங்க	உண்டை
வஞ்சியிடைதுவளநின்றாள் மணிக்குரலாலேலாலமென்றாள்	அம்மன்
அஞ்சுகப்பெண்குரல்பாடக் அன்னங்கள்வந்திசைபாட	சேட்டு
பூங்குயில்கள்சூழ்ந்துமொய்க்க பூவைகளுந்திரிந்துமொய்க்க	புள்ளி
மாங்குயில்களிசைபாட மயிலினமாநடமாட	புள்ளி
இப்படிவள்ளியும்பெரிய ஈரேழுலோகமுமறிய	இந்த
செப்புஞ்சிலைமானுளே தினைப்புனங்காத்திருந்தாளே	அம்மன்

பொது விருத்தம்.

வாட்டமில்லாமுல்லைமல ரணிந்ததோளின்
வள்ளிதினைப்புனங்காத்து வாழுநாளில்
தேட்டமுடன்கும்பமுனி யிடத்திற்கேகிச்
சென்றுவந்துவடகயிலைத் திகிரிச்சாரில்
கூட்டமலர்காவனத்திற் கீதம்பாடி
கொண்டுசிவமாயிருந்த கோளன்யோக
நாட்டமுறுநாரதமா முனிவன்வந்து
நடிக்கின்றான்சிலசரிதை படிக்கின்றானே.

(வ-ம்) அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் தினைப்புனத்தில்வள்ளியம்மனும்பாங்கிமாருங்காத்துக்கொண்டிருக்க அவ்விடம்அகத்தியனைக்கண்டு அவ்வழியாய் நாரதமகாமுனிவருகிற விதங்காண்க,

நாரதர்-வருகிற-தரு-இ-ம்-ஆரபி-ரூபகதாளம்.

வேதகின்னயமாக விளங்குஞ்சித்த தியோக
நாதனெனுஞ்சிவயோகநாரதர்வந்து — தோன்றினார்
புலித்தோலிடையிற்போர்த்தி போதவெண்ணீருசாத்தி
வழுத்தமந்திரமேத்தி வந்துநாரதர் — தோன்றினார்
செபஞ்செய்துத்ராட்சஞ்சாத்தி சிவமந்திரந்தியானித்து
மஞ்சேர்பூங்காவனத்தில் தவநாரதர் — தோன்றினார்
மண்டலத்துள்ளோர்கள்மெள்ளக் கண்டபேருடன்சொல்ல
விண்டுவின்கீர்த்தனம்பாடி வேதநாரதர் — தோன்றினார்

விருத்தம்.

வந்திடுநாரதமுனிவர் பரண்மீதுற்ற
வள்ளிமதிவதனமுமெய் வடிவுங்கண்டு
விந்தையதியோரதியோ சீதைதானோ
மேனகையோயூர்வசியோ மின்னோபொன்னோ
இந்தவுலகினிலிவள்போ லழகுங்காணேன்
என்றுகளிகூர்ந்துபர ணெதிரேநின்று
சொந்தமென்றேபுனங்காக்கும் பெண்ணைப்பார்த்து
சூட்சமதாய்முநிவனுஞ் சொல்லுவானே.

நாரதர்சொல்-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

ஆரம்மாநீசொல்லுவாய்-தினைப்புனங் காக்கும்
அதிசயந்தனைவிள்ளுவாய்
சாரம்பொருந்துந்தமிழ் சாரந்தெரிந்தபசுந்
தங்கமேநின்கிளை யெங்கேவுன்தாய்தந்தை ஆரம்

ஆதிலட்சுமி தானோ தெய்வலோக
அயிராணியெனு மானோ
சோதியேசரஸ்வதியோ ரம்பையோவேதந்
துலங்கிய பார்வதியோ
ஏதோநின்பேர்தந்தை தாய்பேருஞ்சொல்லுவாய்
இந்தத்தினைப்புனத்தில் வந்ததெந்தவிதமோ ஆரம்

நாரதர்சொல்-வசனம்.

அகோவாருமம்மாதாயே ஆதிலட்சுமி இந்திராணி சரஸ்வதி அரம்பைகள் பார்வதி இவர்கள்போல தினைப்புனங்காத்திருக்கிறாயே யாரோ எனக்குத்தெரியவில்லை உன்பெயரும் உன்னூர்பெயரும உனதாய்தந்தைபெயருந் தெரியச்சொல்லுவாயம்மா தாயே.

வள்ளியம்மன்சொல்விருத்தம்.

சாதியோநாங்குறவர்குலந் தாய்பேர்நங்கை
தந்தைநம்பிராஜேந்திரன் யென்பேர்வள்ளி
கோதில்லாவேள்விமலை குடியாஞ்சிற்றூர்
குடியிருப்பாமெங்கள்பதி யதுவேவாசம்
நீதியுடன்றினைப்புனத்தைக் காப்பாயென்றே
நேயதந்தைதாயெனையு மனுப்பிவைத்தார்
ஓதுமென்றீர்நீர்தானே ரூர்தானேதிங்
குமதுபெயர்தானேதோ வுரைசெய்வீரோ,

(வ-ம்) அகோவாருந் தவமுனிவரோ என்னுடைய ஊர்பெயரும் தாய்தந்தைபெயரும் என்பெயருந் சொல்லச்சொன்னீரல்லவா எங்கள்ஜாதியோகுறச்சாதிநாங்கள்வாசமாயிருக்கிறதுசிற்றூர்என்தந்தை நம்பிராஜா தாய்நங்கைமோகினி என்பெயர்வள்ளி ஸ்வாமியடியாள் நீர் எவரோ எனக்குத்தங்கள்பெயரைத் தெரியச்சொல்லுமையா,

நாரதர்சொல் விருத்தம்.

பேரிசைக்குயில்கள்கூவுந் தினைப்புனவள்ளிகேளாய்
நாரதனென்பேரிந்த நாடெல்லாமறிவாரிங்கு
காரியஞ்சொல்வேனியுங் கழுகுமாமலையில்வாழுஞ்
சாருரூபன்கந்த சாமியைமணஞ்செய்வாயே.

(வ-ம்) அகோ கேளாயம்மா வள்ளித்தாயே நானே நாரதமகாமுனி என்று ஈரேழுபதினாலுலோகமுஞ் சொல்லிக்கொள்ளுவார்கள் ஆனபடியால் நான்சொல்லும்வார்த்தையை மனதிற்கொள்ளுவாய் நீ ரூபசவுந்தரியமாயிருக்கிறபடியால் கழுகாசலக்கந்தசாமியை மணஞ்செய்துக்கொண்டால் எனக்குச்சந்தோஷமாயிருக்கிறது அம்மா தாயே.

நாரதர்சொல்-கண்ணிகள்-இ-ம்-புந்நாகவராளி-அடதாளம்.

மனதுக்கிசைந்தவர்தானே குகனை
மணஞ்செய்துக்கொள்வள்ளிமானே
கனமும்பொருந்தும்வள்ளித்தாயே எங்கள்
கந்தனைமணந்துக்கொள்நீயே
கழுகுமாமலைமுருகேசன் உந்தன்
கருத்திற்குகந்தவிசுவாசன்
தழுவிக்கொண்டால்வெகுசெம்மையே கந்த
சாமிதருவார்வெகுநன்மையே
அசுரர்சமரில்வென்றவேலன் அகி
லாண்டரட்சகசிவபாலன்
வலியபனிரெண்டுகைத்தோளன் உந்தன்
மனதிற்குகந்தமணவாளன்
கலியுகத்துஞ்சிவகுமாரன் யார்க்கும்
கருணைபுரியுமுபகாரன்
சலியாமலவர்க்குச்சம்மதிப்பாய் வள்ளித்
தாயென்சொல்மனதினிற்பதிப்பாய்
வேறேபேதகம்நினையாதே வெற்றி
வேலனைச்சேர்ந்தணைமாதே
ஆரொவரோவென்றெண்ணாதே குகனை
அணைந்துக்கொள்வினைகள்நண்ணாதே
கமலச்சரவணச்சண்முகனை கூடி
கலந்துக்கொள்நல்லசேவகனை
அமரர்பணிகுழந்தைக்குகனை சேர்ந்து
அணைந்துக்கொள் குமாரதேசிகனை

வேலுண்டுவினையில்லைதானே குகனை
மேவிக்கொள்குறவள்ளித்தேனே
மேலுங்கதிதருவார்நிஜமே வடி
வேலனுமுந்தன்கைவசமே
தனித்திருப்பதுஞ்சும்மாவருத்தம் கந்த
சாமிக்குமுன்னமேபொருத்தம்
கனிக்குநிகராஞ்சுப்ரமண்யன் தன்னை
கலந்துக்கொண்டால்கோடிபுண்யம்

பொது விருத்தம்.

கவடநாரதனுரைத்த மொழியைக்கேட்டு
காதிலிருகையைவைத்துக் கருத்துவேறாய்
அவசியமாயிவ்வார்த்தை முனிவன்சயறும்
அஞ்சாமற்சொன்னானே அக்யானத்தைச்
செவிதனிலேகேட்கவுந்தான் விதியோவோகோ
சிவசிவாஹரஹரா சிவனேயென்று
குவிமுலைப்பெண் வள்ளிநாயகிவிசாரங்
கொண்டுதலைவிதியைநொந்து கூறுவாளே.

(வ-ம்) இந்தப்பிரகாரம் வள்ளிநாயகியை நாரதர்சுப்பிரமணியரை விவாகஞ்செய்துக்கொள் என்கிறதைக்கேட்டு காதிலிரண்டுகைகளை யும்வைத்து வள்ளியம்மன் புலம்புகிறவிதங்காண்க.

வள்ளியம்மன்-புலம்பல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

இந்த அக்யானவார்த்தை என்செவிகேட்கவுந்தான்
என்னவிதியோ பரம சிவனே
வந்தமுனிவனென்முன் வம்புபடப்பழிப்பா
மதியாமற்சொல்லலாச்சே சிவனேபரம சிவனே
ஆரண்யந்தனிலோர மருந்தினைக்காக்கவந்து
அவதூறுகேட்கலானேன் சிவனேபரம சிவனே
கோரணியாகமுநி கூறுதவார்த்தைதன்னைக்
கூறவுங்கேட்கலானேன் சிவனேபரம சிவனே

வள்ளியம்மன்சொல் விருத்தம.

திருமாலின்சகோதரி பார்வதிதன்சேயன்
செழித்தாறுதலத்திலுக்குஞ் சேர்ந்தசந்தன்
குருவானகுகனைமணஞ் செய்வாயென்று
குறித்துரைத்திரதாநீதி யல்லசும்மா
வெருவாயுமுலாந்திடநீர பேசவேண்டாம்
வீண்பேச்சுநாரதனே மிஞ்சியிங்கு
மறுவார்த்தைசொல்லாதே நில்லாதேபோ
வந்தவழிதிரும்பிவிடு மதியில்லானே

(வ-ம்) ஆகோவாரும் நாரதமகாமுனி ஆறுதலங்களிலும் வீற்றிருக்கும்படியாகிய சுப்பிரமணியக்கடவுளை மணஞ்செய்யும்படியாய்சொன்னீரல்லவா அப்படிக்கு நீர்சொல்வது தருமமல்ல வந்தவழியே திரும்பிப்போகலாம் நாரதமுனிவரே.

நாரதர்சொல் விருத்தம்.

பின்வருங்காரியத்தை முன்சொன்னேனென்சொற்
பிழையேமுன்சொல் பகையாளியானேன்
உன்னுடையமனதினிலேன் வீண்பொல்லாப்பு
உடையவன்வந்தாலவனபாடிம்மா
என்னையுங்கோபிப்பது காரியமுமல்ல
இசைந்தமுகங்கண்ணாடி யெதிர்த்தாலல்லோ
நன்மையமாய்த்தெரியுமங்கே யதற்குமுன்னே
நான்சொல்லத்தெரிந்திடுமோ நவிலுவாயே.

(வ-ம்) கேளுமம்மா வள்ளித்தாயே நான்பின்னால்நடக்குங் காரியத்தை உனக்கு முன்னே சொன்னதால் என்பேரில் கோபம்வந்தது ஆனால் கண்ணாடியை முகத்தாகவெதிர்பார்த்தால் தெரியுமல்லவா அதுபோல கழுகாசலக் கந்தநாயகர் உன்னைமணஞ்செய்யப்போகிறார் அதற்குமுன்னே நான்சொன்னால் தெரியுமோ சொல்லுமம்மா வள்ளித்தாயே.

வள்ளியம்மன்சொல்லுகிற கண்ணிகள்,

இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

வீண்பேச்சுபேசவேண்டாம்நாரதனே இந்த
பிரட்டுநடவாதிங்கேநாரதனே.
போம்போம்வந்தவழியேநாரதனே இங்கே
பொருந்தாதவார்த்தைசொன்னாய் நாரதனே
கந்தருக்கிணங்கென்றதும்வாய்மதமோ சற்றுங்
கவனியாமற்சொல்வதுஞ்சம்மதமோ
எத்தனைவேலைவருக் கிணங்கவென்றே இங்கே
என்முன்னெதிர்கதுச்சொன்னீர்நீருமின்றே
வெற்றிற்குறக்குலமென்றறியாமல் வம்பு
விள்ளுகிறீரெங்கள்சேதிதெரியாமல்
சற்றுநீர்நெஞ்சைத்தொட்டுப்பாராமல் சும்மா
சல்லித்தனம்பேசுகிறீர்சோராமல்
அண்ணமாரிட்சணத்தில்வருவாரோ வந்தால்
அம்புவில்லெடுத்துன்மேற்பொருதுவாரோ
வின்றோடுநாரதனே எங்கானே இவ
வேடக்கொண்டதுவாயும் வீண்தானே

வள்ளியம்மன்சொல்விருத்தம்.

சடைமுடித்தவேடமெல்லாம் தானுமாரே
தவமுனிவென்றேயெவருந் தான்சொல்வாரோ
வெடுவெடென்பேசுவதும நடைவாதிந்த
வீண்பேச்சுநாரதனே மிஞ்சவேண்டாம்
அடம்பிடித்தேஎங்களண்ணர் வருவார்வந்தால்
அண்டவொட்டார்கண்டவுடனம்பாலெய்வார்
திடமுடன்முன்னில்லாதே போபோயிந்த
செய்கையறியாதுசும்மா செப்பினேரே.

(வ-ம்) அகோவாரும் நாரதமகாமுனிவே நீர்சிவனைப்போல சடைவளர்த்ததுவிட்டோ கந்தனுக்கு இணங்கென்றவார்த்தை சொல்லவீரல்லவா அது இங்கேநடவாது இப்போது எங்களண்ணமார்கள்வருவார் உம்மைக்கண்டால் அம்பாலெய்வார் அதற்குமுன் போய்விடும் நாரதமகாமுனிவே.

நாரதருக்கும்-வள்ளியம்மனுக்கும்-தர்க்கம்-கண்ணிகள்,

இ-ம-கண்டசாபு-ஆடதாளம்.

நாரதர்சொல்

கடந்தவார்த்தைசொன்னாய் காரியமோவள்ளித்தாயே எங்கள்
கந்தனைமருவினாற் கனக்குறையுண்டோசொல்வாயே

வள்ளியம்மன்சொல்

தொடர்ந்தவார்த்தைசொன்னாய் தூரப்போநாரதமுனிவே இந்த
துன்யார்க்கமேதினி யெம்மாத்ரநாரதமுனிவே

நாரதர்சொல்

இந்தத்தினைப்புனத்தி லிருக்கவிதியோவள்ளிமானே கந்தர்
மணம்செய்துகொண்டாலுனக் கெல்லோருங்கையெடுப்பார்கள்தேனே

வள்ளியம்மன்சொல்

உந்தன்மகமோநின்ற உறவோநீவெகுறுக்கியாச்சே உன்சொல்
உலகுக்கொவ்வாதிங்கு கலகமபண்ணுமேதவீண்பேச்சே

நாரதர்சொல்

பேச்சடங்கல்லவோ பேதையேயோசனைதோனும் கந்தன்
பெரியவனவனைநீ மருவச்சம்மதித்திடவேணும்

வள்ளியம்மன்சொல்

வாய்ச்சாம்பிராயமுன் வழுக்குஞ்செல்லாதுகேள்நாரதனே நட
வாதெந்தன்குறக்குல மறக்குமெல்லாதுகாண்நாரதனே

நாரதர்சொல்

குச்சுக்குடிலுங்கட்டிக் குடியிருப்பதுமல்லவாமோவா எங்கள்
குமரனைமணந்துபொற் கோயிற்குள்ளிருப்பதுந்தாமோவா

வள்ளியம்மன்சொல்

குச்சுக்குடிலுந்தெய்வப்பொன்கோவில்போலிருக்குமிங்கே இந்த
சொற்குற்றமிப்படி நீசொல்லத்தாயிருக்குதேனிங்கே

நாரதர்சொல்

தாள்ளுநாடுபொழிசுமந்து திரும்வள்ளித்தாயே கந்தன்
தொடாந்துவருவாரிங்கே கடந்தமொழிகள்சொல்லுவாயே

வள்ளியம்மன்சொல்

தள்ளிசடந்துகர்தசாமியெங்கா லுஞ்செல்லாதே இங்கே
தனிதுசொல்வநாரதமுனியே யோடிப்போநில்லாதே

நாரதர்சொல்

மாவேல்குமரனைப்போல் மாப்பிள்ளையினிக்கிடையாதே வள்ளி
மங்கையேகுமரனை மருவமனஞ்சலியாதே

வள்ளியம்மன்சொல்

சடைமுடிநாரதானானவிட்டேனிதுவனைமாப்பு என்முன்
சமாசாரமிதுசொன்னாற் சண்டைவருமினிபொல்லாப்பு

நாரதர்சொல்

சத்திக்குங்காடிசகும் கைக்குறிபார்த்திடுங்குறத்தி எங்கள்
கந்தனைமருவிநல் கனமுண்டுமரகதநிறத்தி

வள்ளியம்மன்சொல்

மிஞ்சிமிஞ்சிதூள்ள மேன்மைக்குறவர்குலநாமே மட்டு
மீறிப்பேசியபேரை சிறிப்பிளந்துகொல்வோமே

நாரதர்சொல்

வார்த்தைகடக்கவழி தூர்ந்துபோங்குறமயிலே வள்ளி
மங்கையேகுமரனை மணந்துக்கொண்டால்வெகுஜயிலே

வள்ளியம்மன்சொல்

எதிர்த்துப்பேசுகிறாயிவைங்காதிந்தவார்த்தையொட்டுமோ விறைய்
எட்டாப்பழத்துக்கு கொட்டாவிவிட்டதால்கிட்டுமோ

பொது விருத்தம்.

எந்தெந்தவிதத்திறைலு மிதவசனங்கள்சொல்ல
சிந்தைமிச்சலித்திடாமல் திறமவார்த்தைசொன்ன
சுந்தரவள்ளிமானை ேபாற் றுலங்குபாதாதிகேசம்
வித்தநாரதனும்பார்த்து படஸ்தனில்வரைந்திட்டானே.

வசனம்.

அகோசெப்படியென்றால் இநதப்பிரகாரம் வள்ளியம்மனுக்கு பேசாதுமயக்கியதிக்கைச்சொலலியும் கேளாமலிருக்க அவருடைய ரூபசவுந்தரியத்தை சித்திரப்படத்திலெழுதி சுப்பிரமணியருக்குக் காண்பிக்கும்பொருட்டாய் நாரதர்கழுகுமலைக்குவருகிறவிதங்காண்க

சுப்பிரமணியர்வருகிற விருத்தம்.

தருக்கஞ்சேர்கொடிகூவத் தங்கியற்பவளமகலல
பொருக்கமாய்முனிவர்தாற்சால பெற்றிலிருக்கபோடு
சருக்குமிக்ககவேல்மேவும் மயூரமாமலையின்வாழுந்
திருக்கைவேல்கொடுசேர்த்தும் சிவசுப்பிரமணியர்வந்தார்.

வசனம்.

இந்தப்பிரகாரம் நாரதர்கழுகுமலைக்கு வருஞ்சமயத்தில் அவ்விடம் கழுகுமலையில் சிவசுப்பிரமணியர் கொலுவிற்குவருகிற விதங்காண்க,

சுப்பிரமணியர்வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

சிவசுப்பிரமணியர்வந்தார் - கழுகாசல
சிவசுப்பிரமணியர்வந்தார்

அநுபல்லவி.

சிவசுப்பிரமணியர்வந்தார் தவமுனிவோர்கள்சூழ
சித்ரக்கலாபமயில் தத்திமிதிமியென
நிர்த்தனஞ்செய்திடச் சித்தர்களும்புகழ் (சிவ)

ஆறுமுகமுந் துலங்க பன்னிருகையும்
அழகுமிகுந்து இலங்க
கூறுசெய்திடும் வேலும் மணிக்கிரீ
குண்டலம்பணி மேலும்
வேறுபடச்சூரனை மாறுபடச்செய்கோல்
வெற்றிகொண்டிடுகுலஞ் சத்திமணிமந்த்ரவாள்
கைத்தலமதிலெடுத் துத்தவுணர்கள்படை
கலங்கியேமதிகுலைந்து ஓடிட
பிலங்களோமிகத்திலங்கவேலவர்
வீரசூரபத்மாவையே களப்
போரிலேஜெயந் தீரமாகச்செய்த (சிவ)

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் கழுகுமலைக்கந்தசாமி தமதுகொலுவில் வந்து தேவர்கள்சூழ இருக்கும்போது அந்தசமையத்தில் நாரதர்வந்துசொல்லுகிறவிதங்காண்க,

நாரதர்சொல்-வசனம்.

அகிலாண்டகோடிபிர்மாண்டநாயகராகியுங் கோடிசூரியப்பிரகாசசச்சிதானந்த ஆதிபராபரவஸ்துவாகியஆதிபரமேஸ்பரர்புத்திரசிகாமணியாகிய சுப்பிரமணியக்கடவுளே சரணஞ்சரணமையா சுவாமி.

சுப்பிரமணியர்சொல்-வசனம்.

ஆகோவாரும்பிள்ளாய்நாரதமகாமுனியே இந்தசமயத்தோதையாய் எங்கேயிருந்துவருகிறாய் சொல்லும்பிள்ளாய்,

நாரதர்சொல்-விருத்தம்.

விண்ணுலகும்மண்ணுலகும் பார்த்துவந்தேன்
வெகுகோடித்தலங்களெல்லாஞ் சுற்றிவந்தேன்
கண்ணரிஞ்சந்தபெண்வனத்தில் வள்ளியைப்போற்
கண்டதில்லை சுப்பிரமண்யக் கடவுளப்பா
எண்ணியந்தப்பெண்ணுடைய சொரூபமெல்லாம்
இணங்கமடற்சித்திரத்தி லெழுதிவந்தேன்
நண்ணியந்தமடலூர்ந்தா லிருக்குதிப்போ
நடக்கவேண்டியவகையை நவிலுவீரே.

(வ-ம்) ஆ-ஆ-சொல்லுகிறேன்கேளுமையாசுவாமி தெய்வலோகத்திலிருந்து பூலோகத்தில்வந்து வெகுகோடித்தலங்களெல்லாஞ்சுற்றிப்பார்த்து தங்களுடைய திசையைநோக்கிவரும்போது வேள்விமலைக்கருகே மூன்றுலோகத்திலுங்கிடையாத வள்ளியம்மையென்ற ஒரு பெண்ணைக்கண்டேன் அந்த அம்மனுடையவடிவை யொருபடத்தி லெழுதிவந்தேன் சுவாமி.

சுப்பிரமணியர்சொல்-வசனம்.

ஆ-ஆ-மெத்தசந்தோஷம் நல்லது நீபோய்க்கண்டுவந்த அந்தப் பெண்ணுடையவிதத்தை செவ்வையாய் இன்னமொருதரம் நன்றாய்ச்சொல்லிவாரும்பிள்ளாய் நாரதனே.

நாரதர்சொல்-கண்ணிகள்-இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

சத்திவடிவேல்குமாரசாமியுந்தன் சரணம்
அடியேன்நாரதமுனிவன்தாசனுந்தன் சரணம்
பத்தியடியேன்விண்ணப்பம்புகலுகிறேன் சரணம்
போற்றியுந்தன்செவியிலிதைச்சாற்றுகிறேன் சரணம்
சிவந்தபரமேஸ்பரனைச்சேர்வைசெய்தேன் சுவாமி
தெளிந்தபொதிகாசலத்தைத் தேடிசெல்கிறேன் சுவாமி
உகந்தகும்பமுனியைக்கண்டுஉமதுதிசை நோக்கி
ஒண்டிவடிகைலைவழிச்சென்று வரும்
வேடாதுன்ரத்தனங்கள்செய்யும் வேள்விமலைக் கருகே
விரைந்துவரும்போதொருபெண்விளைந்ததினை காத்தாள்
தேடித்தினைப்புனத்தருகேசென்றடுத்துக் கொண்டேன்
திவ்வியசந்திரோதயம்போல்தேன்மொழியைக் கண்டேன்
வள்ளியென்றும்பேரறிந்துமகிழ்வடைந்தேன் சுவாமி
வடிவேலர்க்காகுமென்றே மதித்துக்கொண்டேன் சுவாமி
வள்ளிமயில்வேலரோடீர் புணர்வீரென்றேன் சுவாமி
புனைவள்ளிசினந்ததனையும்போபோவென்றாள் சுவாமி
சுப்பிரமணியர்க்கிணங்குமென்று துணிந்துசொன்ன போது
தூரப்போவென்றெனைமிரட்டித்துரத்துகின்றாள் மாது

இப்புவியில் இருபிணங்கும் வள்ளி — போலே
எழுதிவந்தேன் சித்திரத்தைப் பார்த்திடும் கண் — ணாலே

நாரதர் சொல்-விருத்தம்.

விதவிதமாய்க் கூறியுங் கேளாமல் வள்ளி
இருதனமும் மதிமுகமுஞ் சோதிமெய்யும்
பதமுமவள் துடையிடையுங் கூர்ந்துபார்த்துப்
பண்புபெருமவயவங்கள் குறைவில்லாமல்
விதம்விதமாய்ச் சித்திரத்தி லெழுதிக்கொண்டு
வீரியமாய் விடம்விட்டு விரைவாயிங்கு
கதியுதவுங் கழுகுமலை தனிலடுத்துக்
கந்தவேள் சித்திரத்தைக் காட்டுவேனே.

(வ-ம்) அகோ கேளுமையா சுவாமி அந்த வள்ளியம்மனிடத்தில் உம்மைக்குறித்து வேண்டிய தர்க்கங்கள் செய்து அம்மன் கேளாததால் அந்த அம்மாளுடைய பாதாதிகேச முதல் ஒருவகைபடத்தில் விசித்திரமாயெழுதிவந்தேன் இதோ இதைப்பார்த்து நடக்கவேண்டிய காரியஞ்செலாலவேண்டுஞ் சுவாமி.

சுப்பிரமணியர்-வசனம்.

ஆனால் அந்தச் சித்திரப்படத்தைக் கொடும் பிள்ளாய் பார்ப்போம் நாரதமகாமுனியே.

பொது விருத்தம்.

வகைவிபரமுரைத்திடு நாரதனுந்தந்த
மடலெழுதுஞ் சித்திரத்தின் வடிவைப்பார்த்து
குகவடிவேல் குமரன்மிகு மையல்கொண்டு
கோஷ்டிகொள்ளுமபித்தனைப்போல் குளறிவாடி
மிகவுமனமதிமயங்கி யுருகிச்சோர்ந்து
வீரமதன் சமர்புரிய மெலிந்துநொந்து
சுகமயிலே சித்திரமோ கிளியேயென்னத்
துள்ளுவார் புலம்பியங்கு விள்ளுவாரோ.

(வ-ம்) இந்தப்பிரகாரம் நாரதமகாமுனி கொடுத்தபடத்தை சுப்பிரமணியர் கண்ணாலே பார்த்து பயித்தியங்கொண்டவனைப்போல் புலம்புகிறவிதங்காண்க,

சுப்பிரமணியர் சொல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-அடதாளம்.

கையின் மடலன்னமே — வடிவமைந்து
கந்தியெனுஞ்சொர்ணமே
மையலுங்கொண்டேனே — மதிமயங்கி
வார்த்தையும் விண்டேன்
கண்ணே கண்மணியே — பெண்ணே-என்றன்
கண்ணுக்கிசைந்த கனியே

பெண்ணே பொன்னொளியே — என்மனத்தோடு
பேசும்பசுங்கிளியே
தேனே தெள்ளமுதே — நான்முன்னந்த
தேடுந்திரவியமே
மானே மாங்குயிலே — மரகத
வடிவே சொர்ணமயிலே
கண்கொண்டும்பாராயோ — என்னைக்கொஞ்சி
கட்டியே சேராயோ
வன்கண்ணைப்போடாயோ — என்னைக்கிட்டி
மஞ்சத்திற்கூடாயோ
மனதிற்குறியாயோ — பெண்ணே உன்மேல்
மயங்குவதறியாயோ
கதியிதழ்தாராயோ — நான்கொண்ட
சாலைத்தீராயோ
இரும்பவும்பார்க்கிலையோ — நான்சொல்வதுன்
செவியிலுங்கேட்கிலையோ
துரும்பிடை துலங்காதோ — செங்கைவளைகள்
துவண்டெதிர்குலுங்காதோ
உன்னாசைமறப்பேனோ — மதன்கணைகள்
உருவவும்பொறுப்பேனோ
என்னென்றிருப்பேனோ — உனைநினைத்து
எனதுயிர்தரிப்பேனோ

பொது விருத்தம்.

சைவதேவர்கள்கொண்டாடுஞ் சாமிசித்திரத்தைப்பார்த்து
மெய்யுறும்விசாரங்கொண்டு மேதகவேவருந்தும்போது
மைவிழிவடிவுங்கோல மயிலெனநடையுங்கொண்ட
தெய்வயானைப்பெண்மாது திறமுடன்கொலுவந்தாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் சுப்பிரமணியக்கடவுள் சித்திரத்தைப்பார்த்து மயங்கிப்பிரலாபித்துக்கொண்டிருக்கும்போது அவ்விடம் தனதுமனைவியாகிய தெய்வயானை திருக்கொலுவிற்கு வருகிறவிதங்காண்க,

தெய்வயானை வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

தெய்வயானையும்வந்தாள் திருக்கொலுமுன்
தெய்வயானையும்வந்தாள்
தூயசோதியென மெய்யவிலாசமிகு
சைவமாதர்க்குதவுந் தையல்தேவர்பணி (தெய்வ)

வாசமல்லிகைமலர்ச் செண்டு கையிலேபிடிக்க
மனதிற்கிருபையது கொண்டு கிளிமொழியே
ஆசைபயில்மொழிசற் கண்டு சூர்யஉதைய
மானதுபோலவள் மேனிவசீகர
மேன்மைகுலாவுகிர்யாபதிபூரண (தெய்வ)

சித்திரமுகவிலோ முழங்க மலர்சொரிந்து
தேவர்கள்வந்துவந்து வணங்க இருபுறமுழந்
சத்ரசாமரைக ளிலங்க திவ்யவதனை
சந்திரனெனவருஞ் சங்கரன்மருமகள்
ஐந்தருவளர்திரு இந்திரனிடமகள் (தெய்வ)

செந்தாமரைப்பாத மிலங்க துவண்டகொடி
சிற்றிடைபட்டாடை துலங்க கனகரத்னக்
குந்தளவோலைகள் குலுங்க வீணைதுலங்க
கோதைமாதரசே னெனவளர்திரு
சோதிமாமதியாமெனஎதிர்வரும் (தெய்வ)

தெய்வயானைசொல்-விருத்தம்.

சங்கரசம்புதவவர பாலர்ஞான
சரவணகுகாதிபனென் சாமிநீரும்
செங்கைதனிற்படமேலேந்திப் பார்த்துப்பார்த்துத்
தியங்குவதேன்மயங்குவதேன் சிந்தைவேறாய்
அங்கமதுமெலிவானேன் புலம்புவானேன்
ஆர்மீதிலாசைகொண்ட தையாமெய்யா
செங்கனிவாயதுமலர்ந்திங் கடியாட்குள்ள
சேதியெல்லாந்தெரிந்திடவே செப்புவீரோ

வசனம்.

சரணஞ்சரணம் தேவர்சேனாதிபதியாகிய என்பிராணநாதரே தாங்கள் ஏதோ ஒருபடத்தைக் கையிலேந்திப் பார்த்துப்பார்த்து தியங்கிமயங்கிப்புலம்பிநிற்பதேனோ எனக்குத்தெரியச்சொல்லும் பிராணநாதரே.

தெய்வயானைசொல்கண்ணிகள்-இராகம் ஆநந்தபைரவி-ஆதிதாளம்.

தெய்வமேநீரெந்தவிதமோசித்திரபடந்தனைப்பார்த்து
தேட்டமாய்மயங்குவதைத்தெரியச்சொல்லுஞ்சுவாமி
ஐயனேதேவரேநீராரமீதிலாசைகொண்டீர்
அந்தரங்கமெந்தனிடமறியச்சொல்லுஞ்சுவாமி
சேசத்திலெல்லாவதிசயந்தானோநீருமிப்போ
தேகமெலிவாகினீர்நோவதேன்சுவாமி
ஆசைதந்தகாருமக்குஅடியாளுமிங்கிருக்க
அத்தத்தோர்பெண்மேல்விரகந்தொடுத்ததென்னசுவாமி
உறுதிசொல்லியடியாளைப்புகழ்ந்துமணஞ்செய்தசுவாமின

தொருத்திமேலாசை கொண்டவருத்தமென்ன சுவாமி
இருமைதா ரொருவனாயிருந்தவர் வஞ்சம்நினைத்தால்
என்னுடைய காலவிதியென்ன செய்வேன் சுவாமி

தெய்வானை சொல்-விருத்தம்.

ஏதொருபெண் தனைச்சதமென் றெண்ணிநீரோ
என்னிலுமே யதிகவடி வானோவந்த
மாதின்படங்கண்டீரோ யாவர்கண்டு
வந்துசொன்னாரோ தனையோ கேள்விநாதா
நீதிபடைத்தனக்கு நடந்தவார்த்தை
நிட்சயமாயொளியாமற் சொல்லவேண்டும்
மாகுலத்தோர் புகழ்ந்தேத்த மயில்மீதேறும்
மன்னவனே நின்றினைவை வழுத்துவீரே.

(வ-ம்) ஆகோவாரும் பிராணநாயகா தாங்கள் ஏதோ ஒருபெண்ணின்பேரில் மையல்கொண்டதைப்போற் காணுகின்றது அவளென்னிலும் அதிகவழகுள்ளவளோ ஆகிலும் முன்னென்னை மணந்துசெய்யும்போது மற்றொருபெண்ணை நாடேனென்று சொன்னீரல்லவோ அப்படியிருக்க இப்போ ஒருபடத்தைப்பார்த்துத்தியங்கி மயங்கிநிற்பது தருமமோ என்பிராணநாதா.

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் தெய்வயானை தன் நாயகராகிய சுப்பிரமணியக் கடவுளைக்கேட்டு பதிலுத்தாரஞ்சொல்லாமையைக்கண்டு அவ்விடம் நின்றுக்கொண்டிருக்கும் நாரதரைப்பார்த்துக் கேழ்க்கிறவிதமெப்படியென்றாள்,

தெய்வானைசொல்-கவி.

விண்ணவர்நாதனே அண்ணலாரிடத்தில்
வண்ணமாய்ச் சொன்ன திண்ணநீ சொல்வாய்

(வ-ம்) ஓ-ஓ-கலகப்பிரியராகியநாரதனே என்நாயகரிடம் என்ன கோள்வைத்தாய் அதைச்சொல்லும்பிள்ளாய் நாரதனே.

நாரதர்சொல் விருத்தம்.

தாயேநான்கண்டசேதி சொல்லக்கேளும்
தலங்கள்சுற்றிக்கைலைவழி சார்ந்தேனங்கே
ஓயாதுவிளைந்ததினை காத்தாளோர்பெண்
உகந்தவடன்றோபெல்லா முன்னியுன்னி
காயாமேலசொல்லிமுடியாதேயென்று
வந்து சகிக்கொணாதமட லெழுதிவந்து
தாமதமேன் மணம்பாரென்றதல்லால்
சுகமாக செய்யென்றடியேன் சொல்லிலேனே

(வசம்) ஆமோமாகுமம்மா தெய்வானைத்தாயே நான் கைலையங்கிரி போய் இவ்விடம்வருகும்போது வேடுவிச்சியைக்குமரனொருவன்றி னைப்புணர்ந்திருக்கிறான் அவள் ரூபத்தை வாயாற்சொல்லி முடியா தென்று ஒருபடத்திலெழுதிவந்து சுவாமியைப்பார்க்கச்சொன்னதே யல்லது மணஞ்செய்துக்கொள்ளச் சொல்லவில்லையம்மா தாயே.

தெய்வயானைக்கும் நாரதருக்கும் தர்க்கம்.

கண்ணிகள்-இ-ம-கண்டா-ஆதிதாளம்.

தெய்வயானைசொல்

சொல்லவில்லையென்றுசொன்னாய் சுத்தபரமாத்மாவின்
தொழிலெல்லாமறியேனோ பாவிநாரதா
மெல்லமெல்லப்பேசிநீ யெல்லோர்க்குங்குண்டணியாம்
வித்தைநானறியேனோ பாவிநாரதா

நாரதர்சொல்

தாயேநீசொன்னவார்த்தை தப்பிடடந்ததுண்டோ
சற்றுமென்மேற்குற்றமில்லை யம்மணித்தாயே
மாயமுங்கபடமும் முருகன்செய்வதேயல்லால்
மற்றொருவர்கள்செய்வாரோ அம்மணித்தாயே

தெய்வயானைசொல்

இத்தனையுஞ்செய்துநீ கத்தரிநாட்டினவன்
இல்லையென்பதறியேனோ பாவிநாரதா
வித்தாரஞ்செய்துவேலர் சித்திரமடலைப்பார்த்து
விரும்பிமெலியவைத்தாய் பாவிநாரதா

நாரதர்சொல்

நிசவார்த்தைசொன்னாலுமென் னேரபயலனேவரும்
நிலையாதபொய்யென்பா ரம்மணித்தாயே
பசப்பிவும்மைவஞ்சித்து முருகன்செய்ததறிந்து
பரமார்த்தனென்றுசொன்னே யம்மணித்தாயே

தெய்வயானைசொல்

உறங்கிக்கண்மூடிப்பூனைப் பால்குடிக்கறதுபோல்நீ
உள்வஞ்சகஞ்செய்தாயே பாவிநாரதா
மறந்துவிடுவேனோ சித்திரமடல்தந்துவேலனை
மயக்கினதறியேனோ பாவிநாரதா

நாரதர்சொல்

உசந்தபுத்தாரன்சேதி யழுதாலுஞ்சிரித்தாலென்
றனைப்பதுஞ்சுமாச்சே யம்மணித்தாயே
சிரத்தையானென்சொன்னாலுங் குன்றிமணிசொல்லவொண்ணுமோ
பெரியோருன்னைப்பேச்சே அம்மணித்தாயே

பொது விருத்தம்.

கன்னிணுக்கண்டசேதி கழறிவேனென்றுபோற்றி
புண்ணியநாரதனுமயனிடகப் பொருந்தியவேலர்தாமும்
நன்னிமலைக்குறப்பெண்ணை நான்கண்டுவருவேனென்றே
என்னையெதெய்வயானைக் கிசைந்திடவியம்பிட்டாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் நாரதனை தெய்வயானையம்மன்கோபி க்குமாக்கந்செய்து நிற்கின்றசமயத்தில் சுப்பிரமணியர் தெய்வயா னையைச் சம்மதிக்கும்படியாய்ச்செய்து குறப்பெண்ணைக்கண்டு வரு ம்படி கேட்க தெய்வயானை அதற்குவிடைகேட்கிற விதங்காண்க,

தெய்வயானைசொல் கொச்சகம்.

மின்னும்வடிவேல்தரித்த வேலவரேநான்மருவும்
மன்னவரேயுமுடைய மனம்போலநீருமங்கே
கன்னல்மொழிவள்ளியெனுங் கானக்குறத்தியிடம்
பொன்னடிகணோவாமற் போய்மீண்டுவாருமையா.

(வ-ம்) சரணஞ்சரண மென்பிராணநாதா தாங்கள் எண்ணியகாரி யத்தை நான்தடைசெய்தாற்கேட்பிரா நல்லது உங்கள்மனம்போல அந்தக்கானக்குறப் பெண்ணைக்கண்டு அதிசீக்கிரமாக நமதுகழுகும லைக்குவந்து சேருஞ்சுவாமி.

சுப்பிரமணியர்சொல்-வசனம்.

நல்லது அப்படியே போய்வருகிறேன் நீயொன்றுக்கும்யோசிக் கவேண்டியதில்லை என்பிராணநாயகி. அகோவாரும்பிள்ளாய நாரத மகாமுனியே அந்தவள்ளியென்னும்பெண் இருக்கிறதினைப்புனமும அந்தத்திசையும் அவ்விடத்திலிருக்கின்றஅதிசயமும் அவளிருக்கும் அடையாளமுஞ் சொல்லும்பிள்ளாய்.

நாரதர்சொல்-விருத்தம்.

ஆனைமலைகுத்தால மலைதானுண்டு
அதற்கடுத்தபொதிகைமலை யங்கேயுண்டு
மோனதவவிஸ்வாமித் திரனும்வேள்வி
முடித்தமலையுண்டுவேடா முழக்கமுண்டு
ஞானகிராகவனு மிலக்கமணனுமுன்னங்
தாடகையைவென்றதுமத் தலத்திலேதான்
கானமலைகுறக்கொடியாள் புனமுமங்கே
கண்டுசென்றாலடையாளங் காணலாமே.

(வ-ம்) கேளுமையா கழுகாசலக்கந்தசாமியே அந்தவள்ளியம்மன் இருக்கப்பட்டவிடத்திற்குச் சமீபமாய் ஆனைமலைகுத்தாலமலை பொதி கைமலை விசுவாமித்திரர் வேள்விசெய்தமலையும் ஸ்ரீராமர் இலட்சு

மலர் தாடகையை வென்றுயிட்டும் தேவர்கள் முனிவர்கள் வாசஞ் செய்யும்படியான இடமாம் ஆந்த தினைப்புனத்தில் வள்ளியம்மையிரு க்கின்றாள் எனதுபின்னோவந்தால் காண்பிக்கிறேன் சுவாமி.

சுப்பிரமணியர்-வசனம்.

அகோவாரும் நாரதமகாமுனிவரே அந்தவள்ளியிருக்கிற இடத் திற்குப்போகவேண்டுமானால் என்னசொரூபமெடுத்துப் போகலாம் பிள்ளாய்.

நாரதர்சொல்-வசனம்.

சரணஞ்சரணமையா சுவாமி ஆறுமுகமும்பனிரெண்டுகையும் மயில்வாகனத்தையும்விட்டுவேடர் உருவங்கொண்டுபோகலாஞ் சுவாமி

சுப்பிரமணியரும் நாரதரும் தினைப்புனம்வருகிற

கண்ணிகள்-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

மையல்கொண்டுவேலவர்குறமானைத்தேடியே ஒரு
மானிடவடிவங்கொண்டுபாதைகூடியே
தெய்வநாரதனைக்கூடச்சேர்ந்துவாவென்று கந்தா
சீக்கிரங்குறப்பெண்ணினைப்பார்க்கலாமென்று
வில்லெடுத்துஅம்புதொட்டுவேடர்போலவே ஏடு
வேல்வனதலத்தைவிட்டுமிஞ்சியேகவே
செல்லவழிகேட்டுகேட்டுதிசையைநாடியே வேலவர்
தேன்மொழிவள்ளியைக்கானகந்தேடித்தேடியே
தண்டினைபபுனமும்வள்ளித்தலமுமெதுவோ ஆவள்
தன்னைக்காண்பதெக்காலமோசமயமென்னமோ
கண்களுக்கெட்டாததினைக்காடுதூரமோ மலைக்
கந்தவள்ளியைநான்காண்பதெந்தநேரமோ
நாரதாவள்ளியிருக்குமலக்குங்காணுமே ஆங்கு
லக்குந்திசையுமெனக்குநவிலவேணுமே
தூரவோகிட்டவோவழிசொல்லுமெனக்கே வள்ளிக்
தோகைதனைக்காணவைத்தாற்சுகந்தருமெனக்கே
என்றும்வேலவர்புனத்திலேகியபோதில் ஆக்கிக
இணங்கும்நாரதனும்பையவியம்புவான்காதில்
மன்றல்வள்ளிதன்னைத்தேடிமணமெலிவானேன் இளை
வனத்தைக்காட்டிவள்ளியைபுன்னைசத்திற்சேர்ப்பேனே
மனத்துயர்வேண்டாம் சுவாமியுன்மனதின்படியேயன்
வள்ளியையுன்னைசந்நிதிசேர்த்துவைப்பேனே குற
தினைப்புனமும்வள்ளி யையுந்தேடிக்கொள்ளதிலே வைக்கு
சித்திரம்போற்காணவைப்பேனிட்சணத்திலே

இராஜ்பிசாழிகைக்குள் வள்ளி நாயகிமுன்னே
போய் வேடிகொண்டுவிட்டேன்போய் நின்றேனென்
கண்டு வள்ளியையும் அநுகைவசத்திலே
கொண்டுவந்து சேர்க்கக் கொள்ளுங்கணிதத்திலே
சக்கரை விளிவென்றே தன்னிலவைந்து
தாமெடுத்தும் இன்னரசக்தருமேமாவிரைந்து
பொற்குறப்பெண் தன்னைமணந்தருட்டச் சொல்லியே
சொன்னதன்னாலவள் முகந்தோனைநல்லவே
காரநாளவென்று வேலர் காடுடந்தார்
நாகமலைக்கப்பால் கரிகாடுங்கடந்தார்
தெரியுமுகிழ்ந்தகற்றிடுமேரியே
செண்பகவனத்தில் வந்துசிக்கை தேரியே
வெள்ளிமலைதனக்கலை கொடிமுடியுண்டே
விரையகாயுச்சந்தனச் சோலை வேலவருக்கண்டே
இன்னாபுங்குங்குடி விளைமுந்தினை பொருக்குமே
கிளிமொழி வள்ளிப்பெண்ணைதைக் கேட்டிருக்குமே
தோகைவள்ளிகைவேறுசையழகனைக்கண்டார்
குறிஞ்சிமாவேலவென்றசத்தமுங்கண்டார்
வசையணிக்க தன்தினைப்புனங்காண்கின்றார்
வள்ளிதன்னுடைகைகண்டுவைத் தெதிர்கின்றார்

பொது வசனம்.

இந்தப்பிரகாரம் சுப்பிரமணியக்கடவுளும் நாரதமகாமுனிவருமாக ஆகாசமார்க்கத்திலிருந்து தினைப்புனத்திலிறங்கி நாரதர் வள்ளியைக் காண்பித்து தமதிருப்பிடஞ்சென்றபின் சுப்பிரமணியக்கடவுள் வள்ளியம்மையெதிரே வந்தபோது வள்ளியம்மன் தினைக்குரும் பட்சிகளைத் தமல் ஆயாவோட்டுகிறவிதங்காண்க,

வள்ளியம்மன் ஆயாவோட்டுகிறதரு-ஆ-புக்கராககூரகனிருபகதாளம்.

ஆயாவோ ஆயாவோ பட்சிகளே ஆயாவோ ஆயாவோ

அன்னங்களே கின்னைகளே — நல்ல
அருகுசிரைவண்டினமே
கன்னாங்கருகாக்கைகளே — சிறு
காடைகவுதாரிகளே (ஆயா)

செக்கமைப்புள்ளினமே — தினை
மேவுழின்புகோழிகளே
மென்னவருங்வாத்தினமே — சோலை
மேவியசெம்போத்தினமே (ஆயா)

மானினமே ஆயாலோ புள்ளி
மரையினமே ஆயாலோ
கானகத்துமயிலினமே சிட்டுக்
கம்புட்களே ஆயாலோ
சொற்ணநிறத்தூக்கணமே அன்றில்
சோடுகளே ஆயாலோ (ஆயா)

சுப்பிரமணியர்சொல்-கலித்துறை.

காந்தளின்கைவிரல் சிவப்பெழுமே பொற்கவணெறிந்தால்
மாந்தளிர்மேனி செந்தியெழுமே வெய்யவன்கதிரால்
ஏந்துந்தனமிரண் டிசைந்திடுமே யிடையிற்றிடுமே
போந்ததெவ்வாறுங்க ளூரெங்குசொல்லிடும் பூவையரே.

(வ-ம்) ஓகோபெண்ணே உன்கையால் கவணெறிந்தால் சிவப்பேறுமே வெய்யலில் மேனிகுலைந்திடுமே இரண்டுஸ்தனமுங் குலுங்குமே இடைநோகுமே நல்லது உங்களூர்பெயரென்ன நீயார்சொல்லும் பெண்ணே.

இதுவுமது விருத்தம்.

கோதையேகுயிலேமானே கொஞ்சிடுங்கிளியேதேனே
காதலாயுன்னைத்தேடிக காமப்பேய்கொண்டுவந்தேன்
சீதமாம்வனத்தில்நீயும் தினைப்புனங்காக்கவென்றே
வேதனும்விதித்திட்டானே விதிவசமென்சொல்வேனே.

(வ-ம்) ஆ-ஆ-குயிலேமயிலே என்னிடத்தில் கொஞ்சும்படியாகிய கிளியே பாவியாகிய பிரமதேவன் உன்னைப்பிரப்பித்து இத்தக்கானலிலே தினைப்புனங்காக்க விதிவைத்தானல்லவா நல்லது உன்மேல் மோகங்கொண்டுவந்தவனிடத்தில் சற்றேவார்த்தையாடாயா என் மனோரஞ்சிதமான பெண்ணே.

இதுவுமது விருத்தம.

சிரிட்டமுகத்தைநேரே திரும்பியென்னுசைதீர
ஏறிட்டுப்பார்த்தோர்வார்த்தை யியம்பினுலிளப்பமுண்டோ
வாரிட்டதனப்பெண்ணேசெவ் வாய்முத்துச்சிந்துமோநின்
பேரிட்டதின்னதென்று பேசுவாய்பேசுவாயே.

(வ-ம) கேளாய்பெண்ணே உன்னுடைய அழகுபொருந்தியமுகத்தைச்சற்றே ஏறிட்டு என்னைப்பார்க்காயா இருதனத்தையுடையபெண்ணே உன்வாயைத்திறந்து பேசாயா பேசினுல் உன்வாய்முத்துச்சிந்திப்போகுமோ உன்பெயரைத்தெரியச்சொல்வாய்பெண்ணே.

சுப்பிரமணியர்சொல்-கண்ணிகள்-இ-ம்-தோடி-அடதாளம்.

வனக்குறப்பெண்ணே துலங்கிய
மரகதக்கண்ணே இரசம்பொழி

மதுரிதக்கனியே
வரிசைமைத்துனியே

கனத்திருமானே
கட்டிச்செந்தேனே
கண்டுகொண்டுபோராய்
காதலைத்தீராய்

பங்கயத்தேனே
பகழியெய்தானே
பாசங்கொண்டேனே
நேசங்கொண்டேனே

சங்கீதக்குயிலே
தளிப்பின்பமயிலே
தாகங்கொண்டேனே
மோகங்கொண்டேனே

ஜெகமகிழ்மாதே
சகநினையாதே
சரசசெந்திருவாய்
தாமுகதந்தருவாய்

சுகமதரதியே
சோதியாமதியே
சுகுர்தசித்தினியே
துவரிதழ்க்கனியே

தினந்தினநினைந்தேன்
தேடியுமலைந்தேன்
செவ்விதழெனக்கு
தெய்வமுண்டுனக்கு

அனந்தினங்கசந்தேன்
புனந்தனக்கிசைந்தேன்
அண்டையிற்சேர்ப்பாய்
சண்டையைத்தீர்ப்பாய்

ஒழுக்கமுமில்லையோ
மொழியுஞ்சொல்லாயோ
உன்வசஞ்செய்தால்
முண்டடிமெய்தான்

பழிக்குளங்குறும்போ
பாறையோயிருமபோ

எனக்கின்ப

மருவற்ற
எனையும்
நான்கொண்ட

மன்மதன்
நின்மனப்
அணைந்திட

மரகதத்
உன்மனது
என்மன

நீயும்வந்
சயமுறுந்
எனக்கொரு

நிலவொளி
மனமத
மதுரித

உனைநான்
கொஞ்சியே
நிதந்தர

உனதுநினைப்
எனையுன்
மதன்செயுஞ்

வாய்திறந்தொரு
என்னையும
புண்ணிய

உன்மனம்
பசந்திடும்

பச்சிலேயிருக்காய்
கச்சிலில்மறைக்காய் — தனத்தைதாவல்

சரிவளைக்கையா
சாமுருமெய்யா — விசித்திர
சாதனையுனக்கே — இல்லிருந்த
வேதனையெனக்கே — மன்மகன்

வச்சைதப்பாலே
மறந்துசெப்பாதே — இனியென்சொல்
வருந்திலிருப்பேனே — உன்னுடன்
தழுதிலைப்பேனே — என்முன

வள்ளியம்மன்சொல் விருத்தம்.

எட்டாதபழமிதுவென் றெண்ணிடாமல்
எட்டியெட்டியண்ணாந்து பார்த்துப்பார்த்துக்
கொட்டாவிவிட்டகதை வருவதன்றோ
கூறுதவார்த்தைதனைக் கூறவேண்டாம்
ஒட்டாதுநீருரைத்த வார்த்தைசும்மா
ஓடிப்போம்நீர் நின்றா லுயிர்க்கோமோசம்
கட்டாணகுறவரெங்க ளண்ணமார்கள்
கானகத்தில்வருமுன்னே கடத்திடாயே.

(வசனம்) அகோகேளுமையாவேடரே நீர்பேசுகிறதைப்பார்க்கால் எட்டாதபழத்திற்கு நாடவன்கொட்டாவிவிட்டு அண்ணாந்துபார்த்து ஆசைப்பட்டதுபோலிருக்கின்றது ஆனால் உம்முடையபேச்சுக் கேட்கவாது இதோ என் அண்ணமார்கள்வருவார் சாக்கிரதையாயோடிப்போம் வேடரே.

வள்ளியம்மனுக்கும்-வேடனுக்கும்-தர்க்கம்-கண்ணிகள்

இ-ம்-பந்துவராளி-அடதாளம்.

வள்ளியம்மன்சொல்

ஆருங்காணும்நீரெவ்விடம்
கார்சொன்னதோகபடம் — உமக்
தானுமாறிங்கேசெல்லுமோ
தாயமென்னைவெல்லுமோ — உன்சம்ப்ர

வேடர்சொல்

சிறுதேவள்ளிப்பெண்ணே
சிநேகமறவேன்கண்ணே — உன்
பாசாமற்பேசுராய்
பாவையேநீகையைவீசுகிறாய் — சும்மா

வள்ளியம்மன்சொல்

மின்னாமேசநாரிமெறு மின்
வீட்டுவெளிமேவியிதெல்லாஞ்சொல்லு
வள்ளியென்றறியாயோ சும்மா
வாதுகள்கூறுவதும்நீயோ

வேடர்சொல்

தள்ளாவிருந்துதன்னை நாரந்
தள்ளவும்போமோஎன்னை
எள்ளளவாகிலுமே என்மேல்
இரங்கிலையோமனமே

வள்ளியம்மன்சொல்

ஜல்லிப்பேச்சிங்கேசெல்லுமோ உன்சம்ப்ர
தாயமென்னைவெல்லுமோ
புல்லவுனைக்கவந்தீர் அது
போதுமெங்களண்ணர்தான்வருவார்

வேடர்சொல்

சொல்லிற்குறமாதே செஞ்
சொல்லவும்போகாதே
நல்லவாதரவில்லையோ வள்ளி
நாயகிநீயும்சொல்லாயோ

பொது-சந்தவிருத்தம்.

பாங்கிமாருடனேசிறந்திடும்பாவைவள்ளிமுன்னேகுகன்
தாங்கிமேலெனவேநயந்துசொலுஞ்சாயசம்பிரதாயத்தால்
ஓங்கியேபரனேரமாய்கிழவோனுநின்றருமாநிபோ
வேங்கைமாமரமாகினார்வடிவேலர்மாயநாடகமே.

இதுவுமது-முந்துசந்தவிருத்தம.

இப்படிமாயவுருக்கொடுவேலரிருக்கையின்வள்ளிமுன்னே
ஒப்பொடுவேட்டுவர்தங்களைவாரியுறத்துடனேவினவாய
கப்பியவெள்ளிமலைக்குறவோர்கள்கடுந்தெழுமோர்நிரைவாய்
கொப்பெனவந்துபுனத்தைவிசாரணைகூறியுகந்தனரே.

(வசனம்) ஆகோவெப்படியென்றால் சுப்பிரமணியவேடரும் வள்ளியம்மையும் பாங்கிமாருந் தர்க்கஞ்செய்துகொண் டிருக்கும்போது அந்தவள்ளியம்மையுடைய அண்ணமார்களேழுநூறவர்களும் தினைப் புனம் விசாரணைசெய்யவந்த தருணமதனில் சுப்பிரமணியர் வேடக் கோல வேங்கைமரமாகி யிருக்க அண்ணமார்கள் வருகிறவிதம் எப்படி யென்றால்,

அண்ணமார் வேடர்கள் வருகிற-தரு-இ-ம்-பரசு

அடதாளம்.

சிலவேடுவர் கானவர் தோன்றினரோ

வில்வேல்கொலைவாள்கணைதோளுறவே
வாய்ந்தகொண்டைநிஜாருஞ்சுந்தர
சாய்ந்தகொண்டைவசிகரம்பெற — சில

புலிமான்வருதேபொறுபொறெனவே
பொடித்திடவுடல்துடித்திடுசனை
யெடுத்திடமிகதிடத்துடன்மலை — சில

நிழலேதுயர்மரமரமேதெனவே
நினைத்துத்தனிசினத்துத்தினை
கனங்கொண்டுயர்வனங்கண்டெதிர் — சில

இதுவானிலையேமரமேதெனவே
இடித்துப்பற்கடித்துக்கைத்
துடித்துப்பொற்றடிச்சுற்றியே — சில

அண்ணமார் குறவர்களைப்பார்த்துச்சொல்

விருத்தம்.

நேத்தில்லாவேங்கைமரமின்றை
நினைத்தவுடன்மாமரமும்வருமோசொல்வீர்
கோத்திரத்திற்பெரியநம்பிராசனோடு
கூடவந்தகுறவருமுன்பார்த்ததுண்டோ
ஆற்றிமனந்தேற்றிவனஞ்சுற்றிப்பார்க்க
அவசரமாயெல்லோருமடர்ந்துவாரும்
சீற்றமுடன்வேங்கைமரமிதனைநாமுஞ்
சிந்துசிந்தாய்வெட்டியொன்றாய்ச்சேர்க்கலாமே.

(வசனம்) ஆ-ஆ-வாரும் வேடர்குறவர்களே நேத்தில்லாத வேங்கைமரமின்றைக்கு வந்ததிதமென்ன எங்கள் தந்தைநம்பிராசனும் நீங்களும்வந்தீர்களே அப்போதுதினைவிளைக்கும்போதும் [illegible]னைபோட்டும்போதும் பார்த்ததில்லையே ஆ-ஆ இது புதுமையா யிருக்கிறது இதைவெட்டி ஒன்றாய்க்குவிப்போம் வாருங்குறவர்களே.

குறவர்சொல் வசனம்.

அப்படியே போய்ப்பார்க்கலாம் அண்ணமார்களே

அண்ணமார் குறவர்களும் வேங்கைமரத்தைப் பார்த்துச்சொல்

பொதுகண்ணிகள்-இ-ம்-பந்துவராளி-ரூபகதாளம்.

வேடர்கோன்நம்பிராஜன்மைந்தருங் குறவரோடு
விளைந்திடுந்தினைப்புனஞ்சுற்றிப்பார்த்தார்
கூடிக்குறவர்பானுக்கெதிர்சென்றார் வள்ளித்தாயை
கொண்டாடிமரங்கண்டுமெய்மறந்தார்
எந்திசையும்வேங்கைமரமென்பார் அதிலேயொருவன்
இடித்துப்பல்லைகடித்துக்கோபிப்பான்
மோதிவெட்டென்றொருவன்சொல்லுவான் அதிலேயொருவன்
முறித்துத்தகர்த்துநொருக்குவேனென்பான்
முந்திவெட்டுவேனென்றொருவன்சொல்லுவான் அதிலேயொருவன்
முளைத்தமரத்தின்வளத்தைப்பாரென்பான்
இந்தமரத்தில்நிமித்தஞ்சொல்லுதென்பான் அதிலேயொருவன்
இசைந்தகாலைப்பார்த்துச்சொல்வேனென்பான்
வேறொருத்தர்கள்செய்ததில்லையென்பான் குலதெய்வநம்ம
வேலர்செய்குறைபோலிருக்குதென்பான்
கூறும்வள்ளியைவேலர்மணஞ்செய்ய வேங்கைமரமாய்க்
குறித்ததென்றிந்தநிமித்தஞ் சொல்லுமென்பான்

விருத்தம்.

மட்டில்லாவடிவும்வேங்கை மரத்ததினிமித்தங்கொண்டு
வெட்டவொண்ணாதிங்கின்னம் விவரித்துக்கேட்போமென்று
சட்டமாய்ப்புகழ்ந்துவள்ளித் தாயினைமகிழ்ந்துவாழ்த்தி
திட்டமாய்வேங்கைவந்த சேதியேதெனக்கேட்டாரே.

(வசனம்) இந்தப்பிரகாரம் அண்ணமார்கள் வள்ளியம்மனைக்கேட்க வள்ளியம்மன்சொல்லுகிறவித மெப்படியென்றால்,

வள்ளியம்மன்சொல் விருத்தம்.

தண்டமிழ்வல்லீரெந்தன் தமையரேசொல்லக்கேளீர்
வண்டினாவனத்தில்வேங்கை மரமதுமுளைத்திருப்ப
துண்டென்றுமில்லையென்று மொன்றுநானறியேனிங்கு
கண்டதுமில்லையிந்தக் காரணமறிகிலேனே.

(வசனம்) ஆ! கோவாருங்கள்! எனதுயிர்க்குயிராகிய அண்ணமாரே [illegible] மருமபட்சிகள்வாராமல் தினைப்புனங் காத்திருந்தோம் [illegible] இந்தமரமிருக்கிறதென்றும் இல்லையென்றும் நாங்கள் கண்டதுமில்லை இது ஏதோ புதுமையாயிருக்கிறது அண்ணமாரே.

அண்ணமார்சொல்-விருத்தம.

கல்லதுநிழலாமவேங்கை நமறுலைவள்ளிக்காய்க்கு
அல்லதுவினைவந்தாலு மயிற்குமரேசருண்டு
மெல்லவேமனைக்குப்போறோம் மெனிக்கிடாதிருப்பாய்சேதி
சொல்லவேண்டியதெல்லாநீ துரிதமாய்ச்சொல்வாயம்மா.

(வசனம்) கேளுமம்மா எங்கள் தங்கையாகிய வள்ளித்தாயே இந்த வேங்கைமரமிருக்கிறது நிழலாயிருக்கிறபடியாயிருக்கட்டும் அப்படி யாதொருவினைவந்தாலும் நமதுகுலதெய்வமாகிய வேலவரிருக்கிறார் நல்லது இப்போதுநாங்கள் மனைக்குப்போகிறோம் நீசொல்லவேண்டியசேதியெல்லாந் சொல்லுமம்மா வள்ளித்தாயே.

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்-இ-ம்-சங்கராபரணம்-ஆடதாளம்.

வேழ்விமலைக்கரசே சிற்றாரின்
வேடுவவண்ணமாரே பொருள்
தாழ்வில்லாவாழ்க்கையுள்ள என்னிட
தமையரேநீர்கேளீர்

என்தந்தைதாயாரும் என்னைத்தேடி
ஏங்கியிருப்பார்களே என்னை
அன்பாய்க்கேட்டாரோ அவ்விடத்தில்
அல்லவருஞ்சுகமோ

அன்னைதந்தையிடத்தில் தங்கைசுக
மாயிருக்கிறளென்று மான்
சொன்னபடிபோலே நீங்கள்போய்ச்
சொல்லுவீரண்ணமாரே

சேடியர்பாங்கியுடன் தெய்வபலன்
கொண்டுபுனங்காத்து வள்ளி
வாடாமலிருக்காளென்று தந்தைதாய்க்கு
வண்மையாய்ச்சொல்லுவீரே

மாடப்புறாவன்னமும் குயிலும்
மயிலுடனேநாளும் இப்போ
கூடிப்பிரியாமல் நானிருக்குக்
கோலத்தைச்சொல்வீர்களோ

வள்ளியம்மன்சொல் விருத்தம.

அங்குள்ளசெனறுந்தங்கை யன்னையுமென்றேனிடாதத
மங்கைமார்திரளுஞ்சூழ்ந்த மனிதருஞ்சுகமோவென்று

இங்கிதத்துடனேவள்ளி யின்பமாய்க்கேட்டாளென்ன
துங்கவில்லுடையீர்நீருஞ் சொல்லுவீர்சொல்லுவீரோ,

(வசனம்) அகோவாருங்க ளண்ணமார்களே அங்குள்ளசெனமும் தந்தைதாயாருஞ்சுகமோவென்று நானலட்சந்திரங்கேட்டு வந்தனஞ் செய்தாளென்றுஞ் சொல்லுவீர் அண்ணமார்களே.

அண்ணமார்கள் வசனம்

அப்படியேபோய் சொல்லுகிறோமம்மா வள்ளித்தாயே

பொது விருத்தம்.

ஒன்றியகுறவரோடு முயர்ந்திடுமண்ணமாருஞ்
சென்றுதன்பதிக்கேபோகச் செயமிதுதருணமென்றே
வென்றிசேர்வேலன்கொண்ட வேங்கையின்சொரூபமாறி
மன்றல்மானிடர்போற்பின்னும் வள்ளிமுன்றோன்றினாரே

(வசனம்) அகோதெப்படி யென்றால் குறவர்களும் அண்ணமார்களும் தங்கள்பதியாகிய சிற்றூருக்குச் சென்றபின்பு இதுதான்சமயமென்று சுப்பிரமணியர் வேங்கைமரம உருவமாறி முன்போல் வேடரூபங்கொண்டு வள்ளியம்மன்முன்வந்து சொல்லுகிறவிதங்காண்க.

வேடர்சொல்-கண்ணிகள்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

மறக்கமனங்கூடவில்லைவள்ளிமாதே — உந்தன்
மையல்கொண்டுவாடுவேனே நானிப்போதே
உறக்கமும்வருவதில்லை என்னசெய்குவேன் — அன்னம்
உண்ணவுமிரங்கவில்லை என்னசெய்குவேன்
குயில்மொழிவள்ளியேநான் கொஞ்சினேனே — என்னைக்
கொஞ்சிமுத்தந்தணைவாய வஞ்சிமானே
மயில்போலழகுடைய மாதரசே — கூடி
மருவியணையவாராய்மின்னரசே
நம்பினபேர்க்குவஞ்சகஞ் செய்யலாகுமோ — உன்னை
நாடிவந்தநானுமனம் நையலாகுமோ
வம்புசேருங்கொங்கைநாடு முற்றில்தானே — முத்து
மாலையாய்க்கிடக்கவரம் பெற்றிலேனே
துள்ளுமீன்விழியிலிட்ட மையதாகவே — நானுக்
துலங்கமாயச்சிறந்ததில்லை மெய்யதாகவே
வள்ளியுன்முகத்திற்பூசு மஞ்சளாகவே — இப்போ
வந்தணைந்ததில்லையுன்றன் தஞ்சமாகவே

வள்ளியம்மன்சொல் விருத்தம்.

வெரும்புளியதனைத்தின்று வீணாய்நாக்கெரிவதல்லால்
வருங்குறியொன்றுமில்லை வாய்புளித்ததுவேமிச்சம்
பருபுலியதும்பசித்தால் பசும்புல்லுந்தின்னுமோதான்
நெருங்கிநீபேசவேண்டாம் நினைத்ததுமுடியாதண்ணே.

(வசனம்) கேளாயண்ணேவேடரே வெரும்புளியைத்தின்றால் நாவெரியுமல்லவோ அதினால்வருவதொன்றுமில்லை அப்படிபோல்புலி பசித்தால்புல்லைத்தின்னுமா ஆகையால்நீநினைத்ததுமுடியாது வீண்வார்த்தைபேசவேண்டாம் அண்ணேவேடரே.

வேடர்சொல் விருத்தம்.

செப்புமலரணையிலுன்னைச் சேர்த்துக்கொள்வேன்
தேன்மொழியேமதனகலைத் திரமாய்ச்செய்வேன்
ஒப்பெனவுன்னுயிருமென் னுயிருமொன்றாய்
உகந்தமலர்வாசமும்போ லுவந்தேநன்றாய்
தப்பிதமில்லாதிருப்போ மென்றேயெந்தன்
தகப்பன்மேலாணையிட்டுத் தருவேன்பெண்ணே
எப்படியும்நின்கருணை யிரங்கியிங்கே
இப்போதேநன்முகூர்த்த மிணங்குவாயே.

(வசனம்) ஆ-ஆ-பெண்ணே உன்னைச்சப்பிரகூட மஞ்சத்திற்சேர்த்து பூவின்வாசம்போல் மன்மதனுடையலீலையைச்செய்வேன் ஆனால் என்பேரில் சந்தேகம்வேண்டியதில்லை அப்படிநம்பிக்கைவேண்டுமானால் எனதுதாதையின்பேரில் பரவசஞ்செய்து தருகிறேன் நம்புவாய் இதுநல்லமுகூர்த்தவேளையானபடியால் இணங்கடிபெண்ணே

வள்ளியம்மனசொல்-கண்ணிகள்-இ-ம்-காம்போதி-அடதாளம்.

என்னவார்த்தைபேசுகிறாய் அண்ணேவேடா
இனிநான்சகிக்கமாட்டேன்

பின்னையும்வாய்மொழிகேட்கிறாய் இது
பித்தாபயித்தியமல்லவோ

காட்டில்வேட்டைகிட்டுமோ அல்லாதிந்த
கன்னிவேட்டைகிட்டுமோ

தலைபாட்டிபேசுகிறாய் இதற்கெல்லாந்தா
ஞட்டாளியல்லவண்ணே

கொல்லர்தெருவிலாகி வம்பாய்விலே
கூறுகிறாய்பேசி
ஜல்லிபுடைபடியாதே வந்தவழிநீ
தான்பொசுச்சலியாதே
போதுந்தாலுக்கத்தெருவில் சன்னுசிமிச்சைப்
போடுவாரெங்குமுண்டோ
ஜாதிமார்க்கர்தெரிந்தும் என்முன்னின்று
ஜண்டித்தனம்பேசுறாய்
வடுவற்றகுறச்சாதி அதிலேனாலும்
மாற்கமொரும்சால்நீதி
துடுக்குவார்த்தைபேசுறாய் இதுதகாது
சும்மாயேனேசுறாய்

வள்ளியம்மன்சொல் விருத்தம்.

வேடரோஎன்முன்னேநீர் வேளொனுமதன்போல்நின்று
ஜாடையாய்பேசவந்தீர் நம்குலமென்றென்றுமன்
ஆடைநந்தழுதுவச்சிர மதனைப்பித்தளையிற்பதித்துச்
சூடுவாருண்டோநீர்தான் சொன்னதுதகாதுதானே.

வசனம்.

ஓகோவேடரோ தங்கத்திற்பதிக்கின்ற வச்சிரத்தைப் பித்தளையிற்பதித்துச்சூடுவாரா அதுபோலநீரோ உயர்ந்தகுலம் நானோதாழ்ந்தகுலம் இந்தக்குறப்பெண்ணைப்பார்த்து ஆசைப்படுவது சரியல்ல ஆனால் என்குலத்தின் விருத்தாந்தஞ் சொல்லுகிறேன் கேளுமண்ணே வேடரோ.

வள்ளியம்மன்சொல்லுகிற ஆநந்தக்களிப்பு.

இன்னமின்னஞ்சிரித்தனைக்கக்கேளும் வேட
அண்ணரேயெங்கள்குலவளப்பமெங்காளும் இன்
காட்டுமான்பிணைதனைப்பிடிப்போம் மாட்டில்
கறந்தபால்மலையிலுள்ள தேனமிர்தங்குடிப்போம்
சூட்டிறைச்சிகேட்டுவாய்துடிப்போம் காட்டில்
துஷ்டமிருகமவணங்க சொன்னபடிமுடிப்போம் இன்
குழவிற்குள்ளேதலைமுழுகித்துக்கொள்ளோம் உலவு
கூடாதபெண்களையுங் கூட்டிவைத்துப்பிரியோம்
மழைபொழியவருவானையுச்சரிப்போம் தாழை
மடல்குடிலேச்சுமந்துபல்லை மலையிற்சஞ்சரிப்போம். இன்
சங்குமணிவளையலதுபணிபூட்டோம் குறவர்
தாங்கபோனாலவர் தன்னையுங்கூட்டோம்
எங்களிற்றந்தையொருவருகருங்காட்டோம் குலத்துக்
கிசையாதவார்த்தை சொன்னாலுங்கூடோம் இன்

வள்ளியம்மன் சொல் விருத்தம்.

கொம்புத்தேன் கனிரசமுங் குடிப்போம்நாங்கள்
கூடாதபெண்களையுங் கூட்டிவைப்போம்
வம்புக்கேசண்டைசெய்வோ மதங்கள்பேசி
வலியவந்தசண்டையையும் விடமாட்டோம்
நம்பிச்சேர்ந்தவனா யடைக்கலமாய்க்காப்போம்
நல்லசங்குமணிபுனைவோ மிதுவேமார்க்கம்
சொம்புற்றேதேம்பாம லிருப்போம்சொன்ன
சொற்றவறுக்குறவர்குலத் தோகைநானே.

வசனம்.

கேளுமையாவேடரே எங்கள்சாதியினிடவழக்கம் காட்டில்மிருக சாதிகளைப்பிடித்துச் சுட்டுத்தின்கிறது மலையிலுள்ள கனிவர்க்கமும் கொம்புத்தேனுஞ் சாப்பிடுகிறது கூடாதபெண்களைக்கூட்டிவைக்கி றது எங்கள்தொழிலை மற்றொருவருக்குக் காண்பிக்கிறதில்லை நம்பி அடைக்கலமானவனைக் காட்டிக்கொடுக்கிறதில்லை நாங்கள் தரிக்கிற ச ங்குமணியல்லாது வேறேமணிதரிக்கிறதில்லை அதிலும்நான்மானமு ள்ளவள் ஆனபடியால் நீர்பேசுகிறவார்த்தை சரியல்ல போம் போம் வேடரே.

வேடர்சொல்விருத்தம்.

அறக்கொடுமைசெய்யாத பழிக்காறிநின்
அநியாயமுழுச்சமர்த்திங் காகுமோதான்
உறக்கமில்லையேமனதி லெண்ணியெண்ணி
உள்ளமெலாமுருகுதடி திரும்பிப்பார்த்து
இருக்கருணைபுரியமன மிரும்போகல்லோ
தெய்வமில்லையோவெந்தன் திறத்தைப்பாரு
குறக்கொடிதானினைத்தபடி யேதானுன்னைக்
குறித்துமணஞ்செய்துநெஞ்சிற் குடிவைப்பேனே.

வசனம்.

அகோவாராய் என்மனோரஞ்சிதமான வள்ளிப்பெண்ணே நான் உன்னை எத்தனைதிறம்வருந்தியும் உன்மனமிரங்காததென்ன இரும் போகல்லோ ஆனால்எனக்குந்தெய்வமில்லையோ நல்லதுநீபேசுகிறது ஓட்டாமல்பேசுகிறாய் இப்போதுன்னைக்கலியாணஞ்செய்யாமல் விடு வேனோ ஆகிலுமென்திறத்தைப்பாரும் வள்ளிமானே.

வேடனுக்கும்-வள்ளியம்மனுக்கும்-தர்க்கம்
கண்ணிகள்-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்
வேடர் சொல்

உன்னைமணஞ்செய்குவேன்
டொருபக்கமயான்போகேன்

உனைவிட்
உன்னை

அன்னியமென்றுநினைந்துக்கொண்டால்எனக்
காதரவெங்குமுண்டோ

வள்ளியம்மன் சொல்

ஆதரவென்றுசொன்னாய் எனக்கிங்
கமித்துகிளோநீயோ மித்துரு
பேதகம்பண்ணிளும்நான்சகியேன்இனிப்
பேசாமலோடிப்போபோ

வேடர் சொல்

ஓடிப்போவென்றுசொன்னாய் எனக்கு
உயிர்நிலையிங்கிருக்க என்னைக்
கூடிக்குலாவிநீ கொஞ்சிக்கொண்டால்உன்
குருக்களுக்கேபுண்ணியம்

வள்ளியம்மன் சொல்

புண்ணியமுந்தவமும் மடந்தனிற்
போளுற்செய்வார்களே இந்த-ஆ
ரண்யவனந்தனிற் புண்ணியஞ்செய்யென்ருல்
யாரிங்குசெய்யப்போருர்

வேடர் சொல்

ஆரிங்கேயென்றுசொன்னல் நீயல்லால்
ஆதரவெங்குமுண்டோ என்னைச்
சேரும்படிக்குநீ நம்பிக்கொண்டால்உன்
சிநேகமறவேன்பெண்ணே

வள்ளியம்மன் சொல்

ஆற்றமாட்டாமலே மதிசெட்
டலைகிருய்தொண்ணுந்து டமா
பீற்ருமற்போவுந்தன் மட்டுக்குந்தக்கதாய்
பேசிளுற்கோபம்வரும்

வேடர் சொல்

கோபமுள்ளாயிடத்தில் அதிகக்
குணமுண்டென்பார்களே மனந்
தாபம்பொறுத்தெந்தன் சஞ்சலந்தீருந்தன்
தன்னுளாயிருப்பன்

வள்ளியம்மன் சொல்

தன்னுளாயிருக்க எனக்குநீ
தாய்தகப்பன்கிளோயோ பேச
வெளுனதுமேதுயெத்த மின்னுமேதஇனி
உன்னுடையசொன்றதைப்பார்

வேடர் சொல்

கட்டாற்றின்கோரையைப்போல் மயங்கி
காணுந்தயங்குறேனே சற்றும
ஓட்டமற்பேசுறாய் நீட்டுரிஎளமீ
இருக்கமில்லாததென்ன

வள்ளியம்மன் சொல்

நற்கனிவேழ்விமலே சிற்றூர்கட்டி
ராஜன்வளர்த்தெடுத்த வர்ணப்
பொற்கிளிபாலுந்தன் கைக்குளகப்பட்டேன்
போபோநில்லாதே

வேடர் சொல்

பஞ்சைபஞ்சியைப்போல் காலிக்கு
கெஞ்சிநிற்கிறேனே சற்றும்
நெஞ்சிரங்காமலே பஞ்சமாபாதகி
நில்லாதேபோபோவென்றாய்

வள்ளியம்மன் சொல்

வாய்மதம்பேசாதே உனக்கு
மரியாதைதக்காது சற்றும்
தாமதஞ்செய்யாமலேஓடிப்போநீகஷ்ட
ஜாதகஞ்செய்யாதே

வேடர் சொல்

சாதகமல்லபெண்ணே உன்னைநான்
தழுவிப்புணரவந்தேன் சும்மா
வாதுபண்ணாமலென்னைக் கிட்டவாவென்றால்
வாய்முத்துசிந்திடுமோ

வள்ளியம்மன் சொல்

வாயும்வலியாதோ உனக்கு
மனமும்உருகாதோ நான்
ஓயாமலேசீறும் ரோஷமில்லாமலே
உன்மனம்பேசுகிறாய்

வேடர் சொல்

தாவித்தயங்கிறேனே கெஞ்சித்
தவித்துமயங்கிறேனே இனி
நீலவுத்தவிடு விளக்குமென்றேநிலே
நிறகவும்பேர்வைத்துக்கொள்

வள்ளியம்மன் சொல்

கோரணிசெய்யாதே இதுவரை
கோபமடங்கியிருந்தேன் இனி

ஆரொன்றும்பாராமல் பாங்கியனைவிட்டு
அடித்துவிரட்டச்சொல்வேன்

வேடர் சொல்

அடித்திடவென்றுசொன்னால் எனக்கு
அளவெட்சம்பொன்னே
பிடித்திடும்பிட்டுக்கு மனைகமழ்ந்தேயடி
பெற்றதுஞ்சொக்கரன்றே

வள்ளியம்மன்சொல்விருத்தம்.

நற்குணத்துடனேநீயு நடந்துபோவல்லவென்றால்
தர்க்கம்பண்ணுறீதயெந்தன் தமையன்மார்வருவார்வந்தால்
விற்கரத்துடையாளால் வெட்டுவார்முகம்பாராமல்
மற்றுறிவெதிர்நில்லாதே வருங்குறிசொன்னேனென்னே.

(வ-ம) கேளாய் அண்ணேவேடரே என்னோடுநீதர்க்கம்பண்ணுகிற துசரியல்ல எனது அண்ணமார்கள் வருவார் வந்தால் அம்பாலெய்து கொலைசெய்வார்கள் ஆனபடியால் தப்பிதப்போவாயண்ணே.

பொது விருத்தம்.

கொடியிடைவள்ளிமாது கோபமாய்வேடர்முன்னே
துடியதாய்வார்த்தைசொல்லித் தூரப்போவென்றபோது
கடிமலர்கடப்பந்தாரன் கனவளைசுமந்தசெட்டி
வடிவதாய்வள்ளிமுன்னே வந்தெதிர்தோன்றினாரே

(வ-ம்) இந்தப்பிரகாரம் வள்ளியம்மன் வேடனை தூரப்போய்விடு வென்றுசொல்ல சுப்பிரமணியர் வேடனுருக்கதவருவம்மாறி வள்ளி முன்பு வளையல்விற்கும் செட்டியைப்போல் வருகிறவிதங்காண்க.

வளையல்செட்டிவருகிற-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி.

வளையல்செட்டியும்வந்தான்—வள்ளிமுன்பாக
வளையல்செட்டியும்வந்தான்

அநுபல்லவி.

கிளைகிளையாய்த்தொங்கும் வளையற்பொதியதனை
கீர்த்தியுடனெடுத்துப் பார்த்ததோளில்விட்டு வளை

சரணங்கள்.

நவரிற்பாகையுமணிந்து நெத்தியில்நாமம்
தான்விளங்கவேதுணிந்து
கில்லாக்கம்பிளிதனை நேர்த்தியுடன்போர்த்தி
நிலையாதருக்கு நேராய்வளையலிட

நிகரில்லென்று பலவளையல்கொண்டுவிலே
ஜெகதலந்தனிலே குகனுமங்குகூடி
நிகழுங்கானகத்தி லிருக்கும்வள்ளியிடம்
நேரதாகவிலை கூறியேயவிடம்

வளையல்செட்டி வளையல்விற்குங் கண்ணிகள்
இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்.

வளையல்செட்டிசொல்

கனகவளை நீலவளை கொள்வீரோபெண்காள்
கறுத்தவளைபச்சைவளை கொள்வீரோபெண்காள்
மனதிற்கொத்தரத்நவளை கொள்வீரோபெண்காள்
வரிசையெடுதனங்கொடுத்துக் கொள்வீரோபெண்காள்

வள்ளியம்மன்சொல்

கொள்கிறேன்காண்வளையல்செட்டி நில்லுநில்லுங்காண்
கோலவளையலிதோ கொள்ளவாறேன்காண்
தெள்ளுந்தினமாவுந்தாரேன் வளையல்கொடுங்காண்
செட்டியாரேபரணிறங்கி யிதோவந்தேன்காண்

வளையல்செட்டிசொல்

மடற்கொடியேகுறமாதே கிட்டவேநேராய்
வார்த்தைகளைப்பேசியெந்த னருகில்வாராய்
கொடியிடையேவள்ளிமாதே கையைநீட்டடி
கும்பமுலைசோரவெனக்குச் சற்றேகாட்டடி

வள்ளியம்மன்சொல்

அடியேபாங்கிமின்னார்களே சேதிகேட்டீரோதான்
அகந்தையானவளையல்செட்டி மிரட்டிப்பேசுகிறான்
பிடிங்களடிபாங்கிமார்களே யிவனைநீங்கள்
பித்தனைபபிடிததப்படித் தள்ளிவிடுங்கள்

(வ-ம்) அகோவாருங்களடி பாங்கிமார்களே இந்தவளையல்செட்டி சொன்ன அகந்தையானவார்த்தைகளைப்பார்த்தீர்களா அடாவளையல் செட்டி என்னவார்த்தைபேசினாய் நல்லதாகட்டும் அப்பாலேபோடா.

வள்ளியம்மனுக்கும் வளையல்செட்டிக்கும் சம்வாதம்
கண்ணிகள்-இ-ம்-சௌராஷ்டிரம்-அடதாளம.

வள்ளியம்மன்சொல்

வாடாவளையல்செட்டி தினைப்புனத்தில்வந்ததேது
போடாவதிசுருக்காவென் புகழண்ணார்கள்வருவார்

வளையல்செட்டிசொல்

வந்தால்வளை தாரேனுந்தன் மணிவாயிதழ்தந்தால்
கந்தருளுவன் 5 ஆருகனக்குறமானே

வள்ளியம்மன்சொல்

சந்தாருளளிக்கநீதானேசொல்லவேண்டும்
இந்தமுறைடேண்டாளங்களண்ணர்வெகுசூரர்

வளையல்செட்டிசொல்

சூரர்வந்தாலொளிப்பேனுந்தன் ஜோடுமுலேத்திரையில்
மாரன்செயும்வினைதீர்த்திடு மாதேயிப்போதே

வள்ளியம்மன்சொல்

கெருவத்தோடுவசைகூறிய கவரைச்செட்டிநீதான்
திரஞ்சொல்லிநீமுடியாதடா தெண்டாலடிபடுவாய்

வளையல்செட்டிசொல்

அடித்தாலுனையிறுகக்கட்டி யணைபபேனடிமானே
பிடித்தபிடிவிடுவதில்லை பேதகம்நினையாதே

வள்ளியம்மன்சொல்

துடித்தசெட்டியுந்தனிட துடுக்குசொன்னவாயை
அடக்கும்படிசெய்யவெங்க ளண்ணமாரகள்வாரார்

வளையலசெட்டிசொல்

குறவர்தம்மையழைத்தாலடி கூறுவேனதுவளையல்
பருவமுள்ளமாதே யிளம்பாளைபசுந்தேனே

வள்ளியம்மன்சொல்

கூறுதடாசெட்டிமலைக் குகையிலொளித்திருடா
மாறுகவேளந்தன் அண்ணமார்கள்வருவார்கள்

வளையலசெட்டிசொல்

சிறைமலைக்குகையிலொளித்திட வேசொன்னாய்நீயே
மாதேயிந்தவார்த்தைக்கெல்லாம் மயங்குவேனோநானே

பொது விருத்தம்.

மூர்க்கமிகுங்குறவரிங்குவருவாரென்றும்
முதுகடிமேலடிநெருங்கிவிழுமேயென்றும்
தீர்க்கமுடன்வளையல்செட்டிதனக்குச்சொல்லச்
சேனையுடனங்கணத்திற்குறவர்வந்தார்
மார்க்கவள்ளியஞ்சிநின்றாளங்கேவேலர்
வளையல்செட்டிகோலம்விட்டுமாகவர்போல்
ஆர்க்குமெய்யென்றிருந்திடவெண்ணீறுஞ்சாற்றி
ஆண்டவரைப்போற்குறவர்முன்னாடினாரோ.

இதுவுமது விருத்தம்.

பஞ்சுபோற்றலைநரைத்துவுடற்கறுத்துப்
பதறியேநடுநடுங்கிக் கிழவன்போல
மிஞ்சிவெகுதலங்களெல்லாஞ் சுற்றிவந்த
மிகுந்ததபோதனரெனவும் வேடங்கொண்டு

பஞ்சவெயிற்றுங்காதுகுடைபிடித்து
மாத்திரைக்கோலேந்திவரும்வழிதள்ளாடி
தஞ்சமென்றேகுறவர்முன்னுண்டானையர்
தன்னீன்றிக்கொண்டாடித்தான்வந்தாரே.

(வ-ம்) அதேதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் வள்ளியம்மைமடத்தில் வளையல்செட்டி வாதாடிக்கொண் டிருக்கும்சமயத்திலேவிடம்தினைப்புனத்திற்குக் குறவராகிய அண்ணமார்வருவதைக்கண்டு வள்ளியம்மன்பயந்துநிற்க அப்போதுவளையல் செட்டியாயிருந்த சுப்பிரமணியர் குறவர்முன்பு ஒருபெரியபண்டாரக்கிழவனைப்போ லுருவங்கொண்டு வருகிறவிதங்காண்க.

பண்டாரக்கிழவன்வருகிற-தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

வேலர்பாசாங்குகொண்டுவந்தார்-கிழவனாக
வேலர்பாசாங்குகொண்டுவந்தார்

காலமதிற்துயிர்ந்த ஞாலம்புரிந்திடும்வி
சாலம்பெறும்பண்டாரக் கோலங்கொண்டு தள்ளாடி வேல

முத்திதேகம்பழுத்துகண்டு — நொண்டுநொண்டிப்பெரு
மூசசுவிட்டுவாய்சுருண்டு — விழுந்துகால்கள்
தத்தித்தத்திமெள்ளக்கடந்து — நாறுவயது
சென்றகிழவன்போல்நடந்து — பண்டாரம்போலே வேல

காதில்குண்டலங்களும்பூட்டி — இழிந்துமெத்தக்
கந்தலாயொருகாவிவேட்டி — புனைந்துவேடர்
பேதைமயங்கும்புத்திகாட்டி — குளறிமொழி
பேசிக்குறவர்கள்முன் — காசிப்பண்டாரம்போல வேல

கன்னத்தோடுகன்னங்களொட்டி — பற்களெல்லாம்போய்க்
கடைவாய்வழியேஎச்சில்கொட்டி — உன்னியுன்னியே
குன்னிருமற்பொருமல்முட்டி — சிலேத்மங்கண்ட
கூனிக்கிழவன்போலக் — கானக்குறவரிடம் வேல

காசிக்குவடக்கோன்சென்றேன் — அலைந்தலைந்து
காசின்மூளைவற்றிவரண்டேன் — அப்பரோகீங்கள்
பேசிக்கொண்டிருந்ததுகண்டேன் — எனதனைக்காத்து
பெருரும்புண்ணியஞ்செய்தால்முருகனுண்டென்றுசொல்லி வே

விருத்தம்.

கவடுருவாய்க்குமாரகுரு கிழவனைப்போல்
கொம்பூன்றிப்பாசாங்கு காட்டிநின்று
தவமிகுந்தவேழ்விமலை நம்பிமைந்தர்
தன்கையில்விபூதிகொடுத் தாரப்போது

சிவசிவாவென்றணிந்துகொண்டு ஐயாவெம்மைத்
தேடிவந்தகாரியமேதென்றாங்கே
பவமகலகன்னியாகுமரித்தீர்த்தமாடிப்
பலம்பெறவந்தோமெனவும் பகர்ந்திட்டாரே

(வ-ம்) இந்தப்படி சுப்பிரமணியக்கடவுள் கிழவனைப்போல் வடிவங் கொண்டு கையில்தடியூன்றி குறவர்முன்புவந்து அவர்களுக்கு விபூதி கொடுக்க அவர்பெற்றுப்பணிந்துகொண்டு சுவாமி நீர்மெத்தப்பெரியவ ராயிருக்கிறீரே எங்களைத்தேடிவந்தகாரணமென்னவென்ன பண்டார த்திறவன் நான் கன்னியாகுமரி தீர்த்தமாடிப் பலம்பெறலாமென்றுவ ந்தேனென்றுசொன்னார் அந்தக்கிழவனைக்குறவர்கள் கேழ்க்கிற விதமெப்படியென்றால்,

குறவர்சொல்-வசனம்,

சாணைநாமம் அகோவாருஞ்சுவாமி பெரியவரே நீர் எங்கெங்க ள்தலங்கள்போய்வந்தீர் அதைஎங்களுக்குத்தெரியச் சொல்லுமையா சுவாமி பெரியவரே,

கிழவன்சொல்-விருத்தம்.

கண்டிகதிர்காமம் வடகாசியாறு
கதிபருணைத்தலம் திருவேரகமுமற்ற
எண்டிசையிலுள்ள தலமெல்லாஞ்சுற்றி
இசைந்துவந்தோமிவடமதி லகிகசேர்வை
உண்டுகன்னியாகுமரித் தீர்த்தந்தோய்ந்தால்
உடற்றேறுங்கலிதீருஞ் சென்றுகண்டு
கொண்டுவந்தால்நல்லதென்று மெள்ளவேகிக்
கொள்கையுடன்வந்தேனிதைக் குறித்திடீரே

(வ-ம்) கேளுமப்பா குறவர்களே நான்கண்டிகதிர்காமம், காசிமுதல் பலஸ்தலங்களுஞ்சுற்றிவந்தேன் இவ்விடம் கன்னியாகுமரியிருக்கிறதா ய்ச்சொன்னார்கள் ஆகையால் இங்கே கன்னியாகுமரிக்குவந்தஇடத்தி ல் உங்களைக்கண்டேனப்பா குறவர்களே,

குறவர்கள்சொல்-விருத்தம்,

நாங்கள்செய்தபாக்கியத்தாலே நாதவேதாந்தனே நீர்
தேங்குபுகழ்த்தியெங்கள் குடிசெய்வம்போலேவந்தீர்
பாங்குறங்கசடிசிங்கம் பாதைநீதும்கையொன்றுந்
நீங்குசெப்பமசிங்கு சேர்ந்தருள்மைந்தனே,

வசனம்;

அகோவாருந்தலையபாதசுவாமி நாங்கள்செய்தபாக்கியமோ எங்கள்வ ரத்திற்குக் குடிசெய்வம்போலேவந்தீர் அதனாலிந்தவனத்தில் காடுபு

விகளும்மை வழியில் பட்சிக்காமல்விட்டது மெத்தநன்மையாச்சுது உம்மைக்கண்டதுநாங்கள் செய்தபுண்ணியவசந்தானையா பெரியவரே.

குறவர்சொல்-கண்ணிகள்-இ-ம்-ஆகிரி-அடதாளம்.

ஐயாவேபண்டாரசுவாமிஆண்டோசந்நியாசி யாரோ
செய்ததவமுந்தானோவெங்கள்தெய்வம்போலும்வந்தீ ரையா
வெகுதூரம்போயலைந்துவேர்த்திளைத்துவந்தீ ரையா
ஜெகமீதிலும்மைப்போற்பரதேசியங்குந்தானே மையா
நாங்களசெய்தபுண்ணியந்தானோநாடியேவந்தீ ராண்டவரே
திக்கில்லாதெங்களுக்குத்தெய்வம்போலும்வந்தீ ரையா
கந்நியாகுமரியாடகாடுநாடலைகு வீரோ
உன்னியிரும்பும்போதுந்தன்உயிர்போவதாருதே சுவாமி
தன்னந்தனியேவனத்தில் சார்ந்துவந்தீரெங்க ளிடம்
சாவுகிறகாலமெங்கே தானலையப்போவ தையா
கானகத்தில்நாங்களும்மைக் காக்கவுந்திற மில்லையோ
தேவரீங்குவந்தபோதே செய்திடும்பாவங்கள் போச்சு
வேழ்விமலைவேடர்நாங்கள் வேலவர்க்கடிமை யாகுந்
தாழ்விலைமரியாதைக்குறச்சாதிக்குநாங்களதி காரி
ஆண்டாரேநீரிங்குவாரும்அடிமைநாங்கள்சொல்லக் கேளும்
தூண்டாவிளக்கெரிந்தாப்போற்சொல்லுகிறோம்போற்றி கேளும்
வள்ளியென்றோர்தங்கையுண்டுகுறவஞ்சிமனதன்பு முண்டு
மெள்ளமெள்ளவாருந்தினைவிளைவுதனைப்பாரு மையா

வசனம்.

அகோ வாருமையாபண்டார சுவாமி நீர்இப்போது சாவுகிறகாலத்தில்கந்நியாகுமரிக்குஎங்கேபோய் அலையப்போகிறீர்வேண்டாம் எங்கள்தங்கை வள்ளிநாயகி தினைப்புனங் காத்துக்கொண்டிருக்கிறாள் அவளுக்கு நீர்தெய்வம்போலக் கூடத்துணையாயிருந்தால் நீர்கேட்டதெல்லாந்தருவாள் இப்போது அங்கேபோவோம்தினைப்புனத்துக்கு வாருஞ்சுவாமி.

பண்டாரக்கிழவன்சொல்-விருத்தம்,

வள்ளியெனும்பெண்ணொருத்தியங்கேயுண்டோ
வளர்ந்ததினைப்புனமென்றோர்வனமுமுண்டோ
கள்ளமொழியோநிஜமோசொன்னீரிந்தக்
கானகத்திற்றலத்தைக்காட்டியென்னை
மெள்ளமெள்ளநடத்திவிளையாட்டுக்காட்டில்
வேளையிலந்தச்சீமாட்டி முன்னேவிட்டு
தள்ளிநிலவென்றிகழாமற்காக்கச்சொன்னால்
தருமமுண்டுகுறவர்குலத் தலைவமாரே,

வசனம்,

ஓகோ குறவர்கள்தலைவரே அங்கேவள்ளியென்ற பெண்ணொருத்தியிருக்கிறளோ தினைப்புனமும் உண்டோ நிஜமாயிருந்தால் அந்தவள்ளியினிடத்தில் என்னைக்கூட்டிச்சென்றுவிட்டு நான்கேட்டதெல்லாந்தரும்படிசெய்தால் அவள்கூடநானுங்காவலிருப்பேன் வேடர்களே.

குறவர்கள்-வசனம்.

அப்படியே நல்லபாக்கியம்வாருமையா கிழவனாரே

அண்ணமார்-வள்ளியம்மனுக்குச்சொல்-விருத்தம்.

கூவுமயிலேகுயிலேவள்ளித்தாயே
கோகிலமேயோர்வசனங்கூறக்கேளாய்
ஆவேசம்போல்நடுநடுங்கியுடற்றள்ளாடி
யாண்டார்பண்டாரநம்பியெடுத்துவந்தார்
பாவம்வருங்கிழவனை நீநிந்தியாதே
பரண்மீதுவைத்தவர்தான்கேட்டதெல்லாம்
ஆவியமேதாழ்வுவராமற்கண்பார்த்திங்
குதவுவையேஎங்கள்தங்கைவள்ளிமானே.

வசனம்,

கேளம்மாவெங்கள் தங்கையாகியவள்ளித்தாயே நாங்களொரு வார்த்தைசொல்லுகிறோம் இந்தப்பெரியவர்மகாவுத்தமர் இவரைநீகூடப்பரண்மீதுகாவலுவைத்துக்கொள்ளு இவரைநிந்திக்காதே இவர்மெத்ததள்ளாதவர்செவ்வையாய்ப்பார்த்துக்கொள்ளுமம்மா தாயே,

வள்ளியம்மன்-வசனம்,

அப்படியேநல்லபாக்கியம் எனதுஅண்ணமார்களே

பொது-கண்ணிகள்-இ-ம்-சௌராஷ்டிரம்,

ரூபகதாளம்,

ஆண்டாரைப்பணிந்துபசியாற்றிவைத்து
காத்திடுநீயென்றார்
அறிவுடையநம்பிமைந்தர் குறவர்களுந்
திறமுடனேசென்றார்
தாண்டாதமணிவிளக்கின்சுடரொளியாள்
வள்ளியுஞ்சம்மதித்தாள் அங்கே
தொண்ணூறுவயதுசென்றகிழவன்முன்னே
பரணைவிட்டுக்குதித்தாள்
ஒப்பாருமில்லையிந்தக்கிழவனுக்கே
என்றெதிர்போய்க்கண்டாள்
ஒருதமையுள்ளபெரியவரென் றுகந்துவள்ளி நல்ல
மனதிலன்புகொண்டாள்

தப்பாமற்றமையர்சொல்லைத்தள்ளாமற்
புகழ்ந்துவள்ளியின்றாள் ஆண்டார்
தன்னைவாரும்பாண்மீதிலுன்னியேறு
மென்றுவள்ளிசொன்னாள்

வள்ளியம்மனுக்கும்-கிழவனுக்கும்- ஏசல்-கண்ணிகள்.

வள்ளியம்மன் சொல்லல்,

பருத்தறைக்துப்பழுத்தநெருக்கிப்பண்டாரப்
பெரியகிழவனாரே
பலவீட்டிலன்னமொன்றாய்ப்பசியறிந்து நீறும்
போஜனஞ்செய்விரே.
விருத்தரோகிரினைத்தீரோவெகுரோசம்
பசிபொறுத்தீரையா
வெற்றிமலைசடிபணிந்தேதன்சற்றேறபொறும்
பசிதீர்ப்பேன்மெய்யா

பண்டாரக்கிழவன்சொல்லல்,

ஆட்சியன்னபூரணியே ஆதிலட்சுமியே
அமராபதியேவள்ளி
அன்னமேயென்வயிற்றுப்பசியுன்னைக்கெஞ்ச
விட்டுதேந்தன்விதியே
தாட்சியில்லைகுசனருளாற்றழைத்திருப்பா
ரென்பசியைத்தீர்ப்பாய்
தருணமுள்ளவேளையிலே அருமையாயென்
னுடல்தேற்றிக்காப்பாய்

வள்ளியம்மன் சொல்லல்,

நல்லதையாபண்டாரமேநாலுமக்குப்
பசிதீர்ப்பேனென்றேன் திணை
நற்கதிர்கொய்தேமிதித்து அக்கரையாய்
நான்தருவேனின்றே
வல்லிமுந்துபோற்கலந்தமணிபிடித்துத்
தினைக்கதிரைக்கொய்வேன் காலின்
மடக்கிமிதித்தேபொதியைவாருகுத்தி
உமிபோகச்செய்வேன்

பொது-மேற்படிகண்ணிகள்.

தங்கவேள்குலுங்கமெள்ளத்தான்சிரித்து
மாவிடித்தாள்வள்ளி
கொங்கைகுலுங்கசிடைதுவளவோங்கி இரு
செந்தினைமாவுந்தெள்ளி
பொங்குரசத்தேனைவிட்டுபுனிதமுடன்
பிசைந்துண்டைசெய்தாள்

பொசியுமையாவென்றுவள்ளிபசியாருந்தும்
கிழவனுக்கேகொடுத்தாள்

இதுவுமது-விருத்தம்,

திண்ணமிருந்தேதக்கிலையுங்கொண்டுவந்து
தினைமாவைத்துவள்ளித்தேவிதானும்
உண்ணுமென்றாள்பண்டாரக்கிழவன்வாங்கி
ஒருவுருண்டைமாபுசித்தஉடனேயெந்தன்
கண்விழிகள்பிதுக்குதுவாய்கசக்குதென்ன
கபடமோவல்லதுவென்காலந்தானோ
தண்ணீர்கேட்குதுவயதுகலக்குதென்றே
தயங்கிவள்ளிமுன்னுளறிமயங்கினானே.

வசனம்.

(வ-ம்) இந்தப்பிரகாரம் வள்ளியம்மன் பரண்விட்டுக்கீழிறங்கிபண்டாரத்தைக்கூப்பிட அவர்பசிக்குதென்ன நல்லதுபசியைத்தணிக்கிறேனென்றுவள்ளியம்மன் தினைக்கதிர்கொய்துகுத்திமாவாக்கி தேன்விட்டுப்பிசைந்துஉருண்டைசெய்துதேக்கிலையில்வைத்துக்கொடுக்கபண்டாரஞ்சாப்பிட்டவுடன்தொண்டைநெருக்குதுவாய்கசக்குதென்று தியங்கிமயங்கிதாகத்திற்குத்தண்ணீர்கேட்கிறவிதங்காண்க.

பண்டாரக்கிழவன்சொல்-கண்ணிகள்-இ-ம்-காம்போதி

அடதாளம்,

தண்ணீரில்லாமற்றவித்துப்பறக்குதென்றாவி — உன்மேற்
சத்தியமாய்நாவைச்சுற்றிவறட்டுதேபாவி
உண்ணாவறண்டுவுழற்றிநெடுமூச்செறியுதே — உடல்
ஒட்டியபல்லோடுபக்கிட்டுயென்னாவிகுறையுதே
பித்துக்கொண்டாற்போற்கிறுகிறுத்துத்தலைசுற்றுதே — புத்தி
பேதகமாய்ச்செவியடைத்துத்தொண்டைநீர்வற்றுதே
முந்தித்தண்ணீர்த்தாகமெத்தவெடுக்குதேபாதகி — என்னை
மோசஞ்செய்யக்கூடி பேசினதோதுஷ்டசாதகி
மாப்பலகாயமென்றென்னத்தையோகொடுத்தாயே — முழு
வஞ்சகஞ்செய்தெனையிஞ்சிக்குடிகெடுத்தாயே
வேப்பிலைபோலக்கசக்குமோதோன்றினைமாவும் — வெறி
மீறுமோதொண்டைக்குள்காறிச்சுழலுமோநாவும்
ஆதிவிருத்தவமைப்புயிவ்வளவுதானோ — ஓடி
அருந்தியொளித்தாலுங்காலன்சும்மாவிடுவானோ
ஜாதிஜனமென்றுவிவ்வேளையென்னுயிரைப்பேணுமே — நானுந்
தன்றலைகிடந்துசாகிறேனே எந்தன்கண்மணியே

பண்டாரக்கிழவன்சொல்-விருத்தம்

தந்தைதுரைசொல்லாதவர்கள்குறவரோடுன்
தமையரெல்லோருமென்னைத்தான்கூட்டி
ஆடைக்கலமென்றுன்னிடத்தில்விட்டதற்கோ
அவகேடாய்மாவெனவேநஞ்சைத்தந்தாய்
திடீரெனநான்சபாசப்போலவாங்கியுண்டேன்
செரியனடக்குக்கவலிநட்டி இருமல்விக்கல்
எடுக்குமடிபாவிதண்ணீரெனக்குத்தாராய்
இனவமனமிரங்கலையோபெண்செய்வேனே

வசனம்.

கேளாய் வள்ளிப்பெண்ணே உன்தமையன்மார் குறவர்களும் எனக்குஇந்தவசனஞ்சொல்லி உன்னிடத்தில்விட்டதை யோசிக்கால் நீயும் அவர்களும்என்னமோ பேசிக்கொண்டு எனக்குதேன்தினைமா வென்றுவிஷத்தைக்கொடுத்தாய்காறுகின்றது அதைகானமேபெ ன்றுவாங்கிசாப்பிட்டதின்பிறகு செரியனடக்குதுகவலிநட்டுகிறது இருமல்விக்கல்எடுக்கிறது ஆனால் இப்போதாவதுமனமிரங்கிதண் ணீர் எனக்குத்தாராய்பெண்ணேவள்ளி.

வள்ளியம்மன்சொல்-விருத்தம்

நன்மையேயாஞ்செய்தாறுநடனஞ்சேர்கலியுகத்தில்
துன்மைபோல்வினைக்குதென்றுற்றிருவுளமிருக்குதையா
உன்விதிபல்லவெக்குறாழ்வினைவிதிதானே நும்
என்முன்னேவந்தபோதேயென்னைச்சனிதொடர்ந்ததன்றே

வசனம்.

வாருமையாசுவாமி பெரியவரே யிந்தக் கலியுகத்தில் நான் நன் மைசெய்யத்துன்மையேவரும்உம்மைவெறுக்கவேண்டியதில்லை ஆனா ல் என்விதிவசமப்படிஎன்னிடத்தில்நீர்வந்தபோதே என்னைச்சனி பி டித்ததுபோற்காண்கிறதையாபண்டாரமே

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்-இ-ம்-புன்னாகவராளி

அடதாளம்.

மூத்தோர்சொற்றவறுமற்காத்ததற்கோகிழவனாரே நீரும்
முழுதும்பாவிபெண்றென்மேற்பழியைப்போடுகிறீராண்டாரே
காத்துபரண்மீதுமைக்கைதூக்கிவிட்டபலன்போச்சே கொப்புக்
கட்டுதேன்விட்டமாவைக்கசக்குதென்றுசொல்லவுமாச்சே
பிழைத்துப்போட்டேன்றுபேணிப்பார்த்ததுமபொய்யோ தேனிப்
பிசைந்தபாவைநஞ்சென்றேஇசைந்துசொல்லவுமாச்சே
மழைத்தவனைமைப்போலவாயைபிளக்கிறீர்ஆண்டாரே கும்பா
வம்புக்கோதினைமாவைநம்பித்தந்தேன்கிழவனாரே
தரும்புண்ணியத்திற்குத்தண்ணீர்கொண்டுவேன்வாரும் இதை
தப்பாதுஎழுமலைக்கப்பாற்போவோம்வாருமநீரும்

அருமையுடனேயின்னும் அடர்ந்தவாரும்கிழவனாரே உயக்
கன்புடனே தண்ணீர்களைக்காட்டுவேன் பெரியோரே

வசனம்.

அம்மே காவாரும்பண்டாரக்கிழவனாரே இந்தக்காடுகடந்து போனால் மலையருகிலொரு சுனையிருக்குது என்தருமத்திற்கதைக்காட்டுகிறேன் நான்கூடவாரும் ஆண்டார்கிழவரே

பண்டாரஞ்சொல்-வசனம்.

நல்லதுபேத்தி அப்படியேவருகிறேன் இந்தக்காட்டில் அனேகம்கரடிபுலிசிங்கம்பலவிருக்குது அதுகளைக்கண்டால் எனக்குப்பயமாயிருக்கும் உனக்குபயந்தானேயிருக்கும் நாமெப்படிபோகிறது பேத்தி.

வள்ளியம்மன்சொல்-வசனம்.

ஆனால்கேளுமையா எங்கள்ஜாதி சகலமானமிருகங்களையும் பிடித்துக்கட்டுகிறது இந்தமிருகங்களைக்கண்டால் எனக்குப்பயமிருக்காது எனக்கு ஆனைமாத்திரங்கண்டால்மெத்தபயமுண்டாம் ஆகிலும் இந்தக்காட்டில் ஆனையில்லைபயப்படாமல்வாரும்பெரியவரே

பண்டாரக்கிழவன்-வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்.

இ-ய-புன்னாகவாராளி-அடதாளம்.

பண்டாரக்கிழவன் சொல்லல்

கர்மமோதண்ணீர்த்தாகமெத்தவெடிக்குதடி பேத்தி இந்தக்
காட்டைக்கடந்துசுனைக்காட்டித்தண்ணீர்தந்தால்நேத்தி

வள்ளியம்மன்சொல்லல்.

ஆகட்டும்பண்டாரக்கிழவரே என்பின்னேவாரும் அதோ
அந்தமலைக்குஅப்பாலிருக்குதுசுனைபாரும்

பண்டாரக்கிழவன் சொல்லல்

ஆனபடியால்வாரேன்அன்னமேஉன்புண்ணியந்தான் எந்தன்
ஆயாசந்தீரவேநீர்தந்தால்புசிப்பேன்நான்றான்

வள்ளியம்மன்சொல்லல்.

எக்காடுஞ்சுனையெல்லாங்கடந்தோமினித்தேறும் இங்கே
இருக்குதையாசுனைபெருக்கத்தண்ணீருண்ணவாரும்

பண்டாரக்கிழவன்சொல்லல்

இந்தச்சுனையிற்றண்ணீர்பாசியிருக்குதுவேண்டாமே மெள்ள
இறங்கிக்குடிக்குஞ்சுனைஎனக்குக்காட்டினாலுண்ணலாமே

வள்ளியம்மன்சொல்லல்,

[illegible]க்கனைசெய்துதண்ணீரைப்பழிப்பாரோஆண்டாரே அதை
[illegible]த்தியப்பால்நல்லதண்ணீரிருக்குதுண்ணுவீரோ

பொதுவிருத்தம்.

அப்பாற்போய்நல்லதண்ணீர்கண்டேயாண்டார்
அன்புடன்தண்ணீரைவள்ளியருந்தும்போது

எப்பிளப்புந்தனைய டங்கி வெளியேமெள்ள
வருதல்போ லுடலநடுக்க மெடுத்துத்தள்ளி
குப்புறவேவிழுந்துகரை யதைவிட்டங்கு
கொண்டகசந்தனில்விழுந்துக் கூகூவள்ளி
தப்பியுயிர்போகுதடி யெனைஉன்கையால
கழுவியெடுத்தேகரையிற் சேர்வென்றுரே,

வசனம்.

இப்படிப்பிரகாரம் வள்ளியம்மன் சுனையைக்காண்பிக்க ஆண்டார்கிழவர் தண்ணீர் குடித்து தாகந்தீர்ந்து வெளியேவருகிறசமையத்தில கால்தள்ளாடிவிழுவானைப்போல பாசாங்கெடுத்து தண்ணீரில் முழுகி பெழும்பிக்கூகூவென்று இதுதருணம் கையைக்கொடுத்து எடுத்துவிடுவாய் என்றுசொல்ல வள்ளியம்மன் சொல்லுகிறவிதங்காண்க,

வள்ளியம்மன் பண்டாரஞ்சொல்-விருத்தம்,

இதுநமக்குலாய்ச்சனியோ பாடுதானே
இக்கிழவன் சுனைதனிலே விழுந்தானையோ
மதமிருந்தபண்டாரக் கிழவனாரே
வாருமெந்தன் கைபிடித்து வகையாயிப்போ
பதியுடனுன் கைதொடுமுன குளிர்ந்தேமெய்யிற்
பதட்டமெல்லாந்தீர்ந்ததென்றன் பாக்கியம்பெண்ணே
கதியறிந்துதண்ணீர்தந் தாயேயெந்தன்
தாகந்தீர்ந்தது மோகந் தவிர்ப்பாய்நீயே,

வசனம்,

ஆ-ஆ-நல்லகாரியம்நல்லகாரியம் இந்தக்கிழவனாலே நமக்குத்தாம் பம்தேரிட்டது ஓகோகெதம்பிடிக்கக்கிழவனே இப்படியுந் தண்ணீரில்விழுவாரோ இந்தாரும் என்கையைப்பிடித்து கரையேறுங்காணும் (பண்டாரம்) ஆ-ஆ-பெண்ணே உன்கையைத்தொட்டவுடனேயே தேகந்தனாகுளிர்ந்தது தாகமுந்தீர்ந்தது இப்போ வுன்மேலமோகங்கொண்டேன் என்மோகத்தைத்தீர்ப்பாய்பெண்ணே,

பண்டாரக்கிழவன்சொல்-கண்ணிகள்

நாதநாமக்கிரியை- ஆதிதாளம்,

தாகந்தணித்தாயே
தருமத்திற்கேற்கவடாளியே புண்ணிய
மோகந்தவிர்ப்பது
மூலிகையுன்னிடத்தில்தானுண்டு ஒரு
என்னைக்கிழவனென்றே
யெண்ணமற்கூடித்தழுவாயென்றே நிந்தனை

சொன்னபடிகேட்பேன் நீயுஞ்
சொல்வதற்கில்லா மூளாயிருப்பேன்
கனபங்காகமெனக் குடங்
கையிலணைத்துத்தழுவமனம்
இளகிக்கிட்டவருவாய் எனக்
கின்பக்கலவிகலந்தருவாய்
விரகாக்கினிமறி மெய்
மெலிவதெல்லாங்கடைக்கண்பாராய்
சனகாயுலர்வேனே முத்தந்
தந்தணைக்கத்தேகட்டிச்சேர்வேனே
வேலர்கிருபைசெய்வார் இந்த
மேதினியோரெல்லாம்போற்றிசெய்வார்
வாலைக்குமரிப்பெண்ணே குற
வள்ளியெனைவருத்தாதேகண்ணே

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்

இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

இன்றுயென்னபேச்சுரைத்தாய் குற
யெந்திறைவள்ளியென்றெண்ணுமல்
நின்றதுசாதனையே என்ன
நீதிசொன்னபடாபாதகனே
போதமெல்லாங்கெட்டுதோ கெட்ட
புத்தியுனக்குபிடிப்பட்டுதோ
நீதியில்லாதபடி சுட்டி
நில்லாதேயிந்தவினைவிடு
தீண்டாதேபாவியையோ நீயுஞ்
செய்ததவமெல்லாந்தீவினையோ
வேண்டாம்பற்றிகெஞ்சாதே நீயும்
வீண்செல்லப்பிள்ளைபோற்கெஞ்சாதே
நரைத்துப்புலச்சைகெட்டு இன்று
நாளையிற்சாகிறநாளைவிட்டு
வெறுத்தமொழியேது இவ
வேடமுன்றீதுடவசியாது

வள்ளியம்மன்சொல்-விருத்தம்.

பேசாதேநரைக்கிழவா எதிர்நில்லாதே
பிச்சைசெய்தாலும் பரப்பனாயாண்டியுநீயல்ல
ஆசாரமேதுசிவவேடமேது
அறிவுகெட்டமூடனுக்கதுதங்காது

சாதலேஷெயும் பின்போவதில்லை
எத்தனையோ சொன்னாலும் சேர்வதில்லை
கூசாமே யோசிக்கிறவா உனக்கேனிந்தக்
கொஞ்சபுத்தி கெட்டுத்தனம் கூடாதென்னோ

வசனம்.

ஓ-ஓ-பேசாதே கிழவா பிச்சைக்குவந்த ஆண்டி [illegible] பட்டதும்போல் இருக்கிறது நீ பெரியவனாயிருந்து [illegible] டும் உனக்கு இதுக்காது நான் என்ன சொன்னாலும் [illegible] மையில்லை அறிவுகெட்டவனாயிருக்கிறாய் [illegible] டியாது வந்தவழியே நடவும் பண்டாரக்கிழவனே.

பொது-விருத்தம்.

மந்திரமாய் நமாற்றி வேஷன் போக
வசையுமாத [illegible]
எந்த விதத் தெசால்லோ [illegible]
[illegible]
தன் மகவென [illegible]
சல [illegible]
மூர்த்தி [illegible]
மூமெந்குஞ்சர [illegible]

இதுவுமது-சக்கவிருத்தம்.

சூதுவினைந்ததுபோல வெழுந்து [illegible]
கோபிதகொம்பிருபானலாவீசுந்திடசூல் [illegible]
யேதினிகொண்டேயோடெடனகிகிட [illegible]
மீறியடர்ந்துவுகாரமற் செகைகாமவிசியெடுட்டனே மேல்
மோதியெழுந்திர்த்தமேக்கன் சாதனைதிர்த்திட [illegible]
மோகமனைக்கொள்துகா [illegible]
ஆதரவொன் [illegible]
ஆழிமுழுங்கமதாகரமிருந்திய [illegible]

வசனம்.

இந்தப்பிரகாரம் வள்ளியம்மனுக்குச் சுப்பிரமணியர் [illegible] சொல்லியும் [illegible] வள்ளியம்மன் [illegible] இந்தசமயதனில் சுப்பிரமணியர் இனிமேயன்னசெய்வோமென்று தனக்கு [illegible] அப்போது விநாயகர் ஆனையுருவ மெடுத்து வள்ளியம்மன் முன்னுருகிற வித்தாரமாக

ஆனைவருகிற-தரு-இ-ம-தன்னியாசி- [illegible].

கடகரிவரததுவே பந்துவராளி
கடகரிவரத்துவே
கடகரிவடக்கு-தெருவிரங்கியே
வடமெனக்கிழுமுடிசதிரும்படி கடகரி

திருபுறமன் கவியும் சிறந்திடுஞ்
சிறுகூளகின் செவியும் கிரியெனப்
பாதங்குதிருந்த சிரமும் துளையெயடு
வரிபொருவுங் காமும
விறலிலுறைந்திடும் விசையில்மாஞ்செடி
முறிவுடபடிமபடி அதிரநடந்தெதிர் கட

கீள்யில்விளங் கிடவே உயர்ந்துபொய்
மழையினமிழ்ந் திடவே வனகீதனில்
கலகமதும் விடவே வள்ளிநொங்
தலரிகங் கிடவே
குலவுமதம்பெ மனலதித்தம்பொழி
நகைகயலங்கீத நுதல்விளங்கிடய கட்

ஆனைவருந் ததியும் சிறந்துறு
மென்மையுறுங் கதியும் தெரிந்திடும்
கானவரும் புனமும் கலையனை
யாதுமுடும் பிணமும்
வானவரும்பயமா யெதிரஞ்சிட
யானைபெருங்குறவோர்மகள்கெஞ்சிட கட

விருத்தம்.

மதிபெரிந்தகடலெனவீறிட்டேசீறி
மகமாரிபொழிந்தானைவரவேகண்டு
பதரிவள்ளிநேடுங்கி யறிவுகுன்றி
பஞ்சபூதமுங்கலங்கிப் பதைத்துவாடிக்
கதலியிருகாலொடுகால் பின்னிச்செய்ய
கண்களினீர்சொரிந்திடவேலாயதாவங்
குதவுமுகத்தபயமென்றே கிழவன்பின்சென்
றோடியோடிப்பயந்தே யொளிக்கின்றாளே

வசனம்-இந்தப்பிரகாரம் விநாயகமூர்த்தி யானைரூபங்கொண்டு வ
ருகிறதைப்பார்த்து வள்ளியம்மனவள் நடுநடுங்கிப்பயந்து வேலாயு
தக்கடவுளை நினைந்துவாடி பஞ்சபூதமுங்கலங்கி பண்டாரக்கிழவன்பின்
னேயோடிவந்து சொல்லுகிறவிதமெப்படியென்றால்.

பண்டாரக்கிழவன்-வள்ளியம்மனுக்குச்சொல்-விருத்தம்

திட்டமாய்வல்லிழி மானே குறவர்மாதே
தெருதிடத்தேதிலிருந்தின் முன்னடந்தசள்ளிப்பின் னுங்
கட்டமென்னைத்தேடிப்பதற்கோ பிறகேவாராய்
களளிதொடாதேதுற்றனை நீ கபடஞ்செய்தாய்

மீட்டிமைநான்செய்தேனோகிழவனாரே
  மேகம்போலானையதுமிரட்டுதையா
ஆட்டமிகக்கொள்ளாதே போராடாதே
  அடைக்கலங்காததென்றுயாமகற்றுவீரோ

வசனம்-ஓ-ஓ-குறப்பெண்ணே முன்னம்நீசுனையில்சாருற்படியாகச்செய்தாய் இப்போதுகாட்டிலிருக்கும் யானையைக்கூட்டிக்கொண்டு என்னை அதின்முன் காட்டிக்கொடுக்கவந்தாய் என்னைத்தொடாதே என் கிட்டவும்வாராதே நில்லாய்பெண்ணே.

வசனம் - ஆனால் பண்டாரசுவாமிகளே நான் உம்மிடத்தில் மீட்டிமைசெய்யவில்லை இப்போது கருகதமேகம்போல்ஒருயானை விரட்டி என்னைக்கொல்லவருகிறது கைகால்நடுங்குது இவ்வேளை உம்மிடம் அடைக்கலமாய்வந்தேன் இப்போதென்னைகாத்து இரட்சிக்க வேண்டுமையாசுவாமி.

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்.

இ-ம்-கண்டா-துருவதாளம்

ஐயரோகிழவனாரோ என்னைக்
கன்புள்ளபண்டாரசுவாமி
மெய்யலாம்பதறயானை என்னை
மிரட்டுதேநான்என்னசெய்வேன்
விரட்டுதேஎன்னசெய்வேன் ஆனை
விழுங்கவருதென்னசெய்வேன்
ஆரிடத்திற்செல்வேனையா எனக்
காதரவுநீரொமெய்யா
வீசித்துதிக்கையால்வாரி ஆனை
விழுங்கவருகுதையாமீறி
பாசமுற்றிங்கென்னைநீரும் இங்கு
பார்த்தெனதுகவலைதீரும்
புனத்திலென்னைக்காகதோணாதோ காணும்
புலம்புவதைதிர்க்கொணாதோ
தனித்துவந்தயானைக்கஞ்சி மெத்தத்
தஞ்சமென்றேனுமைக்கஞ்சி
மதயானையைவிலக்குமையா உந்தன்
மைத்துனியாகிறேனையா
இதமாயென்னைக்காப்பீராகில் உமக்
கேர்த்தகொழுந்தியுமாவேன்
கடகமதயானையேக எந்தன்
கண்முன்னேதோற்றமற்போக
உடனேநீர்விலகச்செய்தால உமக்
குகந்தபெண்டாவேனையா

பண்டாரக்கிழவன் சொல்-மேற்படி-கண்ணிகள்.

இ-ம்-சங்கராபரணம்-துருவதாளம்.

காரியக்கைக்கூடிமட்டும் பெண்ணே
நைவசமாகிறேனென்பாய்
வீரியமாய்த்தீர்ந்தபின்பு நானு
மெவ்வேறுபோபோவென்பாய்
ஆறுமுகவேலர்மீதில் பெண்ணே
ஆணையிட்டுத்தந்தாற்போதும்
கூறியெனக்குக்கைபோட்டுத் தந்தால்
கொண்டமனம்போலாகட்டும்

வள்ளியம்மன் சொல்-மேற்படி-கண்ணிகள்

சுப்பிரமண்ணியர்பேரிலானை உந்தன்
சொந்தப்பெண்டாளேனே
தப்பாதுந்தன்கிருபைகாணும் ஆனை
தன்னையும்விலக்கவேணும

பொது-விருத்தம்.

திடத்துடன்கட்டியானை சிறவேபயந்துவள்ளி
அடைக்கலமென்றுண்டாளையா விளையததழுவிக்கட்டி
அடித்தகெந்தன்மழுந்தத் தளிர்க்கையாலணைத்தபோதே
தொடுத்ததுமுடிதந்தாமென்னத் துள்ளினன்கிழவன்றானே

வசனம்.

இந்தப்பிரகாரம் வள்ளியம்மனையானை துரத்திக்கொண்டு வருகவள்ளியம்மன் பண்டாரக்கிழவனிடம்போய் அடைக்கலமாகப் பண்டாரக்கிழவன் வேலர்மேற் சத்தியஞ்செய்யச்சொல்ல அதுபோல் வள்ளியம்மனைபெண்டாராகிறேனென்று சத்தியஞ்செய்து கட்டிக்கொள்ளநினைத்தது முடிந்ததென்று அப்பால்பண்டாரக் கிழவன் ஆனையைப்போகச் சொல்லுகிறவித மெப்படியென்றால்.

பண்டாரக்கிழவன்சொல்-விருத்தம்.

இமையவரன்பாய்ப்போற்று மிறைவனேஎனக்குமூத்த
தமையனேசோதியேகீர் சார்ந்திடுங்கிருபையாலே
கமலையின்வள்ளியெந்தன் கைவசமானாள்போ
சமயமிச்சமயங்கண்டின் தலபதிலேறுவீரே

வ-ம் அகோவாரும் எனது தமையனாகிய யானைமுகக்கடவுளே நான் நினைத்தபிரகாரம இந்தவள்ளி என்கைவசமாகி விட்டாள் ஆகையால் இப்போது நீர் தமது தலத்திற்குப்போய்விடும் தமையனே

ஆனைசொல்-வசனம்.

ஓ [illegible] கேளாய்வேலவா அப்படியே போய் வருகிறேனப்பா

பொது-விருத்தம்.

கிழவன்போல்வந்தவேலன் கிளர்ந்தசொருபங்காட்டி
கிழவலனக்குடர்ந்தேயின்று நினைந்ததுமுடிந்ததென்று
இளமையில்வள்ளிதனனுடிணங்கினையன்கையால்
தழுவினார்மதனபோகந் தாங்கினாரோங்கினாரே

இதுவுமது-விருத்தம்.

பால்மொழி மாதினைத்தழுவியனைந்துமப்போ
பகடிவிளையாடி கன்றாய்ப்பழகிச்சேரும்
வேலன்மருட்டியவேடமெல்லாமவிட்டு
மெய்ச்சொருபங்கொண்டு வடிவேலுந்தாங்கிக்
கோலமயிலும்பணிரெண்டாய்ந்ததோளுங்
குளிர்ந்தகண்களீராறுமுகங்களாறுங்
சோலையிளங்கிள்ளைவள்ளிமுன்னேதோன்ற
தொடுக்கின்றார்திருக்காட்சிகொடுக்கின்றாரே

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம்பண்டாரக்கிழவன்வள்ளியம்மனைக்கூடிப்புணர்ந்துதான் நினைந்ததுமுடிந்ததென்றுசந்தோஷமடைந்து இனிமேல்கமிடவாலாறு தெரியவேண்டுமென்று மயில்வாகனருடராய் ஆறுமுகமும் பன்னிருகையோடு தன்சுயரூபத்தைக்காண்பித்து வள்ளியம்மனுக்குக் காட்சிகொடுக்கிற விதங்காண்க

சுப்பிரமணியர்-வள்ளியம்மனுக்குக்
காட்சிகொடுக்கும்-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை

அடதாளம்

காட்சிகொடுத்தார் சுப்பிரமணியர்
காட்சிகொடுத்தார்

காட்சிகொடுத்தாரே காட்சிவராமலே
ராசசியம்பணியுன் சாமராச்சிய வள்ளிமுன்னே (காட்சி)

கோலமயிலும் பனிரெண்டுதோளுங்
குலாவிய சவுற கொடியும் கடம்புமா
லைகளாரா ராசவேலிலாவி
சாலகுருபர மேளர் தெரிசனைக் (காட்சி)

பூரணசெகங் காலங் கருணைகா
மூர்த்திபுமாறிரு நேத்ரவிசாலமுக்
[illegible] திருநீறணி சோலமுன்
காட்டிபேசதிர்பெறத் திடியவேலனார் (காட்சி)

காட்டினிலெவரும் வேடுவராய்ச்சொற்
[illegible] யநு

வாட்டிச்சிறுவ வடிவினராய்க்குற
மாதேவுனைச்சேருமகாதலை காவிடுங்க. காட்சி

வள்ளியம்மன் - போற்றி விருத்தம்.

சரவணபவனே போற்றி சடாக்ஷரமுதலே போற்றி
காதலகமலா போற்றி கழுகுமலையா போற்றி
அரகரசுகுமரா போற்றி ஆறுமாமுகனே போற்றி
வரமுதிக்குறவே போற்றி வாதனே போற்றி போற்றி

வட்டு ஓங்காரமூலகா சரவணபவனே சடாக்ஷர சொரூபாகார காசலா ஆறுமுகக்கடவுளே குறமுதிக்குருவாய் விளங்குகின்ற வேலனே போற்றி போற்றி சுவாமி.

இதுவுமது - அடி - விருத்தம்.

வேறுபேதகநினைத்தேனுக்காவுக்கும்
விந்தையறியாமல்லவள பெண்புத்தியாலே
கூறினதுந்தெரிந்து தெரியாதுமுன்செய்
குற்றமுதீர்பொறுத்தெனையாட் கொள்வாயையா
ஆறுமுகனேகுகனே எனைத்தான்சேர்ந்த
அருமைமணவாளனேயெனையாமெய்யா
தேறுகலையடியாளைக் காத்தேயுன்றன்
தெரிசனைதந்தருளுக்கு தேவதேவே

இதுவுமது விருத்தம்

ஆறுடைனைத்தேப்பெற்றெடுத்தகனத
அன்னையுமுனைப்பெற்ற பெருமான்பந்தாறே
காவலென்ததினைக்காக்க வரும்போதுகான்
கண்டசருணம்பவர்தேறு கவலைதீர்த்தேனை
கூடுமயிலேறியதற்சொரூபக்கண்டேன்
கூடவினையாடியனைக்கிடவும்பெற்றேன்
மேவிப்பிறவினைதீர்க்கேதுனை அப்பாதம்
வேண்டினேன் எனையுமுழுதாண்டிடுமே

வசனம்.

சரணஞ்சரண மென்பிராணநாதனே நான்பெண்புத்தியால் தங்களைத்தெரியாமல் சொன்னகுற்றத்தைப் பொறுத்து பூரணகிருபையுரிந்து என்னைத்தமது சொந்தமனைவியாக்கிக்கொண்டு அடியாளைக்காக்க வேண்டும் சுவாமி ஆ ஆ எனைப்பெற்றெடுத்த தந்தைதாய்செய்தபுண்ணியந்தானோ அல்லது நான் தினைக்காக்க வரும்போது கண்டசருணம்பவர்ந்தாலோ தங்களை மயில்வாகனநடராயகனோடு கூடியவிளையாடவும் பாக்கியம் பெற்றேன் நான்செய்தவினையும் தீர்த்தேன் உமதுபாதாரவிந்தத்தைநாடினேன் என்னைமுழுவதும் ஆட்கொள்ளுஞ் சுவாமி பிராணநாயகனே

வள்ளியம்மைசொல்-கண்ணிகள்-இ-ம்-புன்னாகவராளி ஆதிதாளம்.

சோதியேசுடரொளியே ஆதியநாயகா என்னைச்
சொந்தமென்று சேர்க்கவந்தநாயகா
கோதிலாதசேர்வைதந்து என்னையாண்டவா நான்செய்
குற்றமெல்லாம்பொறுத்தென்மேலன்புபூண்டவா
அனுதினமும்பேய்போலலைந்தேனை அணைந்துமருவுவாய் உம்மை
அகன்றிடாதிருக்கவுநீர் கிருபைதருகுவாய்
மண்டலந்தன்னிலே நானுறப்பதில்லையே இனி
மறுத்தொருஜென்மமில்லாமல் வரமருள்வாயே

சுப்பிரமணியர்சொல்-கண்ணிகள்-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

கோதிலக்கணக்கன்னியிற்கூடினேன்பெண்ணே நீசெய்
குற்றமெல்லாம்பொறுத்தின்பந்தேடினேன்பெண்ணே
தீதிலாமற்றோர் ஜெனத்திற்குவராதே வள்ளித்
தேன்மொழியேயுந்தனிடச் சிந்தைநோகாதே

சுப்பிரமணியர்சொல்-விருத்தம்

ஆதியிலே திருமாலின் மகளாயுன்னை
ஆக்குகமலமகள்பெற்றாள் நீயும்
மேதினியிற்சரவணப்பொய்கையிலே எம்மை
மேவுதற்குத்தவம்புரிந்தா யிதறிந்துமுன்னந்
தீநடமான்வயிற்றிற் பிறப்பாய்வேடர்
தெரிந்தெடுத்துவளர்த்திடுவார் சேர்வோமென்றேன்
ஒருசொற்படிபோலே வந்தோமிங்கே
உனக்கிருக்கத்தழுவியுகந்தோம்பெண்ணே

(வசனம்) அகோகேளாய்பெண்ணே வள்ளி ஆதியில் நீதிருமாலின் மகளாம் மகாலட்சுமிபெற்றாள் நீபருவமானதின்பிறகு சரவணப்பொய்கையில் என்னைப்புணரும்படி தவஞ்செய்தாய் அப்போது நாமுன்னிடத்திலேவந்து இந்தஜென்மத்திலுன்னைச் சேருகிறதில்லை நீகானகத்தில் மான்வயிற்றிற்பிறந்து வேடர்களெடுத்து வளர்ப்பார்கள் அப்போதுன்னைச்சேருவோமென்றேன் அதுபோல விந்தக்கல்லைக் கரையிலுன்னைச்சேர்ந்தோம் பெண்ணேவள்ளி (வள்ளியின்வசனம்) ஆனால்தங்களுடையவிபரமெல்லாம் [illegible] யறிந்தாற்போல் தெரிந்துகொண்டேன் மகாசந்தோஷம் [illegible] புணைப்போவோம் வாருங்கள்ஸ்வாமி (சுப்பிரமணியர்வசனம்) அப்படியே நீமுன்னேநட இதோபின்னால்வருகிறேன் பெண்ணே

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் சுப்பிரமணியரும் வள்ளியம்மனுங்கூடிப்புணர்ந்து பூர்விககதையும் சொல்லியபின் வள்ளியம்மன் சுவாமியைத்தினைப்புனம் அழைக்கச் சுவாமி முன்னேபோய்விடு நான்பின்னால்வருகிறேனென்று சொல்ல அப்போது வள்ளியம்மன் தினைப்புனம் வருமபோது அவ்விடம்பாங்கிமார் அம்மனைக்கேட்கிறவிதங்காண்க.

பாங்கிமாரும்-வள்ளியம்மனும்சொல்-கண்ணிகள்

இ-ம்-குறவஞ்சி-ரூபகதாளம்.

பாங்கிமார்-சொல்

முன்னமேபோனவளுமிந்நேரமென்னசெய்தாய் உந்தன்
முகம்வாடியிருப்பதென்ன மூளுந்தசேதிசொல்வாய்

வள்ளியம்மன்-சொல்

கன்னல்மொழிபாங்கியரே கானகத்திற்சென்றேன் ஆங்கே
கானல்சலந்தேடித்தேடிக் காணமல்விட்டுக்கொண்டேன்

பாங்கிமார்-சொல்

இதுவரையிலெங்கேபோனாய் தெரியச்சொல்வாயம்மா போன
இடந்தனிலேநடந்தசேதி யியம்பிடுவாய்சும்மா

வள்ளியம்மன்-சொல்

கனிபெறுகன்னீர்ச்சுனை யங்கிருக்கவுமேகண்டான் நான்
கனித்ததிலேநீராடக் கானகத்தில்சென்றேன்

பாங்கிமார்-சொல்

வஞ்சியேவனக்குயிலே வள்ளிபக்குறமாதே இப்போ
மங்கையேநின்கண்சிவந்த மார்க்கமேதிப்போதே

வள்ளியம்மன்-சொல்

கொஞ்சுங்கிளிப்பாங்கியரே கோதையரேகேளீர் காட்டில்
கொடுமானவெயிலினாற்கண்சிவந்துதடிதோழீர்

பாங்கிமார்சொல்

நங்கையரேயுன்றனத்தி னைக்குறிகளேது அந்த
நன்றுகளுங்களுக்கு நகிலுவாயிப்போது

வள்ளியம்மன்-சொல்

மங்கையரேமார்பிற்குறி வந்ததுந்தெரியாதே இப்போ
வன்மையுடன்செடிமுள்பட்டால் வடிவுந்தோணுதோ

பாங்கிமார்-சொல்.

உயிர்க்குயிராநாமிருந்தே ஒளிக்கிறாயே இங்கு
உள்ளதுசொல்லென்றாலுன் முகஞ்சுளிக்கின்றாயே

வள்ளியம்மன்-சொல்

இபங்கையோவிதுவுங்களுக் கார்சொன்னார்கள்மதியே காட்டில்
உனோதாமநீங்கள்சொல்ல வென்றலேயின்விதியே

ப

பாக்கியர்சொல்-விருத்தம்.

மைம்முகில்போலிருண்டகுழல்சரிந்தவாறும்
மணிவயிரமணிந்தவச்ரவளைகளெல்லாம்
கைகழுவியிருப்பதுபோற் காணும்வாறுங்
கன்னியேயுன்னிதழ்வெண்மைகாட்டும்வாறுந்
செய்யசெழுங்கமலமுகைக் கொங்கையின்மேற்
செங்கைநகக்குறியழுந்தித்தெரிந்தவாறும்
பொய்யுரையாதெனக்குமுன்னே நிசமதாகப்
புகலுவாய்பூவையரோபொருந்தத்தானே

இதுவுமது-விருத்தம்.

காதளவுபாய்ந்துமதத்தேறுங்கயற்கண்ணியுந்தன்
கள்ளமெல்லாம்
ஏதெனக்குங்கேட்பதென்ன தாய்மாமன்குலந்தெரியா
தொக்குமுண்டோ
பேதையையாற்றிருபிள்ளை குற்றம்பொறுக்காத
பிதாவுமுண்டோ
சோதனைநான்செய்யவில்லை நடந்தசேதியொளியாமற்
சொல்லுவாயே

வசனம்.

கேளாயம்மாவள்ளிதாயே உன்னுடைய கூந்தல்சரிந்தும் கைகளையல்கழுவியும் உன்னிதழ்வெண்மைநிறமாகியும் இரண்டுகொங்கைகளின்மேல் நகக்குறியும் இவ்விதமாயிருக்கிறபடியால் எனக்குக்குறளியாமற் சொல்வாய் உன்னுடையகள்ளமெல்லா மெங்களுக்குந்தெரியும் தாயாருடன் கூடப்பிறந்தமாமன் குலந்தெரியாதா அப்படிப்போல் நீசெய்ததெங்களுக்குத்தெரியாதா பிள்ளைசெய்தகுற்றம் பிதாபொறுக்கட்டும் ஆனதால் நடந்தசேதியைச் சொல்லுகம்மா.

வள்ளியம்மன்-விருத்தம்.

உயிர்க்குயிராயிருந்தமனதுநெஞ்சம்
உள்ளதுதெரியாதோ உண்மையோத
சகிக்கிலையபெண்ணைஇப்படிநீங்கவார்த்தை
தான்கேட்கலிங்கிவசமோசகியேபெண்ணே
பயிர்குணமாய்ப்பேசாதே நீசுவாய்க்கண்டால்
பகர்ந்த நீயின்பறியப்பசரவமோ
ஜெயிக்கவல்லனல்முகத்திக்கோபோபோதென்ன
சேதிசொன்னீர்சகியரே இதமாய்த்தானே.

வசனம். கேளு பாக்கியர்களே நாமுயிர்க்குயிராயிருந்துமென் மனமுமெங்களுக்குத்தெரியாதா இதைவார்த்தையைசொல்லியும் என்னை கள் [illegible]

கள் அப்பாருக்குச்சொல்லவேண்டியதில்லை யாதொருகாரியமும் கண்ணினால் நாலைப்பார்த்தால் சொல்லுவதல்லாமல் பார்க்காமற்சொல்லக்கூடாது அதுகளெல்லாமனதில் நினையாமல் சொல்லலாகுமோபாருங்கிளிகளே.

பொது-விருத்தம்.

நாணமின்றிவள்ளியும்பாக்கியர்கள்முன்னே
நானறியேனென்றுமொழி நவிலும்போதே
வாவியவேலவர்வேடனுருவங்கொண்டு
மாந்தளிரொன்றேக்கிலரும் வழியிலென்றன்
பாணமதுபட்டிருமயொருமானுங்கள்
பக்கல்வந்தடைந்ததையான் பார்த்துவந்தேன்
காணிரோமானதனைத்தெளிக்க
கள்ளவனைத்தாதியருக்கருளினாரோ

வசனம் இந்தப்பிரகாரம் பாங்கிமாரிடத்தில் வள்ளியம்மன் தர்க்கஞ்செய்துகொண்டிருக்க அவ்விடத்தில் வேலாயுதக்கடவுளொரு வேடுவவேடமெடுத்துக் கையில்வில்லம்புகொண்டு புனத்தில்வந்து பாங்கியரிடம் எனதுமானொன்றடிபட்டு உங்களிடம்வந்ததோவெனக்கேட்க அப்போது பாங்கிமார் கள்ளனைப்போலிருக்குதென்று எண்ணிக்கொள்ளும்போது வேடனாய்வந்தவேலவர் சொல்லுகிறவிதங்காண்க.

சுப்பிரமணியராகிய வேடருக்கும் பாங்கிமாருக்கும்
சம்வாதம்-கண்ணிகள்-இராகம்-காம்போதி-அடதாளம்.

வேடன்-சொல்

கைக்கணைபாலெய்த மானிக்கேதான்வரக் — சும்மா
கண்டதுண்டோகிள்ளைகாள்
கள்ளத்தனமில்லாத உள்ளதைச்சொல்லுமென்
கண்ணிபமேபிள்ளைகாள்

பாங்கியர்சொல்.

திக்குத்தவிமாறியிங்கேயொருமானுந் — இப்போ
திசைகெட்டுவந்ததென்றாயண்ணே
திண்மையாய்நீயெய்தமானிதுகேகாண்கிலம்
திரும்பியேபோய்விடுமண்ணே

வேடன்-சொல்

எக்கிலெய்க்கெடுக்கோடியேவந்தமான் — சும்மா
இங்கே [illegible] போகும்
[illegible] ப்படாஞ்சொல்லாமல்வீணே
[illegible] சொல்லாகும்

பாஙகியர்-சொல்

அக்காளாய்ச்சொன்னாய் முக்கியமாயெஙகள்
அண்டையிலேவந்துவேடா உன்சொல்
அடிக்காதுஇஙகேதொடுக்காதுவீண்சண்டை
அண்ணேநீகள்ளனேடா

வேடன்சொல்.

எள்ளளவாகிலுமெண்ணிநீபாராமல்
என்னைக்கள்ளனென்றாய் நான்
எய்தமானிவ்விடம்வாராமலெவ்விடம்போய்
இயம்பிடுவீர்நன்றாய்

பாஙகியர்-சொல்

உள்ளஙகைக்குள்ளேநீ வைகுந்தஙகாட்டுறாய்
உள்ளதுந்தக்காது வீணாய்
மூக்கிககரணம்போட்டெக்கியுநீயிங்
குறைத்தமான்சிக்காது

வேடன்-சொல்

ஆரணங்கேவந்தமானையொளித்து
அறிகிலோமென்றுரைத்தீர் இது
அநியாயமல்லவோஎன்மான்சிக்காதென்றீர்
அதைநீங்கள்விட்டிடுவீர்

பாஙகியர்-சொல்

காரணமாகவேநீயெய்தமானுக்குக்
கால்ரண்டுகையுமுண்டோ இது
காதும்பொன்னோலையுங்கோதுங்குழலும்
கழுத்திற்பணியுமுண்டோ

வேடன்-சொல்

மங்கயரேசகியேயொருகாரியம்
வாக்கினிற்பேசனறே இது
வழுத்தியசொற்படியெய்தமானுக்கு
வகையுண்டுரைப்பேனின்றே

பங்கியர்-சொல்

இங்கேயுரைத்திடுவோமென்றுசொன்ன
தெளகுத்தெரியுமண்ணே இது
ஏற்காதுந்தனுக்கிடுக்கமும்மந்திடும்
இதுநீயல்லவண்ணே

பாங்கியர்சொல்-விருத்தம்.

தனித்துரைக்கலேண்டிமென்றுசொன்னீர்நச்
சமாசாரம்யானறிவேன்சாற்றக்கேளும்

இலிங்கமொழி வள்ளியும் நீர் சுனைக்குப் போன
இடந்தனிலே சேர்ந்தணைந்த தென்னகுறதே தா
மனதறிய மாமாயம் செய்தாய் அதனியான
மாதரில்லாமற் புணர்ந்தால் மருங்கே சாற்சொல்லாய்
உனக்கும் வள்ளி தனக்குமொரு வசைவராமல்
உயிர்க்குயிராய்க் காப்பவரார் குறத்தியரே

வசனம்.

ஓகோ கேளுமையா வேடரே நீர் எங்களுக்குத் தனித்துச் சொல்லு தேவனென்ற சமாச்சாரம் எங்களுக்குத் தெரியும் எங்கள் வள்ளியம்மனை நீர் சுனைக்குப் போனவிடத்தில் சேர்ந்தணைந்தீரோ என்னகுறே சேர் இது என்ன மாயமோ நாங்களில்லாமல் நீ புணர்ந்தது சரியானதையோ உங்களிருவருக்கும் யாதொரு இடறில்லாமல் காக்கப்பட்டவர் யாவர் சொல்லுமையா வேடரே.

பாங்கியர் சொல்-விருத்தம்.

மைக்குழல் சேர்ந்திருவிழியஞ் சிவப்பச் செங்கை
வளையொரியு விருவரொன்றாய் மருவும்போது
பக்கவலுவாயிருவ ரில்லாவிட்டால்
பலபேர்க்குத் தெரியுமதிற் பகைவந்தெய்துஞ்
சிக்கெனவெம்மிடத்திலிது சொல்லொணாதோ
தேவிவள்ளிக்கெங்கள் மனந் தெரிந்திடாதோ
அக்கரையோ வெமக்கினி மேன் வீண்பொல்லாப்பு
அனுபவிப்பீர் வருவதுபட் டறிகுவீரே

இதுவுமது-விருத்தம்.

நடந்தகாரியங்கள் முன்னே நடந்ததைச் சொல்லியென்ன
தொடர்ந்து யானையைத்தான் குத்திச் சொல்லினால் மறைப்போம் நாங்கள்
மடந்தையை வனத்திற் கூடி வந்துபோயிருப்பீரிந்த
இடந்தனில் நில்லும் யாங்களேகியே வாறோமையா

வசனம்.

இன்னமுங் கேளுமையா வேடரே எங்கள் வள்ளித்தாயை நீர் மருவும்போது எங்களுமதியிருந்தால் உங்களிருவருக்கும் மேன்மையுண்டு அவ்விதம் நடவாத காரியத்துக்கு யாவருக்கும் பகையுண்டாம் இது எங்களுக்கு ஆகிறதென்ன முன் யானையைக் குத்தி யொருபெண் சொல்லினால் மறைந்தாள் அப்படி போல நீர் உம்முடைய எண்ணத்தை யெங்களுக்குத் தெரிவித்தால் வரப்போக நாங்கள் நடத்தோமா ஆகிலுஞ் சந்தேகமில்லை நீரிவ்விடமிரும் யாங்கள் வள்ளியிடம் போய் மறுபடியும் வருகிறோமையா வேடரே.

பாங்கியர்சொல்-விருத்தம்.

சாந்தசணைமாகின்ற வள்ளித்தாயே
  கலைதேடியோரோரொருவன் றனுவொன்றேந்தி
மாநதுளிரொன்றேந்தியொரு மானைத்தேடி
  வந்துநின்றான் நீயறிந்தால் வழக்குண்டம்மா
பார்த்திருந்திங்கொளியாதே சொல்வாய்தேனும்
  பாலுமுடலுயிருமெனப் பழகினனஞ்
சேர்ந்திருந்துமவேற்றுமையோ செய்தாயுந்தன்
  சேதியெல்லாந்தெயு மினிச் செப்புவாயே.

வசனம்:

அகோவாராய் வள்ளித்தாயே கையிலொருவில்லும் அம்புமேந்தி ஒருமானைத்தேடி யொருவேடன் வந்துநிற்கின்றான் அவனை நீயறிந்தால் ஒளியாமல் எங்களிடத்தில்சொல்லு நாம்தேனும்பாலும் உடலுமுயிரும் போலிருந்தோமே அப்படியிருக்கஎங்களுக்கு மறைத்துச்சொன்னால் உன்சேதியெல்லாம் எங்களுக்குத்தெரியும் இப்போதாவது நிச்சயமான்வார்த்தையைச் சொல்லுமம்மாதாயே.

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்.

இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்,

மின்னுகிறேனுள்ள சேதிசொல்லக்கேளாய் — சகியே
மெத்தமெத்தவுண்டதை விளம்பக்கேளாய்
கள்ளமில்லாவுங்களிட மறைத்திடுவேனோ — சகியே
கனவிலுமுங்களுக்கும் பொய்யுரைத்திடுவேனோ
விதிவசஞ்சூட்டி வைத்ததைக்கூறியாவதேன் — கண்ணி
மீறிற்சிக்கிக்கொண்ட மீன்கிசதைகோவதேன்
பதினுடனேற்றுவேடர்போ லிங்குவந்ததும் — என்முன்
பஞ்சையைப்போற்றஞ்சமென்றே கெஞ்சிநின்றதும்
வெங்கைமரமாய்ப்பாணி லோங்கிநின்றதும் — சகியே
பெத்தவேழமுக்கிழவனைப்போற் றாங்கிநின்றதும்
தாகத்தண்ணீர் தவிக்குதென் றேங்கிநின்றதும் — பின்பு
தண்ணீர்ச்சுனைக்காட்டிட நானேகிச்சென்றதும்
ஆசையால்பெண்ணேயென் றனைபிடித்ததும் — சகியே
ஆனைவரவழைத்ததும் யான்றுடித்ததும்
நரிபாகநின்றதில் பின்னேபோனதும் — ஆங்கே
காதலனேபோலு மீண்டுக்கூடவேனதும்
ஓவியமோயப்பால் வேலுமயிலுங்கண்டதும் — எனக்
முகந்துவந்துவேலர் சொரூபங்கொண்டதும்

ஆகிலேபான் வடவிரண்டு மாகிறேனென்னே சகியே
அந்தவேலவரிந்தவேடராமடி பெண்ணே

பாங்கியர்சொல்-விருத்தம்.

அப்படியேநல்லவிசேஷந்தானீயும்
 ஆண்டகுலதெய்வமதைப்பணிந்துகொண்டால்
இப்படியென்றொருவார்த்தை சொல்லொணாதே
 எல்லார்க்குநலங்கேடி யிசைசகாயமமா
செப்புமொருசொல்லிருந்தா லவளைநீயுந்
 சேர்ந்தநல்லெதுக்கோம பலனைப்பெற்றோம்
கொப்பெனவேபவரிடத்தினிற்போய்நாங்கள்
 குணமுடனேசேவைசெய்து கூட்டிவாரோம்

வசனம்.

மகாசந்தோஷம் மகாசந்தோஷம் அநேகநமது குலதெய்வமாகிய சுப்பிரமணியக்கடவுளை நீயணிந்துகொண்டது நல்லபாக்கியந்தான் ஆகிலும்பெண்களுக்கு இப்படியென்றொருவார்த்தைசொல்லக்கூடாதோ இப்போது நீசொல்லிவந்ததெல்லாம நிசந்தான் நாங்கள் அவரை இவ்விடம்அழைத்துவருகிறோம் அம்மாவள்ளித்தாயே

வள்ளி-வசனம்

நல்லதப்படியே அழைக்கவாருங்கள் தோழிமார்களே

பாங்கிமார்சொல் விருத்தம்.

அருமையுடனிங்குவந்த வேலவரே நீர்
 அந்தரங்கமாகவும்வந்திங்கே கூடி
மருவுதற்கெக்களைபாக்கியம்பெற்றோம் நீரும்
 வரக்கருணையின்றுபெற்றோம் வறுமையற்றோம்
கருணையுடன் வள்ளியைநீர் கைவிடாமற்
 கலந்தணைந்துசேர்த்துக்கொள்ளும் கபடில்லாதிப்
பாண்மீதில்வந்திருந்து வள்ளிமீது
 பட்சம்வைத்தெங்களையுமிரட்சிப்பீரே

வசனம்.

சரணஞ்சரணமையா சமூகாசல சுப்பிரமணியக் கடவுளேபோற்றிபோற்றி எங்கள்வள்ளியம்மனைத்தாங்களே சேரும்படியாயெங்கள் பாக்கியம் பெற்றோம் இப்போதுவள்ளியம்மனிருக்கும் பாண்மீதுதாங்கள்வந்து வள்ளிநாயகியுடன் கூடிவிளையாடியிருந்து இரட்சித்து எங்களையும்பாதுகாக்கவேண்டும் சுப்பிரமணியக்கடவுளே,

சுப்பிரமணியர் வசனம்

அப்படியேபோவோம்வாரும் பாங்கிமார்களே

பொது-கண்ணிகள்-இ-ப-சாரங்கம்-ரூபகதாளம்,

ஞானடையரிந்தேசகிமார்கள் தன்புனக்கிற் போந்தார்
தருணமெய்ம்றேவள்ளியிடந்தனாரியும்பின் சேர்ந்தார்
கூடிவிளையாடிமுத்தந்தொடுத்துவள்ளி மகிழ்ந்தாள்

குமரகுருபரன்கலவி கூர்ந்துசெய்ய உகந்தான்
சிமிள்முலையைநெருடிவள்ளித்திருமார்பிற் கூர்ந்து
சுந்திரவேளதிகசயந்தேடிவிளை யாடி.
அமரர்பணிவேலர் வள்ளிக்காசைமெள்ளக் கொடுத்தார்
அன்புவைத்தேவள்ளியும் பின்னதிகமோகந் தொடுத்தார்

வள்ளியம்மன்சொல்-கண்ணி.

அறிந்துமறியாது குறையதுசெய்யினுஞ்சுவாமி
அன்புவைத்தேயெனையணைந்து ஆதரிப்பீசுவாமி
மறந்தெனைவிட்டகலாமல் மறுமுகம்பாராமல்சுவாமி
வாஞ்சைவைத்தென்தனையணைந்துமருவுமையாசுவாமி

சுப்பிரமணியர்சொல்-கண்ணிகள்.

ஆமெனக்குமூத்ததுடியாளுண்டடி பெண்ணே
அவளிலுமுன்மேலதிகலாசைவைப்போம் கண்ணே
சிமையிலுள்ளச்சகலச்சீவசெந்து தனக்கே
இனந்தினமும்வரங்கொடுக்கச்செயல்தருவோ முனகே
வள்ளிகுமாரிதேபச்சைமரகதமே குயிலே
மனம்போலவெனக்குவாயத்தவஞ்சிமட மயிலே
வள்ளளவும்பிரிவதில்லையென்மொழிதப் பாதே
இருவருந்தலங்கடோறுமிசைந்திருப்போ மாதே
கோனதயடர்குறவர் தினைகொய்ய வருவாரோ
குலத்துடனேசேர்ந்துசிற்றூர்க்குடியிலிருப் பீர்
மாதரசேபோயினும்பின் வஞ்சைமற வாதே
மனதிலெனைநினைந்தவுடன் வருவேன்மலை யாதே

பொது கொச்சகக் கலிப்பா.

மானைப்பொருவும் விழிவள்ளியிடஞ்சேர்ந்துமுரு
கோனும்புரதுக்குவட்டருகேசென்றபின்பு
ஏனற்புனங்காத்திருக்கும் வள்ளிதன்னிடத்தில்
கானகுறவர்கதிர்கொய்ய வந்தனரோ

வசனம்.

இங்கப்பிரகாரம் வள்ளியம்மனுக்குச் சிலபுத்திமதிகள் சொல்லி வேழ்விமலைக்கருகாமை சுப்பிரமணியர்சென்றபின் இங்கேதினைப் புனத்தில் வள்ளியிடம் அண்ணமார்களுஞ் சிலகுறவர்களுந் தினையை அறுக்கவருகிறவிதமெப்படி யென்றால்.

குறவர்-வேடர் தினையறுக்கவருகிற கண்ணிகள்.

இ-ம்-மோகனம்-ரூபகதாளம்.

குறத்திகுன்றவர்தினைப்புனத்தினில்கூடியேயவிளை யாடியே
கூடையும்பண்ணுவகத்தியுங்கொணர்ஜாடையுனாக்க சுற்றியே
உறத்திறுலள்ளிககளத்திற்சேர்த்திக்குபர்நதம்பாரு செய்யுங்கள்

உலர்ந்தமேருவென்னவே-கதிர்-குவிந்தவாணி றன்னவே
தார்த்துக்குத்தக்கதிட்டமாய்க் கூடுஞ்-சுமைமேலாய்வெகு சட்டமாய்
தான்சுமையெடுத்திட்டனர்-வள்ளி-மானையுமழைத் திட்டனா

அண்ணமார்-வசனம்,

அகோவாரும் வள்ளிநாயகியே நாம்பயிரிட்ட தினைக்கதிர்களை யெல்லாம் கொய்து அவரவர்கள் சுமையைக் கட்டியெடுத்துக்கொண்டு சிற்றூருக்குப்போகிறபடியால் இனி இவ்விடத்திலிருக்கவேண்டிய காரியமில்லை கூடவேவாருமம்மா வள்ளிநாயகி,

வள்ளியம்மன் வசனம்,

நல்லது அப்படியேவருகிறேன் நடவுங்கள் அண்ணமார்களே.

வள்ளியம்மன்சொல்-விருத்தம்.

அறிந்துயர்பாங்கிகேளா யண்ணமார்கதிருங்கொய்து
பரிந்துடன் கூவியூர்க்குப் பண்புடன்வாவென்றாரே
பொருந்தியேயென்னைச்சேர்ந்து புணர்ந்தகாயன்றான்வந்தால்
வருந்தியேசகியேதேடி வாடுவாரதற்கென்னசெய்வேன்.

வசனம்.

கேளுங்கள் எனதுபாங்கிமார்களே என் அண்ணமார்கள்வந்து தினைக்கதிரைக்கொய்துக்கொண்டு என்னையுஞ் சிற்றூருக்குக் கூட்டிப்போகிறபடியால் என்னைச்சேர்ந்த என் பிராணநாதர் என்னைத் தேடிக்காணாமல்வாடுவாரோ அதற்கு நான் என்னசெய்வேன் தோழிமார்களே,

வள்ளியம்மன்-புலம்பல்-கண்ணிகள்

இ-ம்-நீலாம்புரி-திரிபுடைதாளம்,

அன்னமேயென்பாங்கிமாரே என்
அண்ணர்வந்தழைக்கின்றாரே
என்னசெய்வேன்தோழிமாரே அண்ணர்
என்னையுமழைக்கின்றாரே
வேலவனையினிக்காண்பேனோ நானும்
விட்டுத்தனித்திருப்பேனோ
வாலமுருகனைநானோ விட்டு
மனைக்கெப்படிதான்போவேனோ
பேடிழந்தவன்றிலானேன் நல்லப்
பிணையிழந்தகலையதானேன்
கூடிழந்தபட்சியானேன் மாக்
கொம்பிழந்தகொடியதானேன்
பரனைவந்துதேடுவாரோ வேலர்
பரதவித்துவாடுவாரோ
வெறுந்தினைப்புனத்தைப்பார்ப்பார் இனி
மிஞ்சிப்போச்சுதென்றுள்ளம்வேர்ப்பார்

கண்டனுப்பிப்போவோமென்றால் — அண்ணர்
கடிந்தகோபமாவாரென்றால்
விண்டுமனைக்கேகலாமோ — வடி
வேலவர்மனமென்னவாமோ

வசனம்.

அகோவாரும் பாங்கிமார்களே என் பிராணசிநேகிதராகிய வடிவேலனைக்கண்டு விடைபெற்றுக்கொண்டு ஊருக்குப்போகவேண்டுமானால் அண்ணர்களடிக்கடி கூப்பிடுகிறார்கள் அவர்களுக்குத் தெரிந்தால் கடிந்துவார்த்தைசொல்லுவார் இதற்கென்ன செய்யலாம்பாங்கிமார்களே

பாங்கி வசனம்,

ஆனால் வாருமம்மா வள்ளித்தாயே சுப்பிரமணியக்கடவுள் ஒருவேளை இங்கேவந்து உன்னைக்காணாதிருந்தால் சிற்றூருக்குவருவாராகையால் உன்னை யவரிடஞ்சேர்க்கிறோம் இப்போது போகலாம் வாருமம்மா வள்ளித்தாயே.

வள்ளியம்மன்சொல்-விருத்தம்.

என்றயாமாரிடத்திற்சொல்வேனையோ
இன்னம்வடிவேலர்வரவில்லையேநான்
சென்றிடசிற்றூருக்குக்காலேகவில்லை
சீக்கிரமாயெனையண்ணரழைக்கிறார்கள்
நின்றுநின்றுபார்த்தாலும்போய்த்தான்றிரும்
நினைந்துதானழுதாலும்வருவதில்லை
அனதில்களைக்கிள்ளைகளேபோய்வாரோருன்
அன்பர்வந்தாலவர்தனக்கிதுரைக்குவீரே.

வசனம்.

அகோவாருங்கள் மயில்கள் குயில்களே பட்சிகளே மிருகங்களே என் பிராணநாதரிங்கென்னைத் தேடிவந்தால் உம்மைமறக்காமல் வள்ளியங்கிதேடி ஊருக்குப்போனாள்நீர்வந்தால்சிற்றூருக்குதுமார்க்கமாய்வாச்சொன்னாளென்று சொல்லுங்கள் பட்சிசாதிகளே,

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்.

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்

கோகிலமேகிள்ளைகள் — நான் சுவாமி
குறித்தெனைத்தேடிவந்தால்
வாகுடன் சிறறூர்க்கு — நான்போகும்
வழிமார்க்கஞ்சொல்வீர்களே
ஆட்வாண கந்தன் — புனத்தனில்
ஐயோகாணேனென்று
தேடியேயிங்குவந்தால் — நான்போகிற
திசைதனைச்சொல்வீர்களே

மாங்குயிலேகிளியே என்னைச்சேர்ந்த
மன்னவர்தேடிவந்தால்
பாங்குடன்சிற்றூர்க்கு நான்போகின்ற
பாதையைச்சொல்வீர்களே
கும்பிட்டேன்மானினமே சுவாமி
குகனிங்கேதேடிவந்தால்
கும்பிட்டுசிற்றூர்க்கு வரச்சொல்லிக்
கொண்டாளென்றேசொல்லுவீர்
மாடப்புறாவன்னமே என்னைச்சேர்ந்த
மன்னவர்தேடிவந்தால்
நாடியேசிற்றூர்க்கு நான்போகிற
நன்மார்க்கஞ்சொல்வீர்களே
விண்ணும்பசுங்கிளிகாள் என்சுவாமி
வேலவர்தேடிவந்தால்
இல்லாமல்சிற்றூர்க்கு வரும்படி
நீங்களும்சொல்வீர்களே
பாங்கியுடனேசேர்ந்து சிற்றூருக்குப்
பாதவித்தேகுமென்னைச்
சேர்ந்தகாங்கேயன்வந்தால் என்சேதி
தெரிவுஞ்சொல்வீர்களே
அன்புள்ளவன்னங்களே என்சுவாமி
ஆண்டவர்தேடிவந்தால்
நம்பினேனுனுங்களை வழிமார்க்கம்
நன்றாய்ச்சொல்வீர்களே

வள்ளியம்மன்சொல்-கொச்சகம்,

கூவுமயிலினமே கூர்ந்தகருவண்டினமே
மேவியென்னைச்சேர்ந்திணைந்த வேலவனுமிங்குவந்தால்
ஆவிபதறுமலாதரவாய்ச் சேதிசொல்லி
மாவிசையசிற்றூர்க்கு வரச்சொல்வீரே.

இதுவும்-கொச்சகம்,

அன்னமேகிளிகளே அழகுசிறைவண்டினமே
பொன்னுலகின்வேலிருந்தாய் புனத்தனிலேவந்தாக்கால்
கன்னிவள்ளியுந்தவிப்புடன் ரானகத்தைவிட்டேகி
செந்நெல்வளர் சிற்றூர்போய்ச்சேர்ந்தாளென்று,

வசனம்.

ஆ-ஆ-அன்னங்களே தாரங்களே மயில்களே குயில்களே மாடப்புறாக்களே வண்டுகளே மான்களே உங்களை நான் கும்பிடுகிறேன் என்னைச்சேர்ந்த என் பிராணநாயகராகிய சுப்பிரமணியக்கடவுள் எவ்

ளைத் தேடிவந்தால் மிகவும் பாதகித்தராடி பாக்கியரும் வள்ளியும் அண்ணமாருடன் சிற்றூருக்குப்போனார்களென்று இந்தவழியையுங் காண்பித்து நான்சொன்னதாய் என் பிராணநாயகருக்கு தன்னைவேலவ ரு நீங்கள் சொல்லவேண்டும் பட்சிஜாதிகளே.

பொது-விருத்தம்.

வற்றாதவேழ்விமலைக்குடிசிற்றூருக்கு
  வள்ளியம்மன்வந்தபின்புவளமையாகப்
பெற்றோருநம்பிராஜேந்தான்றானும்
  பிரியமுறமகளையெடுத்தணைத்தேமுத்தம்
சற்றேதந்திடுந்தாயேயனைவுங்கொஞ்சிச்
  சார்ந்தகுலவேடரெல்லாந்தான்கொண்டாடக்
குற்றமில்லாமனையையும்விட்டகன்றிடாமற்
  குளிர்ந்துமகிழ்ந்திருமெனவேபுகழ்ந்தாரன்றே.

வசனம்.

இந்தப்பிரகாரம் வள்ளியம்மன் பட்சிகளோடுசொல்லிக்கொண்டு வந்து தங்களிருப்பிடமாகிய சிற்றூருக்குவந்து சேர்ந்தபின் தாய்தகப்பனாகிய நம்பி மகாராஜனும் நங்கை மோகினியும்வேடர்களுந் சந்தோஷமடைந்து வள்ளியம்மனையெடுத்து முத்தங்கொடுத்துப் புகழ்ந்து மனையில்விரும்புமாவென்றுசொல்ல வள்ளியம்மன் சொல்லுகிற விருத்தங் காண்க.

வள்ளியம்மன்சொல்-விருத்தம்.

மாதாவேயெனைவளர்த்த தாயேயுந்தன்
  மகிமையினாற்றினைக்காத்துவந்ததாலே
பேதாதிபேதங்கள்வந்ததில்லைப்
  பின்னைவொருமயக்கமில்லைப்பிணியில்லை
ஆதாரமாகவுந்தன்றனைக்காணாமல்
  அங்கமது மெலிந்ததல்லாலருளக்கேளு
கோதில்லாவுந்தனைநான்கண்டபோதே
  குளிர்ந்தெந்தனிடமுமுங்குளிர்ந்ததின்றே.

வசனம்.

அகோவாருமம்மாதாயே நான் தினைப்புனங்காத்திருந்ததிற் பேதங்களில்லை உன்னைக் காணாமலிருந்ததே எனதுதேக மெலிந்து மனம் வேறாயிருந்தது இப்போதுன்னைக்கண்டபோதே என் சரீரமும் மனதுங்குளிர்ந்ததம்மாதாயே.

நங்கை-வசனம்.

அப்படியே நல்லபாக்கியம் வேலவர் கிருபையால் வீட்டில்விரும்பம் மாதாயே.

பொதுவசனம்.

இந்தப்பிரகாரம் சிற்றூரில் வள்ளியம்மன்சேர்ந்து தாயாரிடமிருக்கும்போது தன்னைச்சேர்ந்த வேலவர் காணோமென்கிறதாய் அவர்மீதுமோகங்கொண்டு பாங்கியோடு பிரலாபிக்கிறவித மெப்படியெனாறால்.

வள்ளியம்மன்சொல்-தரு-இ-ம்-சுத்தஸோடி-ரூபகதாளம்

பல்லவி,

இன்னம்வரக்காணேனேசேடி என்பிராணநாதர்
இன்னம்வரக்காணேனேசேடி

அநுபல்லவி.

அன்னமுங்கசப்பாச்சே ஆருடன்சொன்னாலுமேச்சே இன்

சரணங்கள்.

மறக்கமனம்வருவ தில்லை எந்தன்கண்மணிகள்
உறக்கமும்வழிவ தில்லையே
இறக்கமில்லாததேனோ என்மேல்விரோதந்தானோ இன்
மாதமோதூரமுந் தானோ என்னைத்தேடிக்
கந்தன்வாராத துமேனோ
மாதேயென்பாங்கிமாரே மன்னனிடஞ்சொல்வீரே இன்
மானேஎனைத்தினப்புணர்ந் தேடி வந்தவேலர்
வாராதிருப்பதென்ன சேடி
ஏனோஎந்தன்மீதிறகோபம் என்சொல்வேனவர்பிரதாபம் இன்

விருத்தம்.

புளகமுலையிரண்டும்விம்மிப்பசுமைபூர்பபாய்
பூசுசவ்வாதுங்கதம்பப்பொடியின்வாசங்
களபசுகந்தாதியெல்லாம்பொருந்திடவும்வேர்வை
கனைந்தோடமன்மதவேள்சரங்கள்பாயப்
பளருமடமாதனையுமேசத்தென்றல்
பாயத்துபுலிபோற்சிறபசந்தகோகை
இளமயில்போலவள்ளியும்பஞ்சணையிற்சேர்ந்தே
ஏங்கிறாள்விரகமுங்கொண்டேங்கினளே,

பொது-கண்ணிகள்-இ-ம்-மோகனம்-அடதாளம்.

வரச்சொல்லிச்சொல்லுவாள் இன்னமுமவர்
வாவில்லையென்பாள்
உறக்கமும்கிளையாள் தனதுநெஞ்சம்
உறுதிகொாதல்லவாள்
பூமலர்முடியாள் ஆவின்பாலைப்
புட்டியுங்குடியாள்
காமலாகிரியாள் மதன்காமக்
காலச்சவின்குதியாள்
சந்தனங்கரைப்பாள் அனைக்கைபால்
தான்வாரிபிறைப்பாள்

சிந்தூரங்களிப்பாள் அவனிட்டத்
திலர்தமுமழிப்பாள்
அன்னமூமருந்தாள் கனிரசம்
அமிர்தமும்பொருந்தாள்
பொன்னணிதுறந்தாள் கைவளையும்
போனதுமறந்தாள்
இதுவென்னசூதோ வள்ளிக்குகந்த
இடரும்நீங்காதோ
மதிமோசமென்மென்றார் தாய்தந்தையில்
வகைபார்ப்போமென்றார்

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் வள்ளியம்மன் விரகவாதனையி லழுந்தியிருக்கும் போது தாய்தந்தையர் இது என்னமோ கானகத்தில் வந்த பீடையோ அல்லது மருளோவென்று பூசைகள்போட்டுப்பார்க்கிற விதமெப்படி யென்றால்.

விருத்தம்.

ஐயனார்தனக்குமன்னையுங்கன்னுமார்க்கும்
அஷ்டதிசைதுஷ்டதெய்வமதற்குந்தங்கள்
மெய்தியாம்விளங்குகுலதெய்வமவெற்றி
வேலர்தெய்வந்தனக்குமெத்தவேண்டிவேண்டிக்
கைக்குளிராணிக்கைகுறவர்கட்டிக்
கருங்குழலாள்வள்ளிசிறுகன்னிமீதோர்
வெப்பகருப்பணுகாமல்புலம்பிடாமல்
மெலியாமறகளியாட்டம்விரும்பினாரோ,

பொது-கண்ணிகள்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

கொண்டாடிப்பூசையிடத்தெம்பிட்டாரோ கானக்
குறவரெல்லோருங்கூடிக்கும்பிட்டாரோ
பண்டாரப்பெட்டிகையிலெடுத்தாரோ நல்ல
பண்புடையகோவிலில்வந்தடுத்தாரோ லாடத்
தம்பிரானுக்குப்பொங்கல்தணிப்படைத்தார்
அம்பாரம்போய்முட்டைபொரித்துவைத்தார்
செங்கரும்புகுளநீருங்குவித்துவைத்தார் சாவல்
செங்கடாஇறுநூறுஞ்சமைத்துவைத்தார்
வங்கியும்வீச்சரிவாளுஞ்சமுதாடும் சொர்ண
மணிக்கட்டிவல்லயங்கப்பறையோடு
கள்ளுக்குடமிருநூறுஞ்சுறற்றியும்வைத்தே நல்ல
கறியுடன்சாராயங்குத்தியும்வைத்தே

மங்கையர்குறவர்கூடிக்கூத்தாடிட்டே சுவாமி
வந்துதலைசுற்றியாடிக்குலவையிட்டே
சங்கையுடன்பொங்கல்வைத்துத்தாண்டிறோர் சுற்று
தம்பிரான்கள்பெயர்சொல்லிவேண்டிறோர்
வீரகாளிவனப்பேயச்சிசெண்பகவல்லி இந்த
வேளைக்குலந்துதவும்பாதாளவல்லி
ஆரபாரக்கேட்டைமலைக்கறுப்புசாமி வெற்றி
ஐவண்மடலாட இருளப்பசாமி
காவனத்திலிட்டநிக்கிலுவனதெய்வமே யென்று
கைபெடுத்துவேடர்கள்போற்றிசெய்துமே
சென்னிவணங்கிக்கும்பிட்டுக்கைபெடுத்தார் வேடர்
செழிப்பாகபூசைபோட்டுத்திபங்கொடுத்தார்
சன்னதங்கொண்டிடல்லோருங்குதித்தாட வள்ளித்
தாணுமகைசக்கருட்கொண்டுமகிழ்ந்தாட
நன்மைசெய்யுங்குறுமலைக்கந்தவேளை என்றும்
நாடிநோக்கிக்கும்பிடலானந்தவேளை

விருத்தம்.

குன்றவர்குறவரெல்லாங் கும்பிட்டன்புடனேபோற்றி
நின்றுடன்விபூதிவாங்கி நிச்சயங்காப்பாயென்று
கன்றியேமெலிந்துவள்ளி கன்னிகைதனக்குப்பூசி
வென்றியாய்மனைசேர்ந்துள்ள மெலிந்திடாதிருந்திட்டாரே,

இதுவுமது-விருத்தம்.

இருப்பவள்வள்ளியெழுந்திருப்பன்மனங்கொள்ளாமல்
ஏக்கமொடுருகினமனதெண்ணியெண்ணி
மருக்குழலின்முடித்தறியாள்உடலைப்பாராள்
மனக்கவலைதீர்த்தறியாள்வகையாய்நெஞ்சம்
உருக்குமொருகையைக்கன்னததில்வைத்தே
உடல்மெலிந்தேயிரவெல்லாமருவிப்போகம்
பெருந்திடவேகனவுகண்டுமுழித்துவாடி
பித்தனைப்போலாசைகொண்டுபிதற்றுவாளே.

இதுவுமது-விருத்தம்.

இப்படிவள்ளியும்புலம்பித்துயில்கொள்ளாமல்
இரவெல்லாம்வருந்திமதிமயங்கிக்குன்றி
எப்படிநான்சகிப்பேனென்மனதென்றெண்ணி
ஏக்கமுடனவள்ளியம்மனிருக்கும்போது
அப்புறத்திற்சென்றவடிவேலர்தாமும்
அவசரமாய்த்தினைப்புனத்தினருங்காத்து
செப்பமுடன்வள்ளியுந்தெரிந்திலையாங்காணோர்
நியங்குவார்தமதுமதிமயங்குவாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் வள்ளியம்மன் சிற்றாரில் விரகவேதனைபட்டிரு க்கும்போது அங்கே தினைப்புனத்தில் வந்துபார்த்து வள்ளியம்மனைக் காணாமல் சுப்பிரமணியக்கடவுள்சொல்லுகிற விதமெப்படியென்றால்

சுப்பிரமணியர்சொல்-கட்டளைக்கலிப்பா.

தாதுமாதளைபூத்ததுமிந்திடம்
    தானுமயானுமேகூடினதிந்திடம்
கோதுங்கொண்டைகலைந்ததுமிந்திடம்
    கொம்பினானையும்பாய்ந்ததுமிந்திடம்
மாதுமஞ்சள்வேண்டதுமிந்திடம்
    மங்கைநானுமருவினதிந்திடம்
காதிலோலைகழன்றதுமிந்திடம்
    காமராஜன்பிரித்ததுமிந்திடம்.

வசனம்.

ஆ-ஆ-இதுதானே தினைப்புனம் இங்கேதானே வள்ளியும் நானுமா ஆசைதீரக் கூடிவிளையாடினோம் இவ்விடத்தில் இருப்பாளென்று வந் தேன் இப்போதுகாணோமே இதற்குநானென்னசெய்வேன்.

சுப்பிரமணியர்சொல்-விருத்தம்,

மனதில்நினைந்தாலசகொண்டுவந்தேனிங்கு
    வள்ளியுந்தான்பாண்மீதிற்காணேனென்ன
தினைப்புனத்திற்கதிர்களையுங்கொய்துகொண்டு
    தேன்மொழியைக்கூட்டியவர்சென்றாரோதான்
கனத்தகவணோசையுங்கேளாமலூமை
    கண்டகனுப்போலிருக்குங்கேதானையோ
தனித்தவள்ளியாங்கெருமென்னைவிட்டுத்
    தானசென்றார்போலிருக்குந்தன்மையாச்சே.

வசனம்.

ஆ-ஆ-இதென்னமாயம் நான் நினைத்துவந்த வள்ளிநாயகியையுந் தினைக்கதிரையுங் காணேமே அல்லது அவளுடைய அண்ணமார்கள் தினையறுத்துக்கொண்டு அவளையுங்கூட்டிக்கொண்டுபோனதுபோலுங் காணவில்லை இது என்ன ஊமைகண்ட கனவைப்போலப் பார்க்கின்ற [illegible] டன் வள்ளி நம்மைவிட்டுப்போனாளே இதற்கென்ன செய்கிறது.

சுப்பிரமணியர்சொல்-தரு-இராகம்-ரீதிகௌளம்.

ஆதிதாளம்.

எங்குபோனாளோ வள்ளியைக்காணோம்
எங்குபோனாளோ

கொங்கார்குழலைப்புனத்திற்-சிங்காரமாமெனது
பங்காயிருந்தவள்ளிதங்காமலெனைவிட்டு எங்கு
 மதிமுகவதிகாதகாள் வள்ளியைத்தாங்கும்
 வளர்பரண்மேவுங்கம்புகாள்
 சதியோசம்மதியோ நான்செய்தகுறை
 தானேயெனைவிதியோ
பொருவாயிருந்துவி மனுவசொல்லுங்களிந்தச்
சதிகாரிபோனவழி-எதுவோதெரிந்தில்லை எங்கு
 வாசகற்பெண்ணேனை வள்ளியெனுநன்
 வனத்திலேபுனத்தாலீ
 பாசமிருக்கிரோ பாதகிபோன
 பாதையைச்சொல்லீரோ
ஆசைகொண்டவனுக்கு மோசமுமில்லையென்று
மோசஞ்செய்தனையிவ்வேஷஞ்செப்தபாதகி எங்கு
 நீதான்சொல்லளியே நினைக்கதிரை
 சித்தக்கொய்யுங்கிளியே
 ஆதாரீயன்னமே இன்றுளென்று
 அறிகிலீரோமுன்னமே
ஏதோஎன்மையவிராதோ வல்லாதென்ன
ஆதோவென்சத்தங்கேளாதோகூப்பிட்டதும் எங்கு
 நிராதமோகம் தந்தெனைக்கூட்டிச்
 சோர்ந்தான்சம்போகம்
 வாரோனென்றுனைத்தே போனவுடனே
 வந்தெனைத்தாத்தே
ஆறுதத்தியைவைத்து நீறுநீருக்கியென்னைப்
பாராபலோர்வசனங்கூறுமற்றனிவிட்டு எங்கு

சுப்பிரமணியர் சொல்-விருத்தம்.

அடக்கமுடன் வேலியிட்டுப்பயிரைநட்டால்
 அழிப்பதுதானெங்குமுண்டோவதுபோல்முத்து
வடக்ககமர்லைவள்ளி போனோமென்றார்
 வார்த்தையுஞ்சொல்லாமலிந்தவனத்தில்விட்டு
நடக்கமனம்பொருந்தினளோ தனியேஐயோ
 நட்டாறுதஞ்சமெனவிட்டாள்காணிவ்
விடத்தினின்றேயினம்பிரிந்தமானைபோலானேன்
 என்செய்வேனினிமேலு மென்செய்வேனே.

வசனம்.

ஆ-ஆ-உலகத்தில் வேலிவைத்தல்லவோ பயிரிடவேண்டும் அது
போல இந்த வள்ளிக்கு நானொரு வேலியாயிருக்க என்னை நாட்டாற்
றில் விட்டதுபோலச்செய்துவிட்டுப் போகமனம் தந்ததல்லவோ.

சுப்பிரமணியர்சொல்-தரு-இ-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்.

சொருகுகொண்டையழகி — என்மன
துருகுதுருகுதிளகி
அருகுமாமலர்மேலணைந்துசுகந்தந்து
ஆரபாரதுடன்வாரிமுடித்தமலர்ச் — சொருகு
சரிகைச்சேலையுடையும் — மயிலின்
சாயலன்னநடையும்
உருண்டரம்பைத்தொடையும் — கையால்
ஒருபிடிக்குள்ளிடையும்
மருவிமருவியென்னை மயக்கிகளவிசெய்து
வஞ்சிநீபோனதென்னவஞ்சகமோசொல்லடி. — சொருகு
நேத்தியானபெண்ணே — நீ-ஒரு
வார்த்தைசொல்லாயோகண்ணே
பார்த்துநீதயவுபண்ணே — அந்தப்
பரமனறியகண்ணே
பூத்தமாமலர்மேற்சேர்த்துக்கையாலணைத்துப்
பார்த்துப்பார்த்துநீதங்கோர்த்துமுடித்தமலர்ச் — சொருகு
வஞ்சியான்பாவி — மனம்
வைத்தேனமெத்தயேவி
கொஞ்சிக்கொஞ்சிக்கூவி — மோகங்
கொடுத்தமனத்தீவி
நெஞ்சினில்விரகதாபம்பஞ்சிற்றீபோற்பிடிக்கு
தென்செயவேனடிபஞ்சமாபாதகி — சொருகு

சுப்பிரமணியர்சொல்-விருத்தம்.

ஏசினதுபாராமற்கொஞ்சினேனே
எத்தனையோவவள்மனதைத்திருத்தினேனே
நாசிசெய்தவளுடனே இணங்கினேனே
நான்பிரியேனென்றுமெலருஞ்சபதஞ்சொன்னேன்
காசையாயிருந்தவள்போறபிரிந்தேகள்ளி
கபடநாடகமாகக்கடத்தியென்னை
மோசமதுசெய்தாள்புல்வாயேமானே
முன்னடந்தஞாயமதைமொழிகுவீரே.

இதுவுமது-சந்தவிருத்தம்.

பொருபுலியேமதயானைகளே சிறுபுல்வாய்க்குகரமே
வருமறையேகலைமானின் மேகருமலைபாம்பே
குருகினமேசவுதாரிகளே மயில்கோகிலமேகிளியே
ஒருகுறமாமயில்வரும்வழி யறிகிலதுரைசெயுமோதிடமே,

வசனம்.

ஆ-ஆ-வள்ளிப்பெண்ணே நீ யென்னை யேசின நாம் பாராமலுன்
னைக்கெஞ்சி யுன் மனதாரசெய்து உன்னை மருவினேனே கல்லாது
கோபார்த்தீரகளா கரடி. புலி சிங்கங்களே மான்மனாயத்திதென்னமன்

அவள்மனத்திற்சந்தேகமில்லாமல்நானுருடபிரியேனென்று சொன்னேன் இப்படியிருக்க என்னோ நடமாட்டமாய் மோசஞ்செய்தானோ அவன் எந்தவழிபோனான் சொல்லுங்கள்பட்சிகளே,

பொது-விருத்தம்.

இப்படிவேலவர்மனத்திற்மயங்கியபடி
ஏனமுதல்மிருகமுடபுட்களைப்பேட்டுச்
செப்பமுடன்சிற்றாரின்வழியைநோக்கித்
திவாமாயவ்வூரின்வந்துமேகிற
கட்புறத்திலெவ்வாகளுமேயறிந்திடாமற்
கந்தனும்வந்தமன்மனைதனிதகொளிக்க
மைப்படியுங்கண்டன்மகன்வந்தானென்று
வண்மையுடனேபாங்கிமார்வந்தாரே.

வசனம். அகோவிதப்படியென்றால் இந்தப்பிரகாரம்சுப்பிரமணியக்கடவுள் கிளைப்புனத்தில்வந்துவள்ளியம்மனைக்காணாமல்மதிமயங்கிவாடி சிற்றார்ச்சேர்ந்துநம்பிராஜன்வீட்டில் ஆறுமறியாமலொளிந்திருக்க அப்போது வள்ளியம்மனுடைய பாங்கிமார்கள்கண்டு சுப்பிரமணியனைத் துதித்துக்கேட்கிறவிதமெப்படியென்றால்,

பாங்கியர்சொல்-விருத்தம்.

கங்கையருளியருமைக்கந்தவேளே
கலந்தவர்தான்விலகியெங்கள்கன்னிவள்ளி
மங்கையைவிட்டிருக்கமனம்வந்ததோநீ
வந்ததுவுமன்றாய்ச்சுவாதாபோற்றி
சங்கையுடனெங்கள்வள்ளியுமைக்காணமற்
சாதமுண்ணவில்லைச்சந்தங்கள்வாசம
அங்கமறிந்துரியதியாமினைஐயா
அவள்தனைவிப்போமே அழைத்துவாரோம்

வசனம்.

சரணஞ்சரணமையா செவ்வல்கொடியோனே தாங்கள் எங்கள் வள்ளியம்மையைக் கைவிட்டு எங்கிருந்தீர்கள் வள்ளியம்மனுடையதனையருங் கொண்டுவந்த பிறகு உமமைக்காணாமல் வள்ளியம்மை இதுவரையில்லாமில் வாடிவாடியிருக்கிறாள் எங்கள் விட்டுப்பிரிய மனம எப்படிவந்ததுசுவாமி.

சுப்பிரமணியர்-வசனம், கன்னது அப்படியா ஆனால் அதிசீக்கிரமாயவளை அழைத்துவாருங்கள் பாங்கிமார்களே.

பாங்கியர்-வசனம். சரணஞ்சரணம்மகாபாக்கியம் இதோ அழைத்துக்கொண்டுவருகிறோம்சுவாமி.

வள்ளியம்மனும்-பாங்கியும்வருகிற-கண்ணிகள்

அங்கிராயுமறிந்துஅன்னைமார்சித்திரை தெரிந்து
ஏனலையாய்த்தாதியுங்கூட்டிக்கொண்டுவரும்

பாதகராக்குறுங்கிறாற்பதறிமுழிப்பாரென்று
தாதியும்வள்ளியுமெள்ளத்தனியேயாடந்து
கம்புமவடிவேலர்தன்னைநாடிவந்து — கண்டு
கும்பிட்டாளாசைதீரக்குணமுடன்வள்ளி

வள்ளியம்மன்சொல்-வஞ்சிவிருத்தம்.

மன்னனேசரணம் மகிபனேசரணம்
மின்னியவடிவேல் வேந்தனேசரணம்
தன்னிகரில்லாத் தனியனேசரணம்
என்னையாளுமிறைவனேசரணம்.

வசனம்.

சரணஞ்சரணம் என தாசைக்கிசைந்தமன்னவரே சரணஞ் சரணம் [illegible].

வள்ளியம்மன்சொல்-கண்ணிகள்.

[illegible]நாயகனே ஆறுமுகன் — மகனே
வாசனைக்கடம்பா வெகுதன்மையல்தீர்த்தவா
பாசமவைத்தவெந்தனை நீர்மோசமுஞ் — செய்யவே
பாங்குடனினைந்தாருந்தோகாங்கேயநாதா

வசனம்.

கேகநேயென்பிராணநாதா என்னைத் தனியவிட்டிருக்கவப்படிமன [illegible] இப்படி நான் மெய்வருந்தவும் பார்க்கலாமாசுவாமி,

சுப்பிரமணியர்-வசனம்,

[illegible]பெண்ணேவள்ளி அப்படி உன்னை மோசஞ்செய்வேனோ [illegible] இப்போது நாம் இங்கேயிருக்கக்கூடாது நாம் நமது ம[illegible] வாருமபெண்ணே.

வள்ளி-வசனம். அப்படியேநல்லபாக்கியம் நடக்கலாம்சுவாமி.

சுப்பிரமணியர்-வசனம். ஆனால்வாரும்பெண்ணே

சுப்பிரமணியர்-வள்ளியம்மன்வசனம்.

[illegible] பாங்கிமார்களே இப்போது நாங்கள் எங்கள் [illegible] நீங்கள் சந்தோஷமாய் இவ்விடத்திலிருங்கள் பாங்கிமார்களே.

பாங்கிமார்-வசனம். ஆனாலப்படியே நல்லபாக்கியம் போய்வாருங்கள்சுவாமி [illegible]வள்ளிதாயே மெங்களையெப்போதும் மறவாதிருக்கட்டும்.

சுப்பிரமணியர்-வள்ளியம்மனைமலைக்குக்கூப்பிட்டுப்போகிற

பொ[illegible]-மேற்படி கண்ணிகள்,

என்பாங்கிமார்கள்சொல்லவழியுடன் — வேலர்
மன்றல்வள்ளியைப்பிடித்துமலைநாடியே
மெய்க்[illegible] நாட்டைவிட்டுமே — கந்தர்
[illegible]வள்ளியுடன்மலைக்கு[illegible]
[illegible] — [illegible]
[illegible]

இவ்வகைவள்ளியுங்குகனுஞ்சேர்ந்தோர்பக்கம்
இருந்திடவேசிற்றூரினங்கைமாது
ஒவ்வியபள்ளியினிற்றுயிலும்போது
ஒருபசுவைக்கள்ளனுங்கொண்டோடிப்போனன்
அவ்விரவுகனவுகண்டுவிழித்தான்கோலென்
றலறிநாள்தன்னுடலோடணைத்துக்கட்டி
செவ்வையாய்த்துயின்றவள்ளியெங்கையென்று
தேடினாள்சிங்கைதொந்துவாடினாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் வள்ளியம்மனுஞ் சுப்பிரமணியக்கடவுளும் சிற்றூரைவிட்டு வழிநடந்து ஒரு சோலையில்இரங்கியிருக்க அவ்விடம் சிற்றூரில் சங்கைமோகினி நித்திரையில் ஒரு பசுவைக் கள்ளன்கொண்டுபோன பாவனையாய்க் கனவுகண்டெழுந்து பார்க்கும்போது தனதருகே நித்திரைசெய்த வள்ளியம்மனைக்காணோமென்று கூவிக் கூரலிட்டலறி பரதவித்துத் தேடுகிறவிதமெப்படியென்றால்.

நங்கைமோகினி-புலம்பல்-கண்ணிகள்

இ-ம்-கண்டா-ஆதிதாளம்.

ஐயையோவென்மகளைக்காணோமே — என்ன
அநியாயமென்மகளைக்காணோமே — இப்போ
மாயமோவிதுவென்னவஞ்சகமோ — இந்த
மாதுவள்ளியைக்காணாதென்னமோ — ஐயோ
எங்கெங்கேபார்த்துந்தேடுவேனே — வள்ளி
எங்கேபோனாளென்றேங்குவேனே — எந்தன்
கன்னிவள்ளியிங்கேதான்றுயின்றாளே — என்னைக்
கைவிட்டெவ்விடமோசென்றாளே — சிற்றூர
மன்னன்தம்பிராஜேந்திரன்வருவானோ — இங்கே
மகளெமகளென்றேடித்திரிவானோ — இங்கே
கூடியபாங்கிதுதுசென்றாளோ — எவனைக்
கூடிப்போயெவ்விடத்தில்நின்றாளோ — நமம
வேடச்செனஞ்சிறிக்கவறியாதோ — என்னை
மீறிவள்ளிப்போனதுந்தெரியாதோ — நமக்குப்
பெண்ணொன்றிருக்குதென்றுநினைந்தேனே — மகளே
பேசாமற்போகவிட்டுக்கத்திநந்தேனே — அன்னம்
உன்னாற்பூரித்துநானிருந்தேனே — பேசாது
உயமைகண்டகனைப்போலிருந்தேனே — எந்தப்
பாவிக்கள்வனின்பின்போனாளோ — எந்தப்
பரமகன்னைகசுவத்திலானாளோ — வள்ளிப்
பூவையின்பாங்கியர்சேர்த்துண்டோ — சும்மாப
பொய்யாமைச்சொல்பேசாதிருப்பதுண்டோ — இது

பொது-மேற்படி-கண்ணிகள்

நின்றுகாணவிடியனைவேறுகிறளே அப்போ
உத்தமமாதுமுட்டிமோதிறளே மகள்
சென்றுதவியேபோதெவ்வாறு இறைச்
செக்கிரம்பார்ப்போமிப்போதனைவோரும் சென்று
நங்கைசெலவோநம்பிராஜனும் மக்கள்
நலமுடன்வந்தாரனைவோர்களும் அப்போ

விருத்தம்

சாதியிலில்லாதவழிபிறக்குஞ்சொல்லுஞ்
சம்பவிக்கச்செகனேவேடர்சகலபேரும்
மோதியபலகெறுகெறுனைக்கடித்துமீசை
முறுக்கிமிடைபிறக்கியேவன்பெருக்கிக்கொண்டு
தீதறவிற்கணைகள்சதுராடுதொட்டுச்
சிறியவள்ளிநகரத்திருசெந்திருட்டுக்கள்ளப்
பாதகனைப்பிடித்தொருமித்தடிப்போமென்று
பார்த்திட்டார்பலதுதடதும்வேர்த்திட்டாரே

இதுவுமது

அடர்க்குநம்பிராஜன்சேனைதனைநாடி
அம்பெறிந்துவகைகட்டதாதித்தார்கூட
மடக்கதையைக்கொண்டோடிவளைவருப்பான்சுற்றி
வளையடர்க்கம்பெப்போடோர்மணிதன்றனே
கடக்கிடவும்வீடுவேன்றெல்லோருங்
கண்டேறட்டம்பார்த்தனைவர்குதிக்கைகட்டித்
தொடர்ந்துதனைவேலனைக்கண்டம்புமாரி
தொடுத்திட்டார்வள்ளிநன்றுநெகிழ்ந்திட்டாளே

வசனம்

இந்தப்பிரகாரம் நம்பிக்கையோடானி தறிக்கில் வள்ளியம்மையைக்கூறாமல் நம்பிராஜனுக்குச்சொல்ல அப்போ அவாறுவைம் குறவர்களும் புத்திரர்களுந் சேனைநுந்து வள்ளியைக்கொண்டுபோகின்ற கள்ளனைப்பிடிக்கவேணுமென்று [illegible] கையைப்பிடித்து வந்துசோலையில் சுப்பிரமணியருக் வள்ளியம்மையைக் கிருத்திறனைக்கண்டுபெற்க ஆரவாரத்துடன் கணைகள்தொடுக்கிறார்கள் அப்போது வள்ளியம்மன் கண்டு சுப்பிரமணியரிடஞ் சொல்லுகிறவிதங்காண்க.

வள்ளியம்மன்-சுப்பிரமணியர்சொல்-விருத்தம்

எதிரேதுப்படை [illegible] பொருத்திவண்ணமோகன்
என்தகப்பன் அனைவோருமிங்கேவந்து
[illegible] கணைதொடுத்துப்பொருதவாரே
[illegible] அம்பெறிந்திடாரே
[illegible]
மெல்லியேயன்னையில்வேலிருக்கப்
[illegible]
பார்க்குமிறுதென்னமோகனேசொல்லாய் [illegible].

வள்ளியம்மன்-வசனம்.

சாணாங்காணமென்பிராணநாதா இதோபார்த்தீரா என் தகப்பனும் என் அண்ணமார்களுஞ் சேனையுடன்வந்து அம்புதொடுக்கின்றார்கள் என்செய்வோம்சுவாமி,

சுப்பிரமணியர்-வசனம.

ஆனல் வாரும்பெண்ணேவள்ளி அப்படி யாதொன்றும் வராது நீ புலம்பவேண்டியதில்லை யென்கையில் சத்திவடிவேலிருக்குதல்லவோ அவர்களென்மேல் நெருங்கிவந்தால் அவர்களை எனதுவேலால் யமலோகஞ் சேர்க்கிறேனபாரும்பெண்ணே.

வள்ளி-வசனம்.

ஆ-ஆ-சுவாமி அப்படிசெய்யலாமா எனது தகப்பனையும் அண்ணமார்களையும் கொல்லாமல் விடவேண்டும் பிராணநாதா.

சுப்பிரமணியர்-வசனம்.

ஆனல் கேளும்பெண்ணே பயினத்தி லொப்பாரியுங்கேடா நீயி நலம்பார்ப்போம பேசாமலிருப்பெண்ணே.

பொது-வஞ்சிவிருத்தம்.

இப்படிவேலர்செப்பியபோது
அப்புறம்வேடர் கொப்பெனச்சூழ்ந்தார்

வசனம்.

இந்தப்பிரகாரம் வேலாயுதக்கடவுள் வள்ளியம்மனுக்கு மனத்திடஞ்சொல்லிச்சொல்லிக்கொண்டிருக்கும்போது அந்தசமயத்தில் வேடர்கள் வந்து சூழ்ந்ததெப்படியெனறல்,

பொதுத்தாழிசை-விருத்தம்.

கைக்குவெந்திர்பட்டாங்கிகளை நள்ளன் நாணிவனென்னவேகாணக்
குன்றவர்நபபிராஜனும்வாளைத்தாவியதீனைப்போல்
எக்கியேமீறியேவந்துவிற்களைகளையேவியே
இவனைக்கொல்லவொருவரபோதுமேகமாய்ப்படைவேண்டுமோ
சிக்கிக்கொண்டபின்விடுவோமோவென்றுநிராமாயசனடைகள்
செய்யவேகந்தசாமிசிறித்திருக்கைவேல்கொண்டெறிந்திடத்
தர்க்கம்பண்ணியவேடர்களும்நம்பிராசனும்பட்டுருவியே
சாய்ந்துமாய்ந்துயிரோய்ந்துகாணிற்றனிதனியிறந்தார்களே

விருத்தம்.

இகல்புரிந்தவேலொல்லாஞ்சத்திவேலாக்
கிரையாகப்போனதின்பின்னெதிரேநின்று
திகிரிதனைக்குமரத்திலோர்குறையுண்டாக்கி
செல்விவள்ளிதன்னையதிற்சேர்க்கக்கண்டு
அகமகிழ்ந்தீராத்துயரொமென்னி
அண்ணன்மார்தகப்பனையும்நினைந்தழுதவாடி
மெலிருந்திரங்கியனைத்தெம்பெருமான
பாண்டவராயெழுப்பிவள்ளிமனஞ்செய்யுமே

வ-ம். இப்படிப்பிரகாரம் சுப்பிரமணியரும் நம்பிராசனும் அண்ணமார்களும் குறவர்களுஞ் சமர்செய்ய அந்தவேளையில் சுப்பிரமணியர் வேலாயுதங்கொண்டு யாவரையுஞ் சங்கரிக்கவுடன் தாங்களிருந்த சோலைக்கெதிரில் விறைமலையை துளைகளுங் குகையுண்டாக்கி வள்ளியம்மனை அதில்வைத்தபின் வள்ளியம்மன் தகப்பன் அண்ணமார் இறந்துபோனதைக்கண்டு பிரலாபிக்கிறவிதமெப்படியென்றால்,

வள்ளியம்மன்-புலம்பல்-கண்ணிகள்

இ-ம்-சங்கராபரணம்,

என்னசெய்வேனென்தனண்ணமாரே நீங்கள்
எந்தனுயிரையுயிர்சிந்தினீரோ
தன்னவரோயெந்தன்றகப்பனாரே நீரும்
சரந்தொட்டீரோ உயிரிழந்திட்டீரோ
மடிந்தசேதிபெற்றவளேகேட்டால் வீணாய்
மாளுவாளேகதறிவீழுவாளே
உடன்பிறந்துஞ் சத்துருவாயிருந்தேன் நீங்கள்
ஒழிந்திட்டீரோ வுயிர்கழிந்திட்டீரோ
உங்கள்வலுமெல்லா மெங்கேபோச்சோ வுடல்
ஒடியலாச்சோவீணாய் மடியலாச்சோ
தங்கையென்ற சொல்லைமறந்திட்டீரோ இங்கே
தயர்ந்திட்டீரோ வுயிரிழந்திட்டீரோ

நாரதர்வருகிற-போதுவிருத்தம்.

கற்பனைகாரணமுடிந்த கதையையெல்லாங்
காணவந்தநாரதனுங்கந்தவேளை
அற்புதமாய்க்கண்டுநமஸ்காரஞ்செய் நான்
அன்னைவள்ளிதுயரமெல்லாமறித்தேனேதோ
உற்பனசொல்லீரெனவேலவனாக்கேட்டான்
உறவர்கள்வந்ததும்வேடர்களும்வந்து
உற்பொருதிமாண்டதுவும்வகையாய்க்கூற
மகிழ்ந்திட்டான்குகனைமெள்ளப்புகழ்ந்திட்டானே.

வ-ம். இந்தப்பிரகாரம் வள்ளியம்மன் புலம்பிக்கொண்டிருக்கும்போது நாரதமுனிவர் சுப்பிரமணியரிடத்தில் வந்து கண்டு இங்கேநடந்தகாரியங்களைக்கேட்டுச் சந்தோஷமடைந்து சொல்லுகிறவிதமெப்படியென்றால்,

நாரதர்சொல்-விருத்தம்.

கைவடிவேல்நீலமயிற்கந்தநாதா
கானகத்தில்வள்ளிதனைக்கண்டாலங்கு
செய்விதமாய்க்கலியாணஞ்செய்யாமல்நீர்
திருவிளையாட்டாடுநற்கோசித்தைகூர்ந்து
மெய்வடிவம்பொய்வடிவாய்க்காட்டிவீணாய்
வேட்ருயிர்வேலினுக்கேயூட்டிச்சும்மா
மைவிழிமானையுங்குகையிலடைத்திப்போ
மாண்டவரையெழுப்பிவள்ளிமணஞ்செய்வீரே.

வசனம்.

சரணம்சரணமையா கழுகாசலக்கர்த்தரே காணவரிடத்திற்போய் வள்ளியைமணஞ்செய்யாமல் மெய்யுருமாறிப்போய்வேடம்பூண்டுவே டர்களுநயினை விறுகப்போகச்செய்யலாமா ஆறுல் உம்முடைய திரு விளையாடலை யாரறியப்போகிறார் இப்போது வேடர்களையெழுப்பி வ ள்ளிநாயகியை மணஞ்செய்துக்கொள்ளும் கழுகாசலக்கடவுளே.

பொது-கண்ணிகள்-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

நாரதன்விண்ணப்பஞ்செய்திட்டசேதிபறிந்திட்டார் வள்ளி
நாயகியால்வேடுவர்க்குக்கருணைபுரிந்திட்டார்
வீரப்பிரதாபசய்யாரகுமாரன்திரும்பினர் நூ
வேடச்சிக்காயந்தவேடர்க்குதவிவிரும்பினர்
மானைகறமயிலைஇட்டலீயிற்குலாவென்ருர் உயிர்
மாயும்பிதாவண்ணமாளையெழுப்பிப்போமென்ருர்
தேனேகுறவர்க்குயிர்கொடுத்தோநயஉன்னிமித்தியம் இவர்
தேகமெல்லாம்வச்ரதேகமதி இதுசத்தியம்
வள்ளியவேடரொழுந்திருப்பாரடிபெண்ணே எந்தன்
சொல்வதியாச்செயின்றெழுப்பிடுவாயடிகண்ணே
வள்ளிபுரான்செய்தபாக்கியந்தானென்றுகும்பிட்டாள் விடை
வாங்கியே தந்தையண்ணனையெழுப்பித்தீட்டிட்டாள்
ஊட்டிவளர்த்தவுயிர்த்துணையேயெழுந்திருங்கள் எனக்
குற்றதகப்பன்பின்சுற்றமெல்லாமெழுந்திருங்கள்
காட்டிகமாகியவீரர்களேயென்றுபுகழ்ந்தாள் அந்த
க்ஷணத்தில்வேடரெல்லாமெழுந்தேதன்னிமகிழ்ந்தார்
தோத்திரம்வள்ளிதனைப்புகழ்ந்தெங்கள்தாயே பெருந்
துன்பந்தவிர்த்துயர்வுதந்தலசெய்வட்டீயே
நேத்திரமேயென்னவேடர்கைகூட்டியேசென்ருள் சத்ரு
கீர்த்தனவேல்முன்பாகவிட்டேயங்குநின்ருள்
அப்போதுசண்முகன்கெச்சையும்வாகையுங்குட்டிஞன் சேவ
லாடமயிலாடத்தற்சொருபங்காட்டிஞன்
ஒப்பியவேடவோரனைத்தக்கூத்தர்டிபணிந்தார் எங்கள்
உற்றகுலதெய்வசாதுவென்றேசொல்லத்துணிந்தார்

நம்பிராஜனும்-புத்திரருஞ்சொல்-விருத்தம்.

இப்படிவேடங்கொண்டு இவ்விடந்தன்னில்வள்ளி
ஒப்பினர்கூட்டிவந்ததொருவாக்குந்தெரியாதையா
அப்பனேபுனதுசிந்தமாறிவார்கள்ஞானச்
சுப்பிரமணியரேயெங்கள்சொற்பிழைபொறுத்திடீரே.

இதுவுமது-விருத்தம்,

தனித்துவள்ளிதனைக்கூடிசுவாமியென்கள்
ஜாதிஜனமறிமாமற்றுவேரென்று

இனத்திலியல்சொல்லுவதுஞ்சரியோவையா
இப்போகேளிர்நாருக்கெம்மைவேண்டி
மனத்தயவாய்வந்துநலதேவரேநீர்
வள்ளிதனைப்புவியறியமாலைசூட்ட
தொலித்திடவுங்கைபிடித்துக்கொடுப்போம்நாங்கள்
சொற்படியேவாருமையாசுவாமிநீரே

வசனம்.

சரணஞ்சரணமையா சுவாமி சுப்பிரமணியக்கடவுளே நீர் உம்முடைய சுரூபத்தைவிட்டு வேற்றுருவங்கொண்டு வள்ளியம்மனை ஒப்பும்படிசெய்து இந்தக் கானகத்திற் கூட்டிவந்தீர் உம்முடைய சித்தம் எங்கள்பாக்கியம் ஆனால் எங்கள் வள்ளியம்மனைத் தனித்து எங்கள் ஜாதி ஜனமறியாமல் கூட்டிவந்தது சரியோ அது சரியல்ல இப்போது நாங்களெல்லாருக்குமெங்கள்கூடவந்துயாவருமறியும்படியாக வள்ளியம்மனைமணஞ்செய்துகொண்டு போகலாம்சுவாமி.

சுப்பிரமணியர்சொல்-கொச்சகம்.

வாருமென்றுசொன்னநம்பிமாமனேகேளுமிப்போ
காரியக்காரனென்றுச்சுகமெல்லனைப்போவோம்நாம்
நாரதனேநீர்கூடநமைப்பெருந்திருத்தாருக்கு
ஏர்பெறவேவந்தால்சாலிகைசந்துமணஞ்செய்வேனே.

வ-ம். சேருமையா எனது சொந்தமாமனாகிய நம்பி மகாராஜனே ஆனாலுங்கள் மனதுபோல் வள்ளி நாயகியை மணஞ்செய்ய வருகிறேன் போவோம் வாருங்களையா அதோயாரும் நாரதரே நீரும் எனது கூடவந்திருந்து வள்ளியை மணஞ்செய்துவைத்துப்போவீர் வாரும்நாரதரே

நாரதர்-வ-ம். மகாசந்தோஷம் அப்படியே தங்களுக்காகப்படி நடக்கவென்று காத்துக்கொண்டிருக்கிறேன் நல்லது போவோம்வாருஞ்சுப்பிரமணியக்கடவுளே.

சுப்பிரமணியர்சென்றார்போய்த்திருப்பரங்குன்றம்சேர்ந்தல்
கல்யாணிசன்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

வெள்ளியங்கிரியேநம்பிமனைக்கு — வடி
வேலர்வேந்தனுகூலமாயிருந்தார்
வள்ளிமணாளன்வந்தான்வடிவேலன்வந்தான் — என்று
மகிழ்ந்துவேடுவரெல்லாம்புகழ்ந்துநின்றார்
மாதுகன்னிமோகினிமகளுக்கேற்றபின் — நல்ல
மாப்பிள்ளையென்றுதலைசாய்ப்புடனின்றாள்
ஜாதிஜனமறியசகலபூமியறிய — கந்த
சாமிக்குவள்ளிதன்னைக்ஷேமஞ்செய்ய
போயிலிங்கிதருக்கேபெண்கொடுப்போ — மென்று
பெருகிவேடர்புகழ்ந்தருகில்வந்தார்

நீதமுடனேனம்பிராஜனும்துணைவரும் ஸ்நல்
லோசமாகவேவலவரே-டுபேசியிருந்தார்
நன்றாயிருப்பீரொக்காளுந்தழைப்பீர் என்று
நாதன்வேடர்க்குவரம்போதக்கொடுத்தார்
குன்றுமல்வாழ்ந்திருக்கள்குறைவில்லையென்று சொல்லிக்
கோதைவள்ளியைமணம்பேசிமகிழ்ந்தார்
ஆறுதலங்களிலேதிருப்பரங்குன்று உண்டு
அன்பாயிலேமணஞ்செய்வுநன்று
கூறுகின்றேனென்றுவடிவேலர்புகழ்ந்தார் அங்கே
குன்றவர்வேடர்களாமென்றுமகிழ்ந்தார்
செவ்வேள்நம்பிராஜனுந்திரமுறுங்குறவர் அப்போ
திருப்பரங்குன்றம்வந்துசேர்ந்துமகிழ்ந்தார்
ஒவ்வும்முகூர்த்தம்பார்த்துயர்லக்கணம்பார்த்து அங்கே
உறுதிருமலைவையுஞ்சிங்காரஞ்செய்தார்
வாழைக்கரும்புகண்ணாடி வர்ணப்படங்கள்சேர்த்து மா
மதிப்பிரகாசமென்னக்காவணஞ்செய்தார்
சுப்பிரமணியர்திருமணத்திற்குப்பரமசிவன்வேடர்கள்

வருகிற-விருத்தம்.

சுகந்தபரிமளகளபநிறைந்தரத்னச்
சொர்ணமயமானமணவறைசோடித்து
உகந்தபச்சைசத்தோரணம்வீதியினிற்கட்டி
உயர்நிம்வானவர்தேவேந்திரனுமற்று
முகுந்தனுநான்முகனுமுனிவர்களுஞ்சூழ்ந்து
முருகனுக்குமணஞ்சூட்டுமுகூர்த்தங்கண்டு
மகிழ்ந்துசிவன்பார்வதிசமேதராக
மான்மழுவுமேந்தியந்துவருகின்றாரே.

வசனம்.

ஆகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரந் திருப்பரங்கிரியில்சொர்ணமயமான கலியாணமண்டபஞ்சோடித்து சுகந்தபரிமளவாடைகள் சாத்தி சுப்பிரமணியர் வள்ளியம்மனுக்கும் நல்லமுகூர்த்தம் வைத்திருக்க அதையறிந்து மும்மூர்த்திகளும் முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் கின்னர கிம்புருட சருடகாந்தர்வர் முதலாய்ச் சூழும்படியாய்ப் பார்வதிசமேதராக ஈஸ்வரர் வருகிறவிதயகாணக.

பரமசிவன்-பார்வதி-தேவர்கள்வருகிற-தரு

இ-ம-மோகனம்-ஆதிதாளம்

பல்லவி.

சம்புசதாசிவன்வந்தார்-வெள்விடையேறி
சம்புசதாசிவன்வந்தார்

அநுபல்லவி.

நம்புமான்மழுவேந்தி அம்பிகையுடன்சேர்ந்து
ஞானவேலாகலியாணநாயினை
நாடிமேன்மைமேவிசேடமாகி — சம்பு

சரணங்கள்.

தேவேந்திரன்முனிவோர் — அரிநாரணன்
தேவியிந்திராணியனைவோர் — புடைசூழ
சைவமார்க்கர்வாழ்த்துஞ்சரஸ்வதிபிர்மதேவன்
நந்திமாமுகனுங்கணநாதரும்
வந்துவணங்கியசந்திரசடாதர — சம்பு
[illegible]புருநாதரும் — சந்திரசூரியரும்
சுக்ரபகவானுந் — தவஞ்செய்வோரும்
கிம்புருடாதிபருங்கின்னரரனைவரு
[illegible]யாகியகௌசிகனும்[illegible]வரு
[illegible]யகாசிபனும்வர — சம்பு
முப்பத்துமுக்கோடி — தேவர்களும்
முனிவர்களுங்கூடி — ஒன்றாய்வந்து
சப்[illegible] வள்ளி[illegible]இருவருக்குஞ்
சுந்தரமாகியசந்தவிலேமண
முர்த்திகழச்செயவுந்திருப்பரங்கிரி — சம்பு

[illegible]க்கு விநாயகர் [illegible]ச்செய்திகூறல்-விருத்தம்

[illegible]
[illegible]
[illegible]பெண்வள்ளி
[illegible]
[illegible]போய்த்
[illegible]மனை
[illegible]
[illegible]சரிக்[illegible]விளம்புவாயே.

வ-ம். இப்பிரகாரம் முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத் [illegible] ரிஷிகளும் மும்மூர்த்திகளும் பரமசிவன் இவர்கள் இ[illegible] சுப்பிரமணியருக்கும்வள்ளியம்மனும் [illegible] தெய்வானையைக் கட்டிவரும்படி விநா[illegible] பரமசிவன் பார்வதி சொல்ல விநாயகமூர்த்தி தெய் [illegible] என்றான்.

விநாயகர் தெய்வானைக்குச்சொல்-தரு-இ-ம-தோடி.

[illegible]

[illegible]சொல்லக்கேளாய் — தெய்வானையே
[illegible]சொல்லக்கேளாய்

துன்மையில்லாமற்கந்தன் திருக்கலியாணஞ்செய்ய
உன்மனோகாமனுகந்தழைத்திடவந்தேன் நன்
இராமாய்ப்பெண்ணென் றிருக்கத்திரும்பக்கலியாணஞ்செய்தால்
இரண்டுகொழுந்திவந்தாலெனக்குச்சந்தோஷம்பெண் நன்
தேடிக்குறத்தியைக்கொண்டாடித்தம்பிமணஞ்செய்ய
வேடிக்கைசொல்லவென்றேநாடிச்சுறுக்கில்வந்தேன் நன்
மண்டலந்தனிலுயிர்வகுத்தபிரானுக்கும்
பண்டுவிதிக்கவிதிரெண்டேதாரமதாச்சே நன்
உன்னைப்பிரியேனென்றுஉரைத்திடும்தம்பியென்று
பின்னொருத்தியைக்கொண்டால்பேசியிங்காவதென்ன நன்

தெய்வானை கணபதிக்குச்சொல்-விருத்தம்.

நாரதனால்முடிந்ததெனக்கணேசன்சொல்ல
நாயகதெய்வானைமெத்தநாணிப்பேசும்
தாரமிதோசீரழியாய்ப்பவருமுண்டோ
தருவனத்திற்குறத்திமயல்தாங்காதேடி
வீரமெல்லாமிழந்தவள்காலடிமேல்வீழ்ந்தா
விதந்தெரிந்துநாரதன்மேலவிளம்பலாமே
காரமெல்லாமினிபுணர்த்தாற்சரியோவாரோன்
கந்தர்மணங்காணவென்றேகழறினாளே

தெய்வானை-மனமிரங்கித்-திருப்பரங்குன்றம்வருதல்-விருத்தம்.

புத்தியென்றேன்கணபதியேதெண்டமையா
போற்றிமனத்தேற்றிமெத்தப்புகழ்ந்தேனின்று
சத்திவடிவேல்வாங்கியினமீதேறுஞ்
சாமிமனதிசைந்தபடிநடப்பேன்தங்கை
சித்ரவள்ளிதன்னைமணஞ்செய்தநாளுஞ்
சேர்ந்தொருவர்போலிருந்துவாழ்வேனையா
எத்திசையும்புகழ்திருப்பரங்குன்றத்தில்
எழுந்தருள்வோமிட்சணத்திலியல்பாய்தானே

வ-ம். சரணஞ்சரணமையா எனது அத்தானே இனி எத்தனைவிதம் நினைத்தாலும் ஆவதென்ன முடியுங்காரியம் முடிந்தேதீரும் என்பிராணநாயகர் மனதிற்கிசைந்தபடி நங்கைவள்ளியை மணஞ்செயது நாங்களிருவருமொருமனதாயிருக்கின்றோம் ஆகையால் திருப்பரங்குன்றம் போகலாம் வாரும் அத்தானே.

கணபதிசொல்லல்நல்லது அப்படியேபோகலாம்வாராய்தெய்வானையே

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம்தெய்வானை அம்மனும்விநாயகமூர்த்தியும் கழுந் தெயிலிருந்து திருப்பரங்குன்றத்தின் சபையில்வந்து சேர்ந்து பரமசிவன பார்வதியைவந்தனஞ்செய்து யாவர்களுடனுகந்து சுப்பிரமணியருக்கும் வள்ளியம்மனுக்குந் திருக்கலியாணசாதனம் நடத்திற விதம் எ [illegible].

சுப்பிரமணியர்-வள்ளியம்மனை த-திருக்கலியாணஞ்செய்யும்

தரு-இ-ட-கேதாரகௌளம்-ஆதிதாளம்

பல்லவி.

திருக்கலியாணமுடித்தார் கந்தர்வள்ளிக்கும்
திருக்கலியாணமுடித்தார்

அநுபல்லவி.

மருக்கமழ்மலர்கொய்து பெருக்கவிதானஞ்செய்து
மறைவியரத்தோடு முறைமைநடத்திய-திரு

சரணங்கள்.

சந்தனமரக்கால்நாட்டி முன்னேயா
சாணிமணவரையிற்பூட்டி மிகுப்ரகாச
அந்தப்படிமுத்துப டத்தல்லிதம்வருந்து
ஆதனப்பீடமும் பொருந்துமுனிவரித்தர்
இந்திரவிண்ணோர்வேடர் பந்துஜனங்கொண்டாட
இங்கிதமங்கையர் மங்களமும்பாடத்-திரு
சந்தனத்தாற்றரைமெழுகிக் கோலமிட்டுச்
சதிராய்முக்கோணவழகன் ஒளிபொருந்த
வந்தனையாய்க்கணபதியை விளக்குவைத்து
வளரும்பரிதியைக் கும்பம்வைத்து
பந்தனமாகவேதேங் காப்புகட்டுதலைமுப்
பழமுந்தட்சணைவைத்துப் பலவித்துவேடர்குழத்-திரு
சிந்தையகிழ்ந்திடவும் [illegible] செய்சாஸ்திரத்
திறமுடன்கொண்டாடக் களிகூர்ந்து
செந்திருசேர்ந்திடும்வள்ளியும் கந்தசுமியுந்
சேர்ந்துசாலையிலும் ஸ்நானம்பண்ணி
வந்துசெபதபநூல் முறையநுட்டானஞ்செய்து
மணவரைமீதி[illegible] குணத்தேவாமலர்மாரிபெய்து-திரு
[illegible]வந்து முறைப்படி
[illegible]ந்து நன்றுசுட்டித்தமுந்
சாதகபா[illegible] சுபதினத்தில்
சாந்தியுஞ்செய்தருளிந்து அப்போதுபார்த்த
கோதிலாப்பணியணி கோனனும்பலருக்கும்
குலவிடவேயணிந்து சுகமானவள்ளியருக்கும்(திரு)
மிருந்தமதகளமேளம் துத்தாரிகொப்பு
முழங்கிடவேசகதாளம் வாத்யத்தொனியுந்
ஜெகமெங்குநிறைந்திடவே பேரிகைபூரித்
சோவுமுழங்கிடவே அந்தவேளையில்
அகமதுமகிழ்ச்சியா யனைவருங்கொண்டாட
ஆரம்பையூர்வசிமாதர் அன்பாய்மங்களம்பாடி (திரு)

ஈஸ்வரருஞ்சிந்தைகூற — ஈஸ்வரிமகிழ்
தியாவருங்களிற — முனிவர்தேவர்
ஆசீர்வாதங்கள்செய்ய — அட்சதைதூவி
அருந்தவர்மகிழ்ய — பொனாமுடனே
தாசர்க்குதவுங்கந்தர் — தாலியைக்கையெடுத்து
தார்பூண்டமங்கைவள்ளி — தன்கழுத்திற்றரித்து-திரு
அன்னநடையின்மேனகை — திலோத்தமை
ஆலாத்தியெடுக்கிடவு — மாலயன்வாழ்த்த
வன்னவேடுவர்மகிழ — விருப்புறும்
வாணரிருந்துபுகல — அப்போதந்தக்
கன்னிவள்ளியைக்கந்தன் — கைபிடித்தேதாங்கக்
கலியாணமண்டபங் — களிப்புடனேசுற்றிச்சேர்ந்து-திரு

சுப்பிரமணியர்-மணக்கோலங்கொள்ளல்-விருத்தம்.

கைப்பிடித்தமனமகிழ்ந்து வெகுசிங்காரக்கலியாணக்கோலமெல்லாங்கருணையோடு. செப்பியமாலவிளைம்பெறுங் கந்தவேளுந்திரும்பிவந்து மொய்ம்முறைநச்சீர் செய்தபின்பு மெய்ப்பெறு சபபூரணைந்தன் கொண்டேவிமலனும் பார்வதியும்விண்ணோர் இராஜருஞ்சூழ் சுப்பிரமணியர் மயிலேறிப்பவனிக்கார் தோகையர்கள் சோபனங்கள் சொல்லுவாரே.

வ-ம். அதெப்படியென்றால் இப்பப்பிரகாரம் சுப்பிரமணியருக்கும் வள்ளியம்மனுக்குந் திருக்கலியாணமுடிந்து மயில்வாகனரூடராய் மணக்கோலங்கொண்டு பவனிவரும்போது சுற்றிலுநெருங்கிய மங்கலப்பெண்கள் சோபனம்பாடுகிறவிதமெப்படியென்றால்,

சோபனம்பாடுகிற-தரு-இ-ம்-ஆபி-ரூபகதாளம்,

சோபனஞ்ஜெய - சோபனஞ்ஜெய-சோபனஞ்ஜெய — சோபனம்
புஜிவேலாயுதர்மணம்பொருந்தவேமிகச்சோபனம் — சோபனம்
வள்ளிதெய்வானையுடன்வாழ்வுபெறச்சோபனமே — சோபனம்
புள்ளிமயில்வேலர்வள்ளிப்பொருந்தமிகச்சோபனமே — சோபனம்
அவ்வாதெய்வானைவள்ளிஅணைந்திருக்கச்சோபனமே — சோபனம்
இன்னமுடன்முருகனும்வள்ளிசேர்ந்திருக்கச்சோபனமே — சோபனம்

தேவர்கள் - விருந்தருந்துதல் - விருத்தம்.

கந்தரும்வள்ளியும் புகழ்ந்து பவனிவந்து கருணைவாரிதிபொழிந்து [illegible]ம்பெற்றிருக்க, இந்திராதிமாலயன்முனிதேவர்சகலரும் [illegible] யுடனே திருவுளபாசாதமன்னமே, பந்திவைத்துப்படைத்து சர்க்கரை [illegible] முப்பழங்களிலேர்த்துபன்னீரத்தர் சந்தனஞ்சவ்வாது தாம்பூலங் கொண்டுகொடுத்தார்மிகத்தொழுதுபோற்றினரே,

தேவர்களும்-சுப்பிரமணியரும்-வள்ளியம்மனும்.

தங்கள்தலஞ்சேர்தல்-விருத்தம்.

திருக்கழுகாசலந்தனிலேகந்தன்
தெய்வானைவள்ளியுடன்சேர்ந்தகாலில்
உருக்கமுடன்தேவர்கள்யாவர்களுஞ்சேர்ந்து
உடனேதாமவரவர்கள்பதியிற்சேரப்
பெருக்கிமாணிடரிந்தச்சரிதைப்பாடப்
பெருமையுடன்மங்களஞ்சோபனம்பெற்றோங்கத்
திருக்கலியாணச்சிறப்பைக்கேட்டபேர்க்கென்றுஞ்
சித்திறந்துசெல்வமிகச்சேருந்தானே.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் திருப்பரங்குன்றத்தில் மும்மூர்த்திகள் முதல் முப்பத்துமுக்கோடிதேவர்களும்நம்பிராசன் முதலானபேர்களுங் கூடியிருந்து சுப்பிரமணியக்கடவுளுக்குத் திருமணக்கோலஞ்செய்து அவரவர்களிருப்பிடம்போய்ச்சேர்ந்தபின் சுப்பிரமணியரும் வள்ளிதெய்வானை இவர்கள் தங்கள் கழுகாசலம்போய்ச் சேர்ந்து மங்களகரமாயிருக்கின்றார்கள்.

மங்களம்-இ-ம்-டர்துவராளி-ஆதிதாளம்.

மங்களமங்களமே ஜெயசுப
மங்களமங்களமே ஜெயசுப
மங்களமைங்கரன்வல்லபைநாயகிக்கும்
துங்கவள்ளிதெய்வானைசுப்ரமணியருக்கும் மங்களம்
வாமபாகசிவகாமிசோமசுந்தரர்க்கும்
பூமிதேவிமணவாளன்விண்டுவினுக்கும் மங்களம்
முப்பத்துமுக்கோடிமுனிவர்தேவர்புகழ்
ஒப்பிலாதகலைவாணியெனுந்தாய்க்கும் மங்களம்
இன்றுடகந்தனை இன்பமாய்க்கேட்டபேர்க்கும்
வன்மையாயநுதினம்வாசிப்பவர்க்கும் மங்களம்
சீருஞ்சிறப்புமிகச்சேர்கலாசாலையினிற்
சீராயச்சிட்டிந்தசெல்வரனைவர்க்கும் மங்களம்
வள்ளியம்மைநாடகத்தைவாசித்திடுவோர்க்கு
புள்ளிமயிலோன்கிருபைபொருந்திவாழ்வார்தினம் மங்களம்

வாழிவிருத்தம்.

சத்திவடிவேல்வாழிச்சேவல்வாழி தாய்வள்ளிச்சரிதைதனைச்சு தாராய்க்கூறும், முத்துவீரப்பகவிராயன்வாழி *முன் நாலுவண்டாக்குனித் தமிழ்சேர்ந்தோர்வாழி. நித்தியமாய்ப் பூவுலகஞ்செழிக்கவாழி தோகைவள்ளிதெய்வானைசமேதவாழி, வந்துவாழ்கொள்கழுகாசலமும் வாழ்மயில் வாகனகுமாரனிவர்வாழிதானே.

வள்ளியம்மை நாடகம் - முற்றிற்று.